# ஆலயப் பிரவேசம்

MAHAMA...
Dr. U. V. SWAMI...ADHYAYA
...UVANMIY... ATHAIYAR LIBRARY
...UR, MADRAS-41

"தர்மச

சுகாதார முறைகளை அநுசரித்து, மேன்மையான வஸ்துக்களால் தயாரிக்கப்பட்ட

## காட்பரீஸ் போர்ன்விடா




Cadbury's

# BOURN-VI

என்னும் உணவுப்பானத்தை தினந்தோறும் உ
சரீர திடகாத்திரமும் புத்தி தீக்ஷண்யமும் பெற்று, ம
மக்களுக்கும் சேவைபுரிய பின்வாங்க மாட்டார்கள்.

1 அல்லது ½ பவுண்டு டின்களில் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

# ஆலயப்பிரவேசம்

❖

"தர்மசரணன்"

க. மு. பாலசுப்பிரமணிய ஐயர்
:: 10, பிலாத்தோப்பு ::
மைலாப்பூர் :: சென்னை
உரிமை பதிப்புற்றது] 1940 [விலை அணா 6

SHAKTI PRESS LIMITED,
(SHANTI PRESS)
MADRAS.

श्रीः

ॐ

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

अस्मदत्यन्तप्रियशिष्यस्य मैलापूर् वेङ्कटरमण भैषज्यशालोप-मन्दिरनिवासि रामनाथशास्त्रिविषये सर्वाभीष्टसिध्यै क्रियते नारायण-स्मृतिः ॥

देवालयप्रवेशश्चातुर्वर्ण्यभिन्नानामनुचितोऽशास्त्रीयश्चेति निर्णयं, प्रसङ्गात् अधुना लोके प्रचार्यमाणान् अस्पृश्यता निरोध कन्याविवाह निरोधाद्यधर्म नियमान् खण्डयन्, एतद्देशीय सर्वजन सौलभ्यसम्पाद-नाय द्राविडभाषया परस्परसम्भाषणरूपेण विलिख्य मुद्रणं प्रापयित्वा भवाननेनावश्यकृत्येन लोकस्य बहूपकुर्वन् कृतार्थः संवृत्तः इति सुतरां सन्तुष्यामः । एवं धर्मैकशरणो भवान् श्रीचन्द्रमौळीशकृपया श्रेयां-स्यवाप्नुयात् इत्याशास्महे ॥

मकाम् शेम्मङ्गुडि, श्रीशा. शके १८६२.

नारायणस्मृतिः

विक्रम सं ॥ चैत्र, शुद्ध दशमि ॥

# FOREWORD

This is a remarkable work. As the title indicates, it is directed to what was till the other day a burning question in South India...the question of Temple Entry by the Harijans and other excluded classes. But I am unable to persuade myself that if the circumstances and present conditions should change again, as they might at any time, that question will not again become a burning question.

But I do hope and trust and pray that wiser counsel may prevail and that reckless and foolhardy attempt, albeit in the name of patriotism or party to embitter and infuriate orthodox opinion and sentiment will be given a quietus. But who knows?

The talented author has adopted the form of dialogue for the presentation of his work. It was a form in much vogue and even fashion long ago in European countries and also in India. Like every other form, especially of literary composition, it has its limitations and defects but also a charm and merits and advantages peculiar to itself. For one thing when the subject treated is one of controversy, the form of the dialogue serves to help the reader to visualise for himself the heat and dust and also the comic and the tragic of the wordy warfare. It also serves to present to the reader in vividness, in light and shade, the numerous view points possible of being presented on both sides of the question. It is therefore a matter of congradulation that in this production the author has, so to say, given new life to this form of writing...the method, it may here incidentally be remembered, consecrated by its adoption in the Bhagavad Gita and the dialogues of Plato.

It was with great interest that I perused the book or to speak more correctly, heard it read: for, it is only proper that a dialogue should be heard or overheard and not read in writing. The closeness and the cogency of the argument is

very striking and though the author who is by professed predilection and candid confession an orthodox and sanatanist, he has, as it may be seen, maintained the scale of the argument as even as possible leaving or ignoring no aspect whatsoever. In fact it is correct to say that his arguments on both sides are of an almost encyclopaedic character. It is true that the final defeat of the protagonist of temple entry was pre-determined—the author would perhaps say pre-destined. It is not a matter without its own significance and even suggestiveness that the champion of Temble Entry is represented as a Brahmin, and that the protagonist of orthodoxy is represented as a pious Mudaliar.

It is no doubt true that some of the speeches are unduly long and therefore not quite in consonance with its being a dialogue; but at the same time the haranguing on both sides will be appreciated to be quite natural and even characteristic.

The author deserves to be congradulated on having produced such a readable, interesting, and instructive work on the subject. It is with great pleasure therefore I commend this treatise to the close study and appreciation ot all persons interested in the question of Temple Entry, which in its two important aspects of religion and politics was exciting so much public interest only the other day and may yet once again become a battlefield of actual attacks and counter-attacks.

It is also a matter for much gratification that though the main theme of the book is the question of Temple Entry, still in the course of the dialogue, the speeches on both sides abound in the expression of high and noble sentiments and the fundamentals of religious faith.

'Vani Vilas'
P. T. Madras
3rd April 1940.

**V. V. Srinivasan**

# INTRODUCTION

Our author is a devout Hindu and his views on the current topic "The Temple Entry" correctly reflect the orthodox mind on the subject. The Hindu Society has been built on a rocky foundation of natural laws and we see no danger however serious, will be strong enough to torpedo it. The legitimate place of Harijans in public life is no doubt assured by no less an authority than Manu in his verse, viz.,

न तैस्समयमन्विच्छेत् पुरुषोधर्ममाचरन् । (10-53)

meaning, "He shall not associate with them (Harijans) while doing a religious act." But political opportunists raise cross currents in politics leading to endless controversies like "The Aryan versus Dravidian etc., etc.,." Dravida is a name of a province, Aryan the name of a culture and Mlecha that of a non-conformist. These names do not therefore represent different races or cultures as is sought to be made out now-a-days. The only culture native to India nay the whole world even, is Aryan in essence and no stretch of imagination can prove its opposite. The Dravidian literature or culture is not an isolated or independent species, but only a phase of this broad-based All-Indian culture, Aryan. Even it may be called Dravidian, if so desired, but it is only one for India and even the world.

There is only one race from the Cape to the Himaliyas and all else is a myth. The Archæological investigations in the North and North-Western India only reveal material to support an All-Indian culture and civilisation and not the so much advertised and engincered difference of race and culture as Aryan and Drâvidian. Based on such a culture and view of life, is the Chaturvarnya ideal which is also the leading principle of creation, not only of men, but of all beings, even

inanimate objects according to Hinduism. Manu conceived it as a world model and creative principle and its final and finished product "The Brahmin" is held as an world ideal; vide

एतद्देशप्रसूतस्य सकाशादग्रजन्मनः ।

स्वंस्वंचरितं शिक्षेरन् पृथिव्यां सर्वमानवा : ॥ (2-20 Manu)

which means "**All human baings on this earth** shall hold him as their model of conduct, culture and charecter, this man, the eldest brother of his race born in this land India." This ideal is developed in an organic evolution of personalities and physical environments settled as they are on a self-projected charecter acquired by personal merit. No Brahmin imposed this upon a helpless generation nor can anybody successfully do it. It may be that today nobody wants a religious view of life and heuce the difference. So long as the people were religious, no differences arose and today no religion is the best religion and a valued possession with many and we see an unhappy India. If India should regain her place in the world, she must protect her native culture and civilisation and such reminders as this pamphlet may be quite necessary. We will not be surprised if the Harijan will one day feel obliged to protect this culture and relegion from the attacks of unscrupulous critics and interested propagandists. We think and have reasons for it that modern scientific research and further archæological excavations may prove our assumption in its reality. This pamphlet by the way explains the cardinal doctrines of Hinduism and we recommend it to the public which we hope will appreciate the spirit of the author and his earnestness.

Mylapore,
10-4-1940.

**V. S. R. Sastri**

ॐ

# பத்திராதிபர் குறிப்பு

श्रुतिस्मृतिपुराणानामालयं करुणालयं ।
नमामि भगवत्पादशंकरं लोकशंकरम् ॥

சுமார் ஆறுமாத காலங்களாக நம் தென்னிந்தியா வில் எங்கே பார்த்தாலும் பொதுமக்கள் ஆலயப்பிரவேச விஷயத்தைப்பற்றிப் பேசின வண்ணமாக இருக்கிறார் கள். அவர்களுக்குள் எவ்வளவோ அபிப்பிராய பேதங் கள் காணப்படுகின்றன :—

A. (1) நம் தேசத்தின் அடிமைப்பிணியை ஒழிக்கவல்ல நம் தேசமக்களின் ஒற்றுமை ஏற்படவும்,

(2) தங்களுக்குக் கோவில்கள் திறக்கப்படாத தால், ஹரிஜனங்கள் ஸம உரிமையற்ற ஹிந்து மதத்தைத் துறந்து மற்ற மதங்களைத் தழுவுவதைத் தடுத்து, ஹிந்து மதஸ்தர்களின் எண்ணிக்கை பலத்தை அதிகரிக்கவும்,

(3) ஹிந்து மதத்திற்குள்ளேயே சிலர் கீழ்பட்டவர் கள், சிலர் மேல்பட்டவர்கள் என்ற பேதத்தை ஒழிக்க வும்,

(4) முக்யமாக நம் தாய்நாட்டிற்கே அபகீர்த்தி யைக் கொடுக்கிற தீண்டாமைப் பிணியை ஒழிக்கவும்,

(5) கேலிக்கு இடமான ஜாதிபேதக் கட்டுப்பாடு களை நம்தேசத்தில் அடியோடு ஒழித்து, ஹிந்துக்கள் எல்லோரும் மதவிஷயத்தில் ஸம உரிமையை அடையவும்,

இன்னும் பல காரணங்களைக் கொண்டும் பொது மக்கள் ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேசத்தை கட்டாயப் படுத்த முயல்கிறார்கள்.

B. ஆனாலும் சில வாதிகள், பலாத்காரத்தாலோ, ராஜீயச் சட்ட பூர்வமாகவோ இவ் வாலயப்பிரவேசத்தை வற்புறுத்தக் கூடாதென்றும், கல்வி அபிவிருத்தியாலும் விசாலநோக்கத்தாலும் பொதுஜனங்கள் தங்களுக்குள் இவ்விஷயத்தில் ஒரு வித அபிப்பிராயபேதமில்லாமல் ஏகமனதுடன் அநுமதித்தால்தான் இதைச் செய்யலாமென்றும் கருதுகிறார்கள்.

C. மேலும் சிலர், பண்டைய ரீதியாகவே மதாசரணைகள் இருக்க வேண்டுமென்றும், அவைகளில் ஒரு விதச் சீர்திருத்தங்களும் தேவையில்லை என்றும், கூடாது என்றும், இக்கிளர்ச்சிகளை ஆக்ஷேபிக்கிறார்கள்.

இப்படிப் பல வாதிகளில் எவர்களுடைய அபிப்பிராயம் கொள்ளத் தகுந்தது. எவர்களுடைய அபிப்ராயங்கள் தோஷங்கள் கலந்தவை என்பதை விவேகிகள் கவனித்தல் நலம்.

"இகத்திலும் பரத்திலும் ஸௌக்யமடைய ஸாதனங்களைப் புகட்டும் ஸனாதனஹிந்து மதசாஸ்திரங்களிலிஷ்டமுள்ளவர்கள் அவைகளை அநுஷ்டிக்கட்டும். மதத்தின் புதிய சீர்திருத்தங்களை ஆக்ஷேபித்து, அவைகளின் தோஷங்களை யெடுத்துக் காட்டுவது பொருமைக்கே யிருப்பிடமான நம் ஹிந்துமதக் கொள்கைக்கு விரோத" மென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் அது அப்படியல்ல. இவ்விஷயத்தை ஸர்வஞ்ஞரான பகவான் பாஷ்யக்காரர் ப்ரம்ம ஸூத்ரபாஷ்

யவ்யாக்யானத்தில் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதாரம்பத்தில் தெளிவு படுத்தியிருக்கிறார் :—

"तथापि महाजनपरिगृहीतानि महान्ति सम्यग्दर्शनापदेशेन प्रवृत्तान्युपलभ्य भवेत्केषांचिन्मन्दमतीनां एतान्यपि सम्यग्दर्शनायोपादेयानीत्यपेक्षा। तथा युक्तिगाढत्व सम्भवेन श्रद्धाच तेषु। इत्यतः तदसारतोपपादनाय प्रयत्यते।"

தற்காலத்திலுள்ள பெரும்பான்மையான ஹிந்துக்களுக்கு, நம் வேத சாஸ்திரங்களின் உண்மைக் கருத்துக்களை அறிய பேருக்கமிருந்தும், அவைகளை நேரிட அறியக்கூடிய ஸாதனங்களும், ஆற்றலுமின்மையால், அவர்கள் தங்கள் பேராவலால் "உண்மை மதவிளக்க" மென்ற பல பெயர்களுடன் பொதுமக்களின் மதிப்பைப் பெற்று, சீர்திருத்தக்காரர்களால் வெளியிடப்பட்டிருக்கும் சில புத்தகங்களைக் கண்ணுற்று, இவைகளே நமது ஸ்வராஜ்யத்திற்குச் சாதனங்களைப் புகட்டுபவைகள் என்று நிச்சயித்து அவைகளை ஆதரிக்கிறார்கள். அவைகள் லௌகிக யுக்திகளுக்கு அனுகுணமாகத் தோன்றுவதால், அவைகளில் பொது மக்களீடுபடுகிறார்கள். ஆனால், அப்புத்தகங்களோ, சீர்திருத்தங்களுக்குச் சாதகமாகவும், தங்கள் கக்ஷிக்கு அனுகூலமாகவும், எவ்வேத வாக்யங்களும் கீதா வாக்யங்களுமுண்டோ அவைகள் மட்டும் உதாகரிக்கப் பட்டு எழுதப் பட்டவைகள். அவைகள் உண்மையான வ்யாக்யானங்களாகா. அவைகள் போலிவ்யாக்யானங்களேயாகும். ஸ்வராஜ்யத்தை விரும்புகிறவர்கள், ஹிதம்போல் தோன்றும் அவர்களுடைய வலையில் சிக்காமலிருக்க அவர்கள் சொல்லும் யுக்திகளை ஆபாஸங்கள் என்று நிரூபித்துக் காட்டுவது நமது கடமையே. இது த்வேஷமாகாது.

தேசீயத்தில் எல்லோரும் கொண்டாடத் தகுந்த அறிவும் உழைப்பும் அம் மகான்களிடமிருப்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. மத விஷயங்களிலும், முன்னோர்களைவிடத் தாங்களே ஸமர்த்தர்கள் என்று கருதி, தங்களிஷ்டப்படி மத விஷய சீர்திருத்தங்கள் செய்வது, தங்களிடத்திலுள்ள வ்ருதாபிமானத்தையே விளக்குகிறது. அவர்கள் தங்கள் கக்ஷிக்குச் சாதகமாகச் சொல்லும் யுக்திகள் நம்மதத்திற்குப் புதியனவல்ல. ப்ரம்ம ஸூத்ரவ்யாக்யானத்தில் நம்பரமாசார்யாள் இதைக்காட்டிலும் மிகப் பெரிய யுக்திகளுக்கு விடையளித்திருப்பதை நாம் தெரிந்துகொள்ளாத குற்றத்தால், இப்பொழுது மதவிஷய சீர்திருத்தத்தை வற்புறுத்த முன்வரும் தேசபக்தர்கள் பேசும் யுக்திவாதங்களுக்கு நாம் பதிலளிக்க முடியாமல், அவர்களைச் சரணமடைந்து, அவர்களே பூலோகத்தில் மறுபடியு முதித்த ராம கிருஷ்ணாதி அவதாரங்களென்று கருதி அவர்களை உபாஸிக்கிறோம். நம் பரமாசார்யாளைக் காட்டிலும் நமக்கு ஹிதோபதேசகர், மூவ்வுலகிலும் முக்காலத்திலும் வேறு எவருமில்லை என்பது ஸத்யம்.

ஆகவே இவ்வாலயப்பிரவேச விஷயம் நன்கு விசாரிக்கத் தகுந்தது என்று ஏற்படுகிறது. பொதுமக்கள் பக்ஷபாதமின்றி இதை நன்கு ஆராய்ந்து பார்க்க அனுகூலமாக, ஹிந்துமதக் கொள்கைகளையும், முக்யமாக ஆலயப் பிரவேச விஷயத்தைப் பற்றியும் எனது ஆப்த நண்பர்களின் வேண்டுகோளின்படி வினவிடை ரூபமாக எழுதப்பட்ட கட்டுரையை அவர்களின் இஷ்டப்படிப் புத்தகரூபமாக வெளியிடலானேன். கரைபுரண்டு ஓடும் வெள்ளத்தில் ஒரு பாலன் தனிமையாக அக்கரை செல்ல முயல்வதுபோல், எனது இக்கார்யமு மிருக்கிறது என்றுபலர்

கருதலாம். எல்லையற்ற அனாதி ஸம்ஸாரமாகிறப் பெரிய அகாத ஸமுத்திரத்தையே அனயாஸமாகத் தாண்டிவைக்கும் நம் வைதிக ஹிந்துமத ஆசாரணைகளைச் சரணமடைந்தவர்களுக்கு, இவ்வெள்ளம் பசுவின் குளம்படித் தண்ணீராக மாரிவிடும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் எப்படிப் பட்ட ஆபத்துக்களுக்கும் அஞ்ச வேண்டாம். மயங்க வேண்டாம். தர்மம் தலைகாக்கும். நமக்கு ஏற்பட்டிருக்கும் ஸகலப்பிணிகளும், "நம் மததர்மாசரணைகளை நழுவ விடாதீர்கள்" என்று எச்சரிக்கை செய்யவே ஏற்பட்டிருக்கின்றன.

यतो धर्मः ततो जय :—தர்மமிருக்கு மிடத்தில் தான் ஜயமுண்டு.

नेहाभिक्रमनाशोस्ति प्रत्यवायो नविद्यते ।
स्वल्पमप्यस्यधर्मस्य त्रायते महतो भयात् ॥

தர்மம் பூர்ணமாக நம்மால் செய்ய முடியவில்லையென்றால் தர்மத்தையே நழுவ விடவேண்டாம். செய்த வேலைக்குக் கூலி உண்டு. கொஞ்சம் தர்மம் செய்யப்பட்டாலும் அது பெரிய அபாயத்திலிருந்து காப்பாத்துகிறது.

न हि कल्याणकृत्कश्चित् दुर्गतिं तात गच्छति ।

ஸ்வதர்மங்களைச் செய்கிறவன் ஒருநாளும் தீயகதியை அடையமாட்டான்.

இது முதலிய கண்ணன் காட்டிய வழியைக் கவனித்தால், நம்முடைய ஸமஸ்தப் பிணிகளையும் மததர்ம ஆசரணைகளால் விலக்க முடியுமென்று ஏற்படுகிறது.

कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ।

"ஹே அர்ஜுனா! நான் பக்த பாரதீனன், ஸ்வதந்திரனல்ல. பக்தர்களுக்காக என்னுடைய மொழியையும் நான் பொய்யாக்குவேன். ஆனால் எனது பக்தர்களுடைய மொழியை முக்காலத்திலும் நான் ஸத்யமாக்குவேன். ஆதலால் குந்திபுத்ர! "கிருஷ்ணனிடத்தில் பதிந்தமனம் படைத்தவர்களுக்கு எவ்விதக் குறைவும் கிடையாது" என்று எனது பக்த சிகாமணியான நீ ஸத்யம் செய். அது பொய்யாகாது" என்றபகவானின் ஆணையில் நம்பிக்கையுடன், அவருடைய திருப்பாதங்களில் பதிந்த மனதுடன், அவரது கட்டளைகளாகிற ஸ்வதர்மங்களை நிஷ்பலமாகச் செய்தால், நம்முடைய ஸமஸ்த கஷ்டங்களும், பிணிகளும் ஒழிந்து ஆத்ம ஸ்வராஜ்யத்தில் ஆனந்தமாக நாம் வாழலாம் என்பதில் ஆக்ஷேபணையில்லை.

இப்புத்தகத்திற்குத் தங்களுடைய முகவுரையை அருளி இதை அலங்கரித்த சென்னை மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் (ரிடையர்ட்) ப்ரம்மஸ்ரீ, வி. வி ஸ்ரீனிவாஸ ஐயங்கார் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கிறேன்.

நம் வைதிகஹிந்து மதத்தில், மூடனை என்னைத் தடுத்து ஆட்கொண்டு, அத்யாத்ம சாஸ்திரத்தை ருசி காட்டிப் புகட்டி, மந்தமதியான எனக்கு இப்புத்தகத்தை தைர்யமாக எழுதக் கூடிய ஆற்றலை அருளின எனது பரமாசார்யாளான உமயாள்புரம் பண்டித அக்ரேஸனர் ப்ரம்ம ஸ்ரீ வி. எஸ். ராமனாத சாஸ்திரிகளவர்களுடைய திவ்ய ஸ்ரீ பாதங்களில், என் மனதாகிற தடாகத்திலிருந்து உதித்த இப்புத்தக ரூபமான தாமரைப்

புஷ்பத்தை அத்யந்த விநயத்துடன் ஸமர்ப்பிக்கிறேன். இம்மஹான் அனுக்ரஹித்த முகவிளக்கத்தையும் இத்துடன் சேர்த்துள்ளேன். गुरोरनुग्रहेणैव पुमान्पूर्णः प्रजायते என்றபடி, அவருடைய ப்ரஸாதமே என்னுடைய பரம லாபமாகும்.

இப்புத்தகத்தைக் கண்ணுறும் ஆஸ்திகர்கள், இதை முழுமையும் படித்து தோஷங்களைப் புறக்கணித்து, குணங்களை யேற்று, ஹிந்து மதத்தின் ஆழ்ந்த தத்துவங்களை ஆராய்ந்து அறிந்து, ஆண்டவன் அருளுக்குப் பாத்ர பூதர்களாக ஆகவேண்டு மென்பதே என்னுடைய முக்ய கோரிக்கை. அன்பே சிவம்.

न ज्ञायते ममहितं नितरामुपायो
दीनोऽस्मि देवि समयाकरणाक्षमोऽस्मि ।
तत्वामनन्यशरणः शरणं प्रपद्ये
मीनाक्षि विश्वजननीं जननीं ममैव ॥

मन्क्लेशदर्शनपरिद्रवदन्तरङ्ग
हैयङ्गवीनपरिग्राहनिभं जनन्याः ।
अन्तस्तमोपहं अनुस्मरतां जनानां
मन्दस्मितं तव तु मङ्गळमस्तु भूत्यै ॥

नमो भाष्यबृन्दाय भाष्योपदेष्ट्रे
नमो भाष्यकृद्भ्यः नमो भाष्यविद्भ्यः ।
नमो भाष्यबृन्दार्थभूताय भूम्ने
विशुद्धात्मने ब्रह्मणेऽस्मै परस्मै ॥

ओं नमः परमऋषिभ्यः । ओं नमः परमऋषिभ्यः ॥

10, *பிலாத்தோப்பு*
*மைலாப்பூர்*
30-4-40.

*கண்டமங்கலம்*
**மு. பாலசுப்பிரமணிய ஐயர்.**

# விஷய ஸூசிகை:

பக்கம்

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய ஸ்ரீ முகம். .... i

முகவுரை : சென்னை மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் (ரிட்டயர்ட்) பிரம்ம ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்களால் .... ii

முன்னுரை : உமையாள்புரம் சாஸ்த்ரரத்னம் பிரம்ம ஸ்ரீ வி. எஸ். ராமனாத சாஸ்திரிகளவர்களால் vii

பதிப்புரை : .... ix

பஞ்சாக்ஷர முதலியார், ராஜா ஐயர் இவர்களின் விவரம் .... 1

ஹிந்து மதத்தில் ஆபாஸங்கள்போல் தோன்றுபவைகளும் அவைகளின் சீர்திருத்தங்களின் ஆவச்யகதையும் .... 2

மதத்தில் ஆபாஸங்கள்போல் தோன்றுபவைகளை ஆராய்ந்து நிச்சயம் செய்ய எவருக்கு அதிகாரமுண்டு ? .... 5

மதம் என்றால் என்ன ? .... 8

காலத்திற்கேற்க தர்மங்களை மாற்றுவது உசிதமில்லையா ? .... 10

ஹரிஜனங்களை அடிமைகளைப் போல் பாவிப்பதற்கு ஹிந்துமத மாகாணம் ? .... 14

ஹிந்து மதத்தில் ஜாதிபேத விசாரணை .... 15
மதத்தின் ஆவச்யகதையும், தத்வமும் .... 18
ஜாதி நிர்ணயம், பிறப்பாலா அல்லது இஜ் ஜன்மத்தில் செய்யும் கார்யங்களாலா? .... 22
நான்கு வர்ணங்களைத் தவிர பஞ்சமர்கள் என்ற ஜாதி உண்டா? .... 27
ஹிந்துக்கள் எல்லாருக்கும் ஹிந்து மததர்மங்களை அனுஷ்டிக்க ஸமஉரிமை உண்டல்லவா! .... 28
ஜாதிபேதங்கள் மனித வர்க்கங்களைத் தவிர மற்ற தாவரவர்கங்களிலு முண்டு .... 31
கடவுள் ஜீவர்களைப் படைத்தது எவ்விதம்? .... 33
கடவுளுக்குத் தீண்டாமைப் பிணியை நீக்க சக்தியில்லையா? .... 35
புருஷப் பிரயத்னமும், ஜீவர்களின் பூர்வ கர் மாக்களும் .... 37
கடவுளும், அவரது மூர்த்தி உபாஸனையும் .... 40
விக்ரஹ ஆராதனையை எதிர்க்கும் மற்ற மதஸ் தர்களும் ஸகுண மூர்த்தியைத்தான் உபாஸிக் கிறார்கள் .... 42
பஞ்சமர்களும் ஆலயவழிபாடும் .... 45
பகவானின் காருண்ய விசேஷம் .... 46
பகவானுக்கு ப்ரியன் என்றும் த்வேஷி என்றும் உண்டா? ... 49
கோவில்களில் கடவுள் இருக்கிறார் என்பதின் பொருள் .... 50

பகவானுக்குப் பஞ்சமர்களைப் புனிதம் செய்ய சக்தியில்லையா? .... 53

வேதத்திலும் புராண இதிகாசங்களிலும் சண்டாளர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறதா? .... 54

சாஸ்திரங்கள் ஹரிஜனங்களை கோவில்களில் நுழைய அனுமதிக்காவிடிலும் பகவதனுக்ரகம் அவர்களுக்குக் கிட்ட நாமே அவர்களை உள்ளே செல்ல அனுமதிப்போமே! .... 56

கர்ம சண்டாளர்களால் கோவில் தூஷிக்கப் பட்டிருக்கும்போது ஜாதிச் சண்டாளர்களை மட்டும்கோவில்களில் நுழைய ஏன் அனுமதிக்கக் கூடாது? .... 58

ஹரிஜனங்களிலுள்ள ஜீவகாருண்யத்தாலேயாவது அவர்களுக்கு கோவில்களில் நுழைய ஏற்பாடு செய்யலாமே! .... 58

கோவிலிலுள்ள விக்ரஹத்திற்கு ஸமர்ப்பிக்கும், அன்ன ஆகாராதிகளை கடவுள் சாப்பிடாத காரணத்தால், நாட்டின் மக்களுக்கு அவைகளை அளிக்கக் கூடாதா? .... 62

பகவன் ஞமத்தின் மகிமை .... 65

கோவிலிலுள்ள விக்ரகங்களில் கடவுள் விளங்கும் தன்மை .... 68

பஞ்சமர்கள் கோவில்களில் நுழையவேண்டாமென்று கடவுள் சொல்லாததால் கடவுளுக்கு அவர்கள் கோவில்களில் நுழைவது சம்மதந்தானு? 72

ஹிந்துக்களுடைய கோவில்களில் நுழைய, ஹிந்துக்களான பஞ்சமர்களுக்கு உரிமை யில்லையா? .... 73

யதிராஜராமானுஜாசார்யாள் தீண்டாதார்களுக்கு ஆலயப்பிரவேசத்தை அனுமதித்திருக்கிறுரே! 73

ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச அனுமதி யில்லாவிடில், அவர்கள் பிற மதத்தைத் தழுவுவதால் ஹிந்து ஸமூகத்திற்கு நஷ்ட மேற்படுகிறதே! .... 74

பெரும்பான்மையோர் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை வற்புறுத்தும்போது சிறுபான்மையோரும் அத்துடன் ஒத்துழைக்க வேண்டாமா? .... 78

இந்தியாவின் அடிமைப்பிணியின் காரணமும், அதையகற்றி தேச சுதந்தரம் பெறுவதும் .... 81

ஜாதித்வேஷங்களை ஒழிக்க உபாயம் .... 83

ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கு உபாயம் .... 84

பகவத் பக்தியே பரமலாபம் .... 85

மதாசரணைகளே ஸத்யம், ஸாந்தம் அஹிம்ஸைக்கு முக்ய ஸாதனங்கள் .... 88

தேச ஒற்றுமையும் அதை அடைய முறைகளும் .... 89

மங்களம் .... 92

அகில இந்தியா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் அத்யக்ஷர் ராவ் சாகிப் என். நடேசய்யர் (மதுரை) அவர்களின் அபிப்ராய பத்திரம் .... 93

वन्दे हालास्यनगरीं वन्दे हेमाब्जनीमपि ।
वन्दे सुमीन नयनां वन्दे सुन्दरनायकम् ॥

# ஆலயப்பிரவேசம்

தென்றமிழ் நாடெனும் பாண்டிவள நாட்டில் பேராச் சிறப்புடைய மதுரையில் மிக்கவைதிகம் போற்றும் பஞ்சாக்ஷர முதலியார், ஒரு நாள் ஸ்ரீ மீனாட்சி யம்மையாரோடும் பிரியாத சோமசுந்தரக் கடவுளது திருக்கோயிலுக்குச் சென்று திரும்பி இரவு 8 மணிக்குத் தமது வீட்டின் தெரு முற்றத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். அவர் வீட்டு அக்கம் பக்கங்களிலுள்ளவர்கள் அவர் சொல்லும் முறை போல் ஒழுகும் சீலர்கள். இவர்கள் யாவரும் தற்காலம் நடக்கும் சென்னைச் சட்டசபை தேர்தலுக்கு வாக்காளர்கள். இவர்கள் ஓட்டுகளைப் பெற விரும்பியவர் நாடெங்கும் புகழ்பெற்ற ராஜாவையராவர். சுயநல மில்லாதவர். நாட்டினுயர்வே கருதும் தேசாபிமானி. தாய்நாட்டிற்கு ஒரு பெரிய தலைவர். இவர் பஞ்சாக்ஷர முதலியாரைக் காணச்சென்று முதலியாரின் க்ஷேமலாபங்களைப் பேசினார். இவரைப் பார்த்ததும் முதலியாருக்கு மத சித்தாந்தத்தின் அழிவிற்குக் காரணஸ்தர்களுள் ஒருவரைக் கண்டுவிட்

டோமோவென்று கவன்று பின்வருமாறு பேசத் தொடங்கினர்.

பஞ்சாக்ஷர முதலியார் :—அநாதிகாலந் தொட்டு அன்புடன் கையாண்டு வரும் நம் ஹிந்துமதம் சென்ற சில வருஷங்களாகச் சீர்குலைந்து சிதறும் தறுவாயிலிருக்கிறது. அதற்கு ஏதாவது சீர்திருத்தம் செய்து புத்துயிர் அளிக்கப் படாவிடில் பாஷண்டிகளால் பக்ஷிக்கப்பட்டுப் பெயர்கூடத் தெரியாமல் பாரதநாட்டில் பதுங்கிவிடுமோ அது என்று பலருக்குப் புலப்படுகிறது.

ராஜா ஐயர் :—ஆம், உண்மை உரைக்கிறீர். ஹிந்து மதத்தில் சமூக சீர்திருத்தங்கள் உடனே செய்யவேண்டுமென்று சீர்மை வாய்ந்த மகாத்மா காந்தி முதலிய தேசீய வாதிகளும் வற்புறுத்துகிறார்கள்.

ப. மு. :—ஹிந்து மதத்தில் எவ்விதமான சீர்திருத்தங்கள் தேவை என்பதை நன்கு ஆராயவேண்டுமே!

ரா :—தேச முன்னேற்றத்திற்கும் சுகாதார முன்னேற்றத்திற்கும் அனுகூலமாயுள்ள சீர்திருத்தங்கள்தான் செய்யவேண்டுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. இவைகளுக்கு விரோதமாயிருக்கும் நம் மதத்திலுள்ள ஆபாசமான முறைகளை அறவே அகற்றவேண்டும். ஜாதி பேதம், தீண்டாமை முதலிய அக்ரமங்கள் அழிந்தால்தான் இந்தியர்கள் மேல்நாட்டாருடன் கூட நாங்களும் இந்தியர்கள்தான் என்று மார்தட்டலாம். இல்லையேல் இன்னும் கணக்கற்ற வருஷங்கள் அடிமைப் பிணிக்கு ஆளாகி அவஸ்தைப் படவேண்டும்.

ப. மு. :—உங்களுக்கு ஆக்ஷேபணை யில்லையா? அல்லது பரதகண்டத்திலுள்ள எல்லா மக்களுக்குந்தானா?

ரா :—எல்லோருக்குந்தான்.

ப. மு. :—பரதகண்டத்தில் ஹிந்துக்கள் மட்டுமா இருக்கிறார்கள்? கிறிஸ்தவர்கள், முகம்மதியர்கள், ஜைனர்கள், சுயமரியாதைக்காரர்கள் முதலிய வேறு பல மதஸ்தர்களுடைய தேசம் இவ்விந்தியா. அப்படி யிருக்கும்போது ஹிந்துக்களை மட்டும் சீர்திருத்தினால் தேசமுன்னேற்றம் ஏற்படுமா? ஹிந்துக்கள் நம் தேசத்தில் பெரும்பான்மையாக இருப்பதால் அவர்களுடைய மதத்தை மட்டும் சீர்திருத்தினால் போதும் என்கிறீரா? ஹிந்து மதத்தில் ஆபாஸங்கள் இருக்கின்றன என்றீர். பிற மதங்களிலும் குற்றம் ஒன்றுமில்லை என்று தேசீயவாதிகள் நிச்சயமாகச் சொல்ல முடியுமா? தேசீயவாதிகள் பல மதஸ்தர்கள். அவர்கள் எல்லோருக்கும் ஹிந்துமதக் கொள்கைகளும் ஆழ்ந்த தத்துவங்களும் நன்றாகத் தெரியுமா?

ரா :—ஒரு மதஸ்தனுக்குப் பிற மதத்தைப்பற்றிக் கலாசாலைகளில் படித்ததிலிருந்து கொஞ்சம் தெரிந்தேதானிருக்கும். ஆனால் விசேஷமாகப் பிற மதத்தைப் பற்றித் தெரியாது.

ப. மு. :—ஒரு மதத்தின் கொள்கைகளை விசேஷமாகத் தெரிந்தாலல்லவோ அவைகளின் குணகுணங்கள் புலப்படும். குணகுணங்கள் புலப்பட்ட பிறகல்லவோ அசுப குணங்களைப் பிரிக்கமுடியும். தேசீய வாதிகள் எல்லோருக்கும் ஹிந்து மதத்தின் விசேஷ தத்துவங்கள் தெரியாதென்றீர். தேசீயத்தில் ஈடுபட்ட உமக்கும் உம் தோழர்களுக்கும் ஹிந்துமதத்தின் விசேஷ தத்துவங்கள் தெரியுமா?

ரா :—ஏன் எனக்குத் தெரியாது? ஹிந்து மதத்தில் நான் பிறந்தவனல்லவா!

ப. மு. :—மதத்தில் பிறந்தால் மதத்தின் விசேஷ தத்துவங்கள் தெரியுமா? குயவனுக்கு பிறந்ததால் மட்டும் சட்டி பானைகள் செய்ய முடியுமா? அவ் வேலைக்கென்று விசேஷ அறிவு ஏற்பட வேண்டாமா? வைத்தியன் பிள்ளைக்கும் வைத்திய சாஸ்திரங்களில் பயிற்சி இல்லாவிடில் வைத்திய ஞானம் விசேஷமாக ஏற்படுமா? அதுபோல் ஹிந்து மதத்தில் பிறந்தாலும் ஹிந்துமத சாஸ்திரங்களில் விசேஷப் பயிற்சியும் அநுபவமும் இல்லாவிடில் ஹிந்து மதத்தின் விசேஷ தத்துவங்கள் தெரியாதென்பது திண்ணம். தங்களுக்கும் அப்படியேதான். நீங்கள் ஹிந்துமத சாஸ்திரங்களை எந்த குருவிடமிருந்து எத்தனை வருஷங்கள் நியமத்துடன் அப்பியஸித்து அனுஷ்டித்தீர்கள்?

ரா:—நான் ஹிந்து மதத்தைப் பள்ளியில் படித்தது தான். ஒழிந்த காலத்தில் விநோதத்திற்காக பகவத்கீதை, உபநிஷத்துக்கள் முதலிய சில புஸ்தகங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களைப் படிப்பது வழக்கம். மதவிஷயத்தில் பற்றுதல் உண்டேயொழிய ஆழ்ந்த அறிவும் ஆசாரணையும் கிடையாது.

ப. மு. :—ஹிந்துவாகிய உமக்கே ஹிந்து மதத்தின் விசேஷங்கள் தெரியாதென்றால், மற்றுமுள்ள பிற மதஸ்தர்களான தேசீயவாதிகளுக்கு ஹிந்து மதத்தின் வாசனை கூடத்தெரியாது என்று சொல்லவும் வேண்டுமோ? ஒரு மதஸ்தன் பிற மதத்தின் உண்மையான குணங்களைக்கூட அவகுணமாகக் கிரஹிப்பது சகஜம். மேலும் உண்மையாக குணமுள்ளதும் அவகுணம்போல் மேல் தோற்றத்திற்குத் தோன்றும் விஷயங்களைப் பற்றி மனம்போனபடி சொற்பொழிவு நிகழ்த்துவதும் சகஜம்தான். அவர்கள் ஹிந்து மதத்தின் தத்துவங்களைச் சரியாக அறியாததே இதற்குக்

காரணம். இந்த மருந்து இந்த வியாதியை குணப்படுத்துமா இல்லையாவென்பதை அறியவோ, இந்த மருந்தில் தோஷமுண்டா இல்லையா என்பதை நிச்சயம் செய்யவோ எவருக்கு அதிகாரமுண்டு? வைத்திய நிபுணருக்கல்லவா அவ்வதிகாரமுண்டு. நான் பெரிய வக்கீல், அட்வகேட் ஜெனரலிடமிருந்து நற்புகழ்ப் பத்திரம் எனக்கு உண்டு என்று சொல்பவன் மருந்தைப் பரீக்ஷிக்கலாமா? அது முறையா? அப்படித்தான் தேசத்திலும் நடந்து வருகிறதா? வைத்திய சாஸ்திரத்தில் நிபுணனாக அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கெமிகல் பரிசோதகருக்கல்லவா பரீக்ஷைக்கு மருந்தை அனுப்புவது வழக்கம். அதுபோல் ஹிந்து மதத்தில் ஆபாஸங்கள்போல் தோன்றுபவைகளை ஆராய்ந்து நிச்சயம் செய்ய எவருக்கு அதிகாரமுண்டு என்பதை யோசித்தீரா? தம் மதத்தை அறியாத உம்மை போன்றவருக்கோ, பிற மதத்தில் த்வேஷங்கொண்ட மற்ற மதஸ்தர்களான தேசீயவாதிகளுக்கோ சாமர்த்தியமுண்டு என்று சொல்வது, இன்ஜினீயரைக் கூப்பிட்டு, குடல் கோளாறுகளை ஆபரேஷன் செய்யச் சொல்வது போலாகும் என்பதில் ஐயமுண்டோ!

ரா :—எனக்கு மத விஷயங்களில் அதிகமாக அறிவில்லாவிடினும் உலகத்திலேயே தனக்கு ஈடு கிடையாதென்று கியாதி வாய்ந்த மகாத்மா காந்தி முதலியவர்கள் இஷ்டப்பட்டால் அதற்கு யார் பழிசொல்ல முடியும்?

ப. மு. :—ஆம். உலகத்திலுள்ள மற்ற நாட்டினர்களால் நன்கு மதிக்கப்பட்டவர்கள், மதத்தில் சில பாகங்களை ஆபாஸமென்று உரைத்தால் அவை அப்படியேதான் என்றல்லவா மொழிந்தீர். பிற மதங்களிலும் தேசீய விஷயங்களிலுந்தான் அந்நிய நாட்டார்கள் நிபுணர்கள். எந்த

விஷயத்தில் எவனுக்கு சாமர்த்தியமுண்டோ அவ்விஷயத்தில்தான் நற்சாக்ஷி பத்திரம் கொடுக்க அவனுக்கு அதிகாரமுண்டு. அந்நிய நாட்டார்கள் மகாத்மாவுக்கு நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். எதற்காக? அவர் நிபுணர் என்பதற்காக. எவ்விஷயத்தில் நிபுணர்? தங்கள் விஷயத்தில். பிறர் விஷயத்தில் நிபுணர் என்றால் பிறர்கள் அல்லவா பத்திரம் அளிப்பார்கள் என்று முன்னமேயே சொன்னேம். தங்கள் விஷயமென்ன? தேசீயமும் மதாந்திரமும். ஆதலால் அந்நிய நாட்டார்கள் மகாத்மா காந்தி முதலியவர்களை தேசீய இயக்கத்திற்கும், ஹிந்து மதத்தைத் தவிர மற்ற மதங்களிலுள்ள விசேஷ அறிவிற்காகவும் புகழ்கிறார்கள் என்று ஏற்பட்டதே யொழிய இவர்கள் ஹிந்து மதக் கொள்கைகளை நன்கறிந்து கடைபிடித்தவர்கள் என்று ஏற்படவில்லை. அப்படிப்பட்டவர்கள் மதத்தில் சிலவற்றை ஆபாஸங்கள் என்று கிளர்ச்சி செய்வது அக்கிரமம்.

ரா :—மகாத்மா மிகப் படித்தவரே.

ப. மு. :—எதை?

ரா :—மத விஷயத்தைப் படித்தவர்.

ப. மு. :—எவரிடம், எப்பொழுது, எத்தனை காலம் படித்தார்?

ரா :—தானாகவே படித்தார் — 40 வயதிற்குப் பிறகு. ஒழிந்த காலங்களில் பகவத் கீதையின் ஆங்கில மொழி பெயர்ப்பை—சுதந்திரபுத்தி அவசியம் வேண்டும். பிறர் புத்தியை அனுசரிப்பது அழகல்ல. தன் மனச்சாக்ஷி எப்படி சொல்கின்றதோ அப்படியே முடிவு செய்திருக்கிறார். அதுதான் முறையாகும். பிறர் எழுதியிருக்கும் வியாக்யானங்கள் சுயநலத்திற்கல்லவோ எழுதப்பட்டவை!

அவரவர்களுக்கு மனம் எட்டின வரையிலும் முடிவு செய்ய உரிமை யுண்டல்லவா!

ப. மு.:—உரிமை உண்டு என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனாலும் மற்றவர்களும் அவ்விஷயங்களில் எப்படி அபிப் பிராயப்படுகிறார்கள் என்றும் நோக்கி அது முறையாயும், யுக்தமாயுமிருந்தால் அதை ஏற்றுக்கொள்வதுதான் நியாயம். மனது பரிபக்குவத்தை அடைந்தாலல்லவோ ஆழ்ந்த அர்த் தங்கள் விளங்கும். மேலும் பிறர் சொல்லும் அர்த்தத்தைத் தள்ளித் தனக்கு ஏற்படும் அர்த்தம்தான் சரி என்றும் அதுதான் சுதந்திர இயக்கத்திலுள்ள புத்திமான்களின் கொள்கை என்பதும் சரியல்ல. பிறர் சொல்வது யுக்தமா, இல்லையா என்று கவனியாமல் எல்லாவற்றையும் புறக் கணித்தால் இந்த சப்தத்திற்கு இந்த அர்த்தம் என்று பரம் பரையாக வரப்பட்டதையும் தள்ளவேண்டும். பிறகு சப் தத்திற்கு அர்த்தமே தானுகக் கற்பிக்க வேண்டும். அது தான் உண்மையான அர்த்தம் என்றும் சொல்லவேண்டும். ஆனால் அவை உண்மையாகாது. "மனிதன்" என்ற சப்தத்திற்கு "கழுதை" என்ற அர்த்தம் கற்பிக்கக்கூடாதா? ஆனால் அந்த அர்த்தம் உண்மையாகாது. இதுபோல் சுதந்தர மனது படைத்தவர்களுக்கும் அதை அனுசரிப்பவர் களுக்கும் ஒரு வ்யவஸ்தையில்லை. ஆதலால்தான் முன் னோர்கள் "தன் மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்று சொல்லி யிருக்கிறார்கள்.

சுகதுக்கங்களை அறிவதற்குச் சாதகமான இந்திரியம் மனது. அது எல்லா ஜீவர்களுக்குமுண்டு. ஜீவர்களின் வித்யாப்யாஸத்தாலும் சன்மார்க்கானுஷ்டத்தாலும் மனது விசாலத்தையும் தெளிவையுமடைந்து விஷயங்களின் உண்மையைப் பிரித்து அறிய உதவுகிறது. மனதின்

விசேஷ பக்குவத்தை அடைந்தவர்களுக்கு அப்படிப் பக்குவத்தை அடையாத ஜனங்களைக் காட்டிலும் நுட்ப விஷயங்களை நன்கு அறிய ஆற்றல் உண்டு என்று ஒப்புக்கொள்ளவேண்டும். சகஜமாக எல்லோருக்கும் விஷயங்களின் உண்மையை அறிவது சிரம சாத்தியம். விசேஷ அறிவுபடைத்து அநுபவமுள்ள மகான்களின் மொழிகளும் உபதேசங்களும்தான் சரணம். அம்மகான்கள் பரிபூரண பக்குவமடைந்த மனம் படைத்தவர்கள். அவர்கள் ஜீவர்களுடைய அநுக்ரத்திற்காகவே உலகில் உதித்தவர்கள். அவர்களுடைய மொழிகளும் உபதேசங்களும் சிறிதும் விஷமங் கலக்காதவை. அவ்வளவும் அப்படியே அநுஷ்டிக்கத் தகுந்தவை என்ற நம்பிக்கை வேண்டும். இந்த ஆழ்ந்த நம்பிக்கைக்குத்தான் மதம் என்று சொல்வது. பல மதங்களும் பல மகான்களின் முறைகளைத் தழுவி ஏற்பட்டிருக்கின்றன. எவர்களுக்கு எம்மகான்களிடம் தீவிர நம்பிக்கை உண்டோ அவர்கள் அம்மகான்களின் மதஸ்தர்கள். உண்மை வஸ்து ஒன்றுனாலும் அதிலுள்ள சிலசில அம்சங்களை சிலசில மகான்கள் வெளியிட்டவையே சிலசில மதங்களாக இருக்கின்றன.

அப்படியே ஹிந்துக்களுக்கும் தங்கள் மதத்திற்கு மகரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்ட வேதங்களும் அதைத் தழுவி ஏற்பட்ட சாஸ்திரங்களுமே மூலாதாரமானவைகள். அவைகளில் நம்பிக்கை உள்ளவர்களே ஜாதிஹிந்துக்கள். அவைகளின் ஏகதேசத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் ஹிந்துக்களல்ல.

ரா :—வேதாதி சாஸ்திரங்களிலும் சில அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டால் எதைக் கொள்வது ?

ப. மு. :— வேதாதி சாஸ்திரங்களில் அபிப்பிராய பேதமே கிடையாது. ஒரே ரீதியாகத் தொன்றுதொட்டு குரு சிஷ்ய பரம்பரையாகவும், பிதாபுத்ர சந்ததி ரூபமாகவும் தொடர்ச்சியாக வேதசாஸ்திர தர்மங்கள் அநுஷ்டிக்கப்பட்டு இதுகாறும் வந்திருப்பதே, அவைகளில் அபிப்பிராயபேதமில்லை யென்பதற்கு அத்தாக்ஷியாகும். அவைகளை சிரத்தா பக்தியுடன் அநுஷ்டித்து வரும் உத்தமர்களுக்கு ஒருவித அபிப்ராய பேதமும் கிடையாது. அது ராஜவீதி, சந்து பொந்து அற்று நேராகவே பேரின்பத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும் மார்க்கம்.

ஆனாலும் இக்காலத்தில் சிலர் மேல்நாட்டு நவீன நாகரிகத்திலீடுபட்டு துஷ்பாண்டித்யப் பெருக்காலும் துராசரணையாலும் வேதசாஸ்திரங்களில் நம்பிக்கையிழந்து, சன்மார்க்கத்திலிருந்து நழுவியது மட்டுமில்லாமல், காம போகங்களுக்கு அடிமைகளாகிப் பணச் செருக்காலும் வஞ்சனையான வார்த்தைகளால் ருசிகாட்டி, மடக்கப்பட்ட பொது மக்களின் வாக்குகளின் குவியல்களாலும், ராஜீயத்தை எப்படி யதேச்சையாக சுயநலத்தை முன்னிட்டுப் புதிய புதிய சட்டங்களால் மாற்றுகின்றார்களோ, அவ்வண்ணமே சநாதன ஹிந்துமதமும் தங்கள்கையில் அகப்பட்ட தங்கள் தலைமயிர் என்று கருதி, இஷ்டப்படி அதன் முறைகளையும் தர்மங்களையும் சீர்குலைக்கிறார்கள். அப்படி ஹிந்து மதப் பதர்களான இச்சிலர்கள் ஹிந்து மதத்தில் அபிப்பிராய பேதம் கொள்வது சகஜமே. இவர்கள் அபிப்பிராயபேதம் கொள்வதால், ஜாதி ஹிந்துக்களுக்கும் அவ்விஷயங்களில் அபிப்பிராயபேதம் உண்டு என்று சொல்லமுடியாது. ஹிந்து மதத்தின் மூலாதாரமான வேதசாஸ்திரங்களை முழுவதும் நம்பாமல், ராஜீயத்தில் முன்னுக்குவர சுயநலத்தைக்

கோறி ஒரு ஏகதேசத்தை நம்புவதுபோல் காட்டி, போலி வித்வான்களை வசப்படுத்தி, மதத்தில் கிளர்ச்சி செய்யும் பான்மையோர் ஹிந்துக்களல்லவென்று முன்னமேயே சொன்னோம். அவர்கள் வேறுமதஸ்தர்கள். அவர்களை தங்கள் வேறு மதத்திற்கு மூல பூதர்கள். தங்களிஷ்டப் படி தங்கள் மதத்தில் சீர்திருத்தங்கள் செய்யட்டும். ஹிந்துக்களல்லாத அவர்களுக்கு ஹிந்துமதத்தில் அபிப் பிராயபேதமோ ஆபாஸமோ இருக்கிறதென்று மதத்தை மாற்றுவதற்கு அதிகாரமில்லை. முகம்மதிய மதத்திலுள்ள அபிப்பிராய பேதங்களை ஒரு கிறிஸ்தவன் அகற்ற முயல் வது நியாயமல்ல.

ரா :—தேசமுன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஸாதகமாக அந்தந்த காலத்திற் கேற்க தர்மானுஷ்டானங்களை மாற்றுவதும் உசிதம் தானே!

ப. மு. :—இதைச் சற்று விசாரிப்போம்! தர்மம் என்றால் என்ன? ஸ்வபாவம் என்று பொருள். அக்னி யின் தர்மம் உஷ்ணம். அப்படியே மண்ணின் தர்மம் கந்தம். அக்னி ஆயிரம் வருஷங்களுக்கு முன் சுட்டது. இப் பொழுது சுடவில்லை என்று சொல்லலாமா? ஒரு வஸ்து வின் குணம் மாறுமேயாகில் அது அவ்வஸ்துவின் தர்ம மல்ல. தர்மம் என்றும் அது மாறுகின்றது என்றும் சொல் வது பிதற்றலாகும். தங்கம்கூடச் சரியாகச் சுத்தம் செய்து காப்பாற்றப் படாவிடில் அநேக ஆண்டுகளுக்குப் பிறகு பித்தளைபோல் தோன்றினாலும் தங்கத்தின் தர்மமான ஒளி தற்போது அழுக்கால் மறைக்கப் பட்டிருக்கிறதே யொழிய, தங்கத்தைவிட்டு ஒளி சென்றது என்று சொல் வது சரியல்ல. ஒளியை மறைக்கும் அழுக்கை நீக்கினால்

ஸ்பாவமான ஒளி தானே ஸித்தமாக விளங்குகிறது. அப்படி அழுக்கை யெடுத்து உண்மை ஸ்பாவத்தை விளக்க முயற்சிக்காமல் தங்கம் கறுத்து பித்தளையின் தர்மத்தைப் போல் விளங்குவதால், பித்தளையைப்போல் பட்டைசெய்து காலால் மிதிக்க வாசலில் போடவேண்டுமென்று சொல்வது சரியா? இதுபோலவே தர்மங்களை காலத்திற்கேற்க மாற்றவேண்டு மென்பவர்களுடைய விவேகமும் ஆகும். சமூகத்தில் மதப்பற்றற்று, சத்வகுணம் குன்றி, மேல்நாட்டு சுயேச்சா நடையுடை பாவனைகளாலும், துர்மந்திரிகளின் போதனைகளாலும், சன்மார்க்கம் சத்வித்தை இவைகளைப் புறக்கணித்ததாலும், சாதுக்களுடன் பழகாததாலும், ரஜஸ்தமோகுணங்கள் மேலிட்டு, துர்புத்தி, துராசை, துர்நடத்தை, துஸ்ஸங்கம், துர்வாதம் முதலிய துர்க்குணங்களால் மனது நிரம்பியிருக்கிறது. இந்த ஆஸுர சம்பத்துடன் கூடிய மனதை முன்போல் தெய்வீக சம்பத்துடன் சேர்த்தாலல்லவோ மனதிற்கு நிம்மதியேற்படும்.

தர்மம், அதர்மம், மிச்ரம் என்று மூன்று உண்டு. தர்மம் அதர்மம் இந்த இரண்டும் சேர்ந்ததுதான் மிச்ரம். தர்மத்தை மாற்றுவதென்றால் அதர்மம்தான். சாஸ்திராசார்ய சேவைகளால் மறுபடியும் மனதின் மலத்தை ஒழித்து சத்வகுணப் பெருக்கை அடைவதே விவேகிகளின் கார்யம். அதற்கு எதிரிடையாக தர்மத்தை மாற்றி அதர்மத்தில் ப்ரவிருத்திப்பது அசுரர்களின் தன்மை.

ரா :—ஹிந்துமதத்தில் தீண்டாமை என்பது பெரிய அபகீர்த்தியைக் கொடுக்கின்றது மேல்நாட்டார்களுடன் நாங்கள் ஒரு மதம், நாங்களும் பொறுப்புள்ளவர்கள் என்று சொல்லும் சமயத்தில் இது ஒரு இடைஞ்சலாக

வல்லவா இருக்கிறது. மனுஷ்யர்களில் சிலர் மேலானவர்கள் சிலர் தாழ்ந்தவர்கள் என்பது ஜனங்களின் சுதந்திர உரிமைக்குத் தடையல்லவா! நாமே நம்முடைய சகோதரர்களில் ஒரு சார்பாருக்கு நாம் அனுபவிக்கும் சுதந்திரங்கூடக் கொடுக்காமலிருக்கும்போது, நமக்கு மேல்நாட்டாரிடமிருந்து எப்படிச் சுதந்திரம் கிடைக்கும்? நாம் நமக்குள் சீர்திருத்திக் கொள்ளவேண்டாமா? தீண்டாமையையொழித்து நமக்குள் ஜாதிபேதத்தையும் தீர்த்து ஜாதி ஹிந்துக்கள் நாங்கள் எல்லாரும் ஒன்று, என்று ஏகோபித்துச் சொல்வது என்றைக்கோ, அந்நாளே நமது சுதந்திர தினமாகும்.

ப. மு. :—நீங்கள் சொல்வது கேட்க அதிரமணீயமாயிருக்கிறது. இதைத்தான் கீதை இரண்டாவது அத்தியாயத்திலும் பகவான் கீதாசார்யன் ப்ரஞாவாதம் என்று கண்டித்திருப்பதைச் சற்றுக் கவனிக்கவேண்டும். கீதையில் அதிக விச்வாஸமுள்ளவர்கள் நீரும் உமது தோழர்களும். அர்ஜுனன் யுத்தகாலத்தில் பந்துவர்க்கங்களைக் கொன்று பாபிகளை ஒழிக்கவல்ல தர்மமான யுத்தத்தைவிட்டு, பிச்சை எடுக்கும் பரதர்மத்தை ஸ்வீகரிக்குங்கால், தன் அதர்ம ஸ்வீகாரத்தையும் தர்ம த்யாகத்தையும் எடுத்து கீதை முதல் அத்தியாயத்தில் சொல்லுங்கால், அதிரமணீயமாகத்தானிருந்தது. அர்ஜுனன் சொன்னது சரி என்றேதான் மற்ற அத்தியாயங்களைப் படிக்காதவர்களுக்குப் புலப்படும். ஆனல் பகவான் அவனுடைய பரதர்ம சேவையிலுள்ள ஆவேசத்தையும், ஸ்வதர்ம த்யாகத்தையும் கண்டித்து, சுருதி, யுக்தி அனுபவங்களால், கீதையில் மற்ற 17 அத்தியாயங்களாலும் அவனைச் சமாதானம் செய்திருக்கிருர். அதுபோலவே உம்முடையதுமாகும். உமது தோழர்களின்

ஸ்வதர்ம த்யாகமும் பரதர்ம ஸ்வீகாரமும் கண்டிக்கத் தகுந்தவையே.

ரா :—ஹிந்துக்களில் ஜாதிப் பிளவு ஆபாஸமல்லவா?

ப. மு :—ஆபாஸமென்றும் நல்லதென்றும் யார் விவேகிப்பது? நீங்களா? உங்கள் தோழர்களா? அல்லது மற்றவர்கள் யாராவதா?

ரா :—உலகத்தை ஒட்டி நடக்கவேண்டாமா? பொது அறிவு படைத்த எல்லோருக்குமே இத்தீண்டாமை ஹிந்து மதத்திற்கு ஒரு பிளவு என்று தோன்ருதா?

ப. மு. :—எல்லோருக்கு மப்படித் தோன்றினல் எங்கள் சிலருக்கு அப்படித் தோன்றவில்லையே! இதற்கு முன் எத்தனையோ ஆயிரக்கணக்கான காலங்களிலிருந்த மஹான்கள், பக்தர்கள், ஞானிகள், யோகிகள், மகா ராஜாக்கள், மகாமேதாவிகளான மந்திரிமார்கள், பரமேச்வரனை நேரே கண்டுகளித்த நாயன்மார்கள், ஸர்வஞ்ஞரான பாஷ்யக்காரர்கள், உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் சக்திவாய்ந்த மஹரிஷிகள் இவர்கள் கூட அத்தீண்டாமை விஷயத்தில் ஆபாஸத்தைக் கண்டார்களல்ல. அவர்களுடைய விவேகம், தர்மம், பக்தி, அனுபவம், மேலான நோக்கம், சமபுத்தி இவைகளுக்கீடு இக்காலத்திலுள்ள எந்த மகாத்மாவுக்கும் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லை. அவர்களுக்கு எது ஆபாஸமென்று புலப்பட்டதோ அது உமக்கும் உமது தோழர்களுக்கும் ஆனந்தமான ஒழுக்கமாக விருக்கிறது.

ரா :—நீர் சொல்வது சரி. இருந்தாலும் ஒரு ஜாதியிலுள்ள சில ஜனங்களின் உரிமையை யிழக்கச் செய்வது

அன்யாயமல்லவா! அவர்களை அடிமைகளைப் போல் பாவிப்பது தவறல்லவா!

ப. மு. :—அவர்களை அடிமைகளைப்போல் பாவிப்பது மகாபாதகந்தான். அறியாமையாலும் பணத்தின் அகந்தையாலும் சிலர் தங்களுடைய வேலைக்காரர்களை அடிமைகளாகப் பாவிக்கிறார்கள். இது உலகத்தில் எந்நாட்டிலும் காணப்படுகிறது. ஹரிஜனங்களைமட்டும் அப்படி அடிமைப்படுத்தவில்லை. மற்ற எந்த மேற்பட்ட ஜாதியென்று கூறும் மக்களையும் யஜமானர்கள் அடிமைகளைப்போல்தான் நடத்துகிறார்கள். அதற்கு ஹிந்து மதமா காரணம்? பணக்கொழுப்பல்லவா சிலரை தாழ்த்துவதற்கும் அடிமைகளைப்போல் நடத்துவதற்கும் முக்கிய காரணம். மதத்தின் உண்மையை அறியாத மூடர்களின் காரியமே இது. உலகத்தில் காமத்தாலும் குரோதத்தாலும் சிலர் தாய் தந்தையர்களையும் ஹிம்ஸிக்கிறார்கள். மதத்தைப் புறக்கணிக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையான விவேகமும் மதத்தின் ஆழ்ந்த நோக்கமும் இல்லாமலிருப்பதே அவர்களின் நடத்தைக்குக் காரணம். மதத்தில் ஆபாஸமில்லை. அஹிம்ஸை யல்லவோ மதத்தின் சம்மதம். ஹிம்ஸை நிந்திக்கத் தகுந்தது. எளியோர்களை ஆதரிப்பதுதான் விவேகிகளின் கடமை. அப்படியில்லாமல் வித்வேஷங் காட்டி அகந்தைகொள்வது மகா பாபமல்லவா?

ரா :—ஹிந்து மதத்தில் ஜாதி பேதங்களைக் கற்பித்து பிராமணர்களென்றும் க்ஷத்திரியர்களென்றும், மற்றவர்களென்றும் பிரிக்கப்பட்டிருப்பது நியாயமா?

ப. மு. :—ஜாதி பேதத்தை ஜனங்கள் கற்பித்தார்களா அல்லது பகவான் நியமித்தாரா? உமக்கும் உம் தோழர்களுக்கும் சம்மதமான பகவத்கீதையில் நாலாவது அத்தியா

யத்தில் பகவான் சொல்வதை மறந்தீர்களா—" அந்தந்த ஜீவர்களின் குணகர்ம பேதத்தை அனுசரித்து அவரவர்களை அந்தந்த ஜாதியில் பிறப்பிக்கிறேன் " என்று பகவான் சொல்கிறார். ஆதலால் ஜாதிபேதம் ஈச்வரசிருஷ்டியே அல்லாது மனுஷ்யர்களால் கற்பிக்கப்பட்டதல்ல. ஜாதிபேதம் மனுஷ்யர்களாலேற்படுத்தப்பட்டதென்று சொல்கிறவர்கள் ஹிந்து மதத்திற்கு மூலபூதமான சாஸ்திரங்களையும் கீதையையும் நம்பாதவர்களே. எம்மதத்தின் மூலபிரமாணத்தை நம்பாதவர்களும் அம்மதத்தைச் சேர்ந்தவர்களல்ல என்ற நியமத்தால் ஜாதிபேதம் மனிதர்களால் கற்பிக்கப்பட்டதென்று சொல்கிறவர்கள் ஹிந்துக்களல்ல.

ரா :—மற்ற தேசங்களில் இச்சாதிபேதங்களில்லையே! அங்குள்ளவர்கள் சுகமாக வாழவில்லையா?

ப. மு. :—மற்ற தேசங்களில் எல்லாரும் ஸமமாகவா இருக்கிறார்கள்? ஒருவித ஏற்றத்தாழ்வு என்பது இல்லையா?

ரா :—ஜாதியால் ஏற்பட்ட பேதமில்லை.

ப. மு. :—மற்ற பேதங்களிருக்கின்றனவென்று சொல்கிறீர். குடிகள், அரசன், மந்திரிகள், வேலைக்காரர்கள் என்ற பேதம் எல்லா தேசங்களிலும் உண்டு. அந்த பேதத்திற்காக நீங்கள் கோபிக்கவில்லை. " ஜாதி " என்ற சப்தத்தில் உமக்கும், உமது தோழர்களுக்கும் அதிக துராக்ரஹம். மதத்தின் உண்மை தெரியாததாலல்லவா?

ரா :—ஆம்.

ப. மு. :—அதிக வருத்தமாயிருக்கிறது. மற்ற தேசங்களுக்கில்லாது நம்மதத்திற்கு மட்டும் ஜாதி தர்மங்கள் என்ற வ்யவஸ்தை கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதனுல் ஹிந்து ஸமூகத்திற்கு த்ருஷ்டமாயும் அத்ருஷ்டமாயும் ஏற்படும் லாபங்கள் வேறு எந்த மதங்களாலு மடையமுடியாது.

ஜாதிபேதம் வேண்டாமென்ருலும் ஜனங்கள் தங்களுக்குள்ளேயே பேதங்களை உண்டுபண்ணி ஜன சமூகத்தில் புகுத்தாவிடில் லோக வ்யவஹாரமே நடக்கப்பட மாட்டாதென்பது திண்ணம். லோக வ்யவஹாரம் நடக்க வியாபாரம், ராஜீயம், பொருளாதாரம், சுகாதாரம், தேசக்காப்பு, பல்வேறு தொழில்கள், விவசாயம் முதலிய சாஸ்திரங்களின் அறிவும், அவ்வறிஞர்கள் சொல்படி நடத்தையும் அவசியம் வேண்டும். அவ்விதமே நாட்டிலும் அந்தந்த அறிஞர்கள் சொல்படி அரசர்களும் சட்டங்களை ஏற்படுத்தி ஜன சமூகத்தைக் கட்டுப்பாடு செய்கிருர்கள். அதாவது சுகாதார முறை, தேசக் காப்பு முதலியவைகளுக்குத் தக்கபடி சில ஜனங்களை சில இடங்களில் செல்லக்கூடாது என்றும் சிலர்தான் செல்லலாம் என்றும் வித்தியாசம் காட்டுவது எத்தேசத்திலும் நடந்து வருகிறது. அவ்வித்தியாசத்தை ஜனங்கள் ஆபாஸமாகக் கருதவில்லை. ஜனங்களால் கற்பிக்கப்பட்ட வித்தியாசத்தைக் காட்டிலும் கடவுளால் ஜனங்களின் மனோவாஸனைக்குத் தக்கபடி பிரிக்கப்பட்ட ஜாதிபேதங்கள் மிக்க பொருத்தமானவைகளே. இதே இயற்கையாக ஏற்படும் பேதம். செயற்கை பேதத்தைக் காட்டிலும் இயற்கை பேதமே புத்திமான்களால் அங்கீகரிக்கத் தகுந்தது.

மேலும் உலக சரித்திரத்தைச் சற்று கவனித்தாலும் இச் சாதி பேதத்தை எவ்வளவோ சுயநலக்காரர்கள் அழிக்க முயன்றும் அது அழிபடாமலிருப்பதே ஜாதி பேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்பது நன்கு

புலப்படும். ராஜாராம் மோஹன்ராய், அனிபெஸண்டு முதலியவர்கள் எவ்வளவு சிரமப்பட்டும் இச்சாதிக் கட்டுப் பாட்டைக் குலைக்க முடியவில்லை. இதைக் குலைப் பதால் ஒருவித லாபமும், ஹிந்து சமூகத்திற்கில்லாத துடன் அனர்த்தமும் ஏற்படுகிறது. மேலும் வியாதி யுடன் கூடினவன் மற்ற ஆரோக்கியமாயுள்ளவனுடன் சேரக்கூடாது என்ற சுகாதார முறையை அனுசரிப்ப தால் இருவருக்கும் தேக ஆரோக்கியமேற்படும். இது பக்ஷபாதமாகாது. அப்படியில்லாமல் வியாதியுடன் கூடி னவனும் ஆரோக்கியத்துட னிருப்பவனும் சுகாதாரத்தின் படி நடக்காமல் ஸமதர்மத்தை ஒட்டி இருவரும் கூடியிருந் தால் அது மற்றவனையும் வியாதியில் கொண்டுவந்து விடும். தான் மற்றவனைக் காப்பாற்றினால் மற்றவனும் தன்னைக் காப்பாற்றுவான். அதுபோலவே ஜாதிபேதத்தால் ஒரு வரையொருவர் தொடாமலும் ஸமபந்தி போஜனம் செய்யா மலுமிருந்தால் எல்லோருக்கும் சௌக்கியமேற்படுகிறது. மேல் தோற்றத்தில் மனிதர்களில் பேதம் புலப்படாவிடினும் மதத்தில் நம்பிக்கையுள்ள ஹிந்துக்கள், மனிதர்களின் மனோ னிஷ்டமான பேதத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தந்த வேலைகளில் அந்தந்த ஜாதியார் மற்ற ஜாதியிடம் மரியாதை யாகவும், கௌரவமாகவும் நடந்தால்தான் தங்களுக்கும் கௌரவமேற்படும். இது உலக வழக்கமே.

மேலும் ஜாதிதர்மங்களை அனுஷ்டிப்பதால், தங்கள் வேலையில் சாமர்த்திய மேற்படுவதுடன் வேலையில்லாத் திண் டாட்டமும் ஜனசமூகத்தினிடையே ஏற்படாமல் தடுக்கப் படுகிறது. முக்கியமாக இக்காலத்திலுள்ள எந்த சாஸ்திர நிபுணர்களும் முன் காலத்திலுள்ள நிபுணர்களின் சாமர்த் தியத்தை அடைகிறார்களில்லை. இதற்குக் காரணம் இக்

காலத்தில் ஜனங்கள் தங்கள் இயற்கையான ஜாதித் தொழிலைக் கைவிட்டு பிற ஜாதித் தொழிலை ஸ்வீகரிப்பதாலேயே. ஒரு ஜாதிக் கட்டுப்பாடு இல்லாததால் தன் ஜாதித் தொழிலை ஆதரிக்காததாலும், எல்லாத் தொழில்களிலும் அதிகமாக எல்லா ஜனங்களும் செல்வதாலும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்பட்டு ஸமூகம் பிழைப்பதற்குக் கஷ்டப்படுகிறது.

லோகத்திலுள்ள போக செளக்கியங்களில் மட்டும் தாத்பர்யமுள்ள ஜனங்களுக்கு மதம் வேண்டாம். வேத சாஸ்திரங்களும் வேண்டாம். நாற்கால் பிராணிகள் விஷய போகங்களை அனுபவிக்கவில்லையா? எம்மதத்தை அவைகள் அனுசரிக்கின்றன? அவைகள் ஒரு வித பணச் சிலவில்லாமல் விஷய போகங்களைச் சேவிக்கின்றன. மனிதனுக்கும் அப்படி விஷய போகங்களில்தான் தாத்பர்யமிருந்தால் அவனுக்கும் மிருகத்திற்கும் வேற்றுமை யுண்டோ? மற்ற ஜந்துக்களுக்குக் கொடுக்கப்படாத விவேகமென்ற சொத்தைக் கடவுள் மனிதர்களுக்குக் கொடுத்திருந்தும் அந்த விவேகதனத்தை துர்விநியோகப்படுத்திப் பாமரர்களாக அழிகிறார்கள். சிலர் அந்த விவேகத்தை நன்றாய் உபயோகித்து இவ் விஷய போகங்களால் பூர்ண செளக்கியம் அடையமுடியாதென்று நிச்சயம்செய்து மஹரிஷிகளால் கண்டு அனுபவிக்கப்பட்ட மதசாஸ்திர சேவையால்தான் பேரின்பம் கிடைக்கும் என்று உணர்ந்து அதை அடைய த்ருஷ்டமான விஷய போகங்களைவிட்டு, மதாசரணையால் அத்ருஷ்டமான செளக்கியத்தை அடைகிறார்கள். எல்லா ஜீவர்களுக்கும் விஷயகாமனை உண்டு. அர்த்தத்தாலும் (பணத்தால்) த்ருஷ்டமான விஷயகாமனைகளையே அடைந்தால் மனிதனும் மிருகமும் ஸமம் என்று சொன்னோம்.

அர்த்தத்தால் அத்ருஷ்டமான தர்மங்களைச் சம்பாதித்து அதனால் நித்யானந்தத்தை அடைய முயல்வதால்தான் மிருகத்தைக் காட்டிலும் மனிதன் மேல். மேல் கீழ் என்பதெல்லாம் மனதின் நோக்கத்தால்தான், வஸ்துவில் இல்லை. ஒருவன்மேல் மற்றவன்கீழ் என்பது கிடையாது. ஒரு வஸ்துவில் தனக்கு இதனால் சுகமுண்டு என்ற எண்ணம் தோன்றின உடன் அவ்வஸ்துமேல். எவ்வஸ்து தனக்குச் சுகத்திற்குக் காரணமில்லை என்று கருதப்படுகிறதோ அவ்வஸ்து கீழ்ப்பட்டது. அதுபோலவேதான் மிருகத்தைக் காட்டிலும் மனிதன்மேல் என்ற இடத்திலும், சாமான்ய லோகபுத்தியால் உயர்வு தாழ்வு சொல்லப்படவில்லை. அத்ருஷ்டமான தர்மங்களைக் கூறும் மதத்தில் ஒரு பிரிய புத்தி ஏற்பட்டு, இது நம்மை பேரின்பத்தில் சேர்க்கும் என்ற எண்ணமுடையவர்களின் புத்தியால்தான் உயர்வு தாழ்வு சொல்லப்படுகிறது. இதுபோலவேதான் மதபுத்தியால் (சாஸ்த்ர புத்தியால்) ஜாதிபேதங்களால் ஏற்றத் தாழ்வு சொல்லப்படுகின்றனவே ஒழிய லோக புத்தியாலல்ல. மதப்பற்றுதலற்று விஷய சேவையிலீடுபட்ட ஜனங்கள் ஒருவித ஜாதிபேதமின்றி காபி ஹோட்டல் முதலிய விடங்களில் ஸமபங்தி போஜனம் செய்யவில்லையா? பொடிப் பைத்தியம் பிடித்தவர்களும் பேதமின்றி எல்லாரிடமும் பொடி யாசிப்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மதப்பற்றற்றவர்களுக்கு ஜாதிபேதமே கிடையாது. ஆதலால் ஜாதிபேதத்தை வெறுத்து அதை ஒழிக்க முயல்கிறவர்கள் வஞ்சனையாக மதத்தையே ஒழிக்கும் ஹிந்து மதப்பதர்களே. பிரத்யக்ஷ அனுமானாதி பிரமாணங்களால் அறிய முடியாததை அறிவிப்பதால், நம் மதத்திற்கு ப்ராமாண்யம் ஏற்பட்டிருப்பதால், மத விஷயங்களில் சில ஆசரணைகள் லோகபுத்தியாகப் பிரத்யக்ஷத்திற்கு

விரோதம்போல் தோன்றினாலும் அவை அப்படி ஆகா. பிரத்யக்ஷத்திற்கெட்டாத ஒரு மதவிஷயத்தைப் பிரத்யக்ஷத்தால் எப்படி நல்லது அல்லது கெடுதல் என்று விவேகிக்க முடியும்? ஆகையால் லோக விஷயங்களிலீடுபட்டு மதவிஷய தத்துவங்களை அறியாதவர்கள், மதத்தில் ஒருவித அபிப்பிராயம் சொல்வது பிறவிக் குருடன் ராஜவிழியைப் பழி சொல்வது போலாகும்.

ரா:—மதம் அத்ருஷ்டத்தைத் தான் சொல்லுகிறது என்றால் லோக விஷயங்களிலீடுபட்ட ஜனங்களுக்கு மதத்தால் லாபமே இல்லை என்றல்லவா ஏற்படுகிறது!

ப. மு.:—நான் அப்படிச் சொல்லவில்லை. மதத்தால்தான் எல்லோருக்கும் பரமலாபம். மதத்தைக் கைவிட்டதால்தான் பரமநஷ்டம். ஒட்டு மாமரம் நட்டதின் பரம தாத்பர்யம் நல்ல ருசியுள்ள ஒட்டு மாங்கனிகளை அளிக்கத்தான் என்பதால் அம்மரம் வெய்யிலுக்கு நிழலைக் கொடுக்காதென்றோ, வனத்திற்கு அழகைக் கொடுக்காதென்றோ சொன்னதாக ஆகாது. அதுபோலவே மதவிஷயத்திலும். நிழல் வேண்டுமென்றோ வனத்திற்கு அழகு வேண்டுமென்றோ மாமரத்தை நடவேண்டாம். நெட்டிலிங்க மரமும் மற்ற எந்த மரமும் அவைகளை அளிக்கும். ஆனால் இம்மாமரம்தான் அந்த ருசிகரமான ஒட்டு மாங்கனியை கொடுக்குமாதலால் இக்கனியில் அம்மரத்திற்குத் தாத்பர்யம். அதுபோலவே த்ருஷ்டமான போகங்களையும் மத தர்மங்கள் கொடுத்தாலும் அத்ருஷ்டமான பேரின்பத்தில்தான் மதத்தின் தாத்பர்யம் என்பது பொருத்தமே.

ரா:—பேரின்பத்தில் இஷ்டமில்லாதவர்களுக்கு மதம் வேண்டாமே!

ப. மு. :—பேரின்பத்தில் இஷ்டம் இல்லாத ஜீவன் உலகத்திலேயே கிடையாது. யாரும் வேண்டாமென்று சொல்லாதது பேரின்பமல்லவா! அப்பேரின்பம் எது என்றும் அதை எப்படி அடைவது என்பதிலும்தான் அபிப் பிராயபேதம். எல்லா விஷய சுகத்தையும் ஜனங்கள் பேரின் பமாகக் கருதி அதை அடைய முயல்கிறார்கள். அப்பொழுது தான் மதம் அவர்களுக்குப் பேருதவி செய்கிறது. சுக விசேஷத்தையும் சுகவிசேஷ சாதனத்தையும் மதசாஸ்திரங் கள் புகட்டுகின்றன. மததர்மங்களை அனுஷ்டிக்கிறவர்கள் தங்களுக்கு வேண்டின சுகவிசேஷத்தை அடைகிறார்கள். பேரின்பம் வேண்டியவர்களுக்குப் பேரின்பமும் கிடைக் கிறது. மதசாஸ்திரங்கள் காமதேனுவுக்குச் சமம். அதை அண்டினவர்களுடைய கோரிக்கைகளை அடைய ஸாதனங் களைப் புகட்டுகின்றன. ஆதலால் மதத்தின் தத்துவங்களை சரிவரத் தெரிந்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு ஹிந்து வின் கடமையாகும். அப்பொழுதுதான் ஜாதிபேதக் கிளர்ச்சி முதலியவைகள் ஒழியும்.

ரா :—ஜாதிபேதம் ஜனங்களின் குணகர்மபேதத்தால் ஏற்படுகிறதென்று சொல்வதால், வைசியனாயினும் வேத சாஸ்திரங்களைப் படித்து குருவாக நின்று சிஷ்யர் களுக்கு வேதபாடம் சொல்லிக்கொடுத்தால், அவனே பிராம்மணகர்மாவைச் செய்வதால் பிராமணனாகிறான் என்று ஏன் சொல்லக்கூடாது? பிறவியால்தான் ஜாதி என்று ஏன் சொல்லவேண்டும்?

ப. மு. :—உங்களைச் சொல்லக்கூடாது என்று யார் தடுப்பது? வாக்குரிமை யாருக்குமுண்டு. உங்களுடைய மதத்தில் அப்படிக்கொள்ளும். ஆனால் சநாதன ஹிந்து மதத் தில் அப்படியில்லை. நமக்கு மனச்சாக்ஷி பிரமாணமாகாது.

"तस्मात् शास्त्रं प्रमाणं ते" என்ற உம்முடைய கீதையின் ஸ்லோகார்த்தத்தைச் சற்று கவனியும். சாஸ்த்ரம் சொல்வதுதான் பிரமாணம். "चातुर्वर्ण्यं मया सृष्टं" என்று சொல்லியிருப்பதைக் கவனியும். ஸ்ருஷ்டம் என்றால் "படைக்கப் பட்டது" என்று, சென்றகாலச் செயப்பாட்டு வினையெச்சமாகும். நிகழ்காலமல்ல, எதிர்காலமுமல்ல. மேலும் "குண கர்ம விபாகச:" என்றதால் முற்பிறவி குணகர்மாக்களின் பேதத்தால் என்று ஏற்படுகிறதே ஒழிய இந்த ஜன்மத்தில் செய்த கர்மாக்களின் பேதத்தால் என்று சொன்னாலோ (ஸ்ருஷ்டம்) "படைக்கப்பட்டது" என்ற சென்றகாலச் செயப்பாட்டு வினையெச்சம் பொருந்தாது. 'சாதுர்வர்ண்யம் ஜாயதே' உண்டாகிறது என்ற பதம் போடப்பட்டிருக்க வேண்டும். ஜன்மத்தால் தான் ஜாதிபேதம் என்று கர்ஜிக்கும் சாஸ்திரங்களுக்கும் இது விரோதம். ஆதலால் ஜாதி பேதம் பிறப்பிலேயே ஏற்படுகிறது என்பதைத்தான் கீதையும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

ரா:—சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் என்ற கீதையின் ச்லோகத்திற்கு "நான்கு வர்ணங்களுடைய தர்மம் என்னால் படைக்கப்பட்டது" என்றல்லவோ அர்த்தம்! "நான்கு வர்ணங்கள் படைக்கப்பட்டன" என்பது எவ்விதம் பொருந்தும்? ஆதலால் பகவான் பிராம்மணாதி வர்ணங்களைப் படைக்கவில்லை. பின் பிராம்மணாதி தர்மங்களை எவர்கள் செய்கிறார்களோ அவர்களே அந்தந்த வர்ணத்தார்கள் என்று ஏற்படுவதால் ஜனசமூகத்தில் ஜாதி வித்தியாஸமென்பது பிறப்பாலேற்பட்டதில்லை என்றும், கீதையில் "குணகர்மவிபாகச:" என்றதால் இஜ்ஜன்மதில் அவரவர்கள் செய்யும் கர்மாக்களாலேயே இச்சன்மத்திலேயே அவரவர்களுக்கு ஜாதி ஏற்படுகிறதென்றும் சொல்ல வேண்டும்.

ப. மு. :—இதைப்போல் சாஸ்திரங்களுக்கு அர்த்த நிர்ணயம் செய்யும் உம்மை ஒத்த வித்வானுக்கு சங்கர பகவத்பாதாசார்யாள் "தேவானும்பிரிய:" என்ற அடைமொழியை ப்ரம்மஸூத்ர வ்யாக்யானவஸரத்தில் கொடுத்திருப்பது எனக்கு ஞாபகத்தில் வருகிறது. ஸர்வஞ்ஞான பாஷ்யகாரர்கள் சாதுர்வர்ண்யம் என்ற பதத்திற்கு 4 வர்ணங்கள்தான் என்று அர்த்தம் செய்திருக்கிறார். பாணினீயும் வ்யாகரண பாஷ்யத்தில் இப்படியேதான் சொல்லியிருக்கிறார். "சத்வார ஏவவர்ணா: சாதுர்வர்ண்யம்." வர்ணத்திலுள்ள யத்பிரத்யயம் வர்ண ஸமூகத்தைக் குறிக்கிறதே ஒழிய வர்ணதர்மங்களைக் குறிக்கவில்லை என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார்.

ஒரு பதத்திற்கு முக்கியமாக ஒரே ஒரு அர்த்தந்தான் உண்டு என்று பெரியோர்களின் தீர்மானம். அப்படி அர்த்த நிர்ணயத்தில் அபிப்பிராயபேத மிருந்தால் "ஸந்திக்தேவாக்ய சேஷாத்" என்ற நியாயப்படி எந்த அர்த்தம் சொன்னால் ப்ரகரணத்தையொட்டி மிஞ்சிய வாக்கியங்களின் அர்த்தம் முரண்படாமலிருக்குமோ அந்த அர்த்தத்தான் ஏற்க வேண்டும்.

ஜனங்களின் கார்யங்களுக்குத் தகுந்தாற்போல் அவர்களுடைய வர்ணங்களும் நிர்ணயிக்கப் படுகின்றதென்றீர். அதாவது, ஒருவன் வேதபாடம் சொல்லிக்கொடுக்கும் போது பிராமணன், அவனே வியாபாரம் செய்யும்போது வைச்யன், அவனே மற்றவேலை செய்யும்போது சூத்ரன், அவனே துணிகளைத் தோய்க்கும்போது வண்ணான், அவனே உளியால் வேலை செய்தால் தச்சன் என்றும் நீர் சொல்வதாக ஆகிறது. காலையில் ஒருவன் பிராம்மணன், அவனே மத்யானத்தில் வைச்யன் அவனே சாயங்காலத்

தில் சூத்ரன், இரவில் கம்மாளன் என்றும் நீர் சொல்வதாக ஆகும். மேலும் எல்லோரும் எல்லாக் கர்மாக்களையும் செய்யலாம் என்றும் நீர் சொல்வதாகவும் ஆகிறது.

அப்பொழுது, தனிப்பட்டதாகத் தன்னுடைய கர்மாக்கள் (स्वधर्म) என்பன ஏற்பட நியாயமில்லை. ஆனால் அதே கீதையில் "ஸ்வதர்மே நிதனம்ச்ரேய:" "பரதர்மோ பயவஹ:" என்று சொல்லியிருக்கிறார். "தன்னுடைய ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பதில் ப்ராணத்யாகம் நேர்ந்தாலும் அதுவே செய்யத்தகுந்தது. பிறருடைய கர்மாக்களைச் செய்வதால் துக்கந்தான் விளையும்" என்ற கீதையின் வாக்யத்தையும், கர்மாக்களையும் அவைகளைச் செய்ய உரிய அதிகாரிகளின் பேதத்தையும் கூறும் சாஸ்திரங்களையும் நோக்கினால், எல்லாரும் எல்லாக் கர்மாக்களையும் செய்யத் தகுந்தவர்கள் என்ற உம்முடைய வாதம் நிராகரிக்கப் படுகிறது.

வேதம் "ब्राह्मणोयजेत" பிராம்மணனேயாகம் செய் என்று சொல்வதால், யாகம் செய்வதற்குமுன் ப்ராம்மண்யம் அவனுக்குச் சித்திக்கவேண்டும். ஒரு கர்மாவுக்கு அதிகாரமில்லாதவன் அக்கர்மாவைச் செய்வது பரதர்ம ஸேவையாகும். பரதர்ம ஸேவையால் தோஷம் ஏற்படுகிறதென்று கீதை சொல்லுகிறதேயொழிய அதனால் ஜாதி நிர்ணயிக்கப்படுகின்றது என்று சொல்லவில்லை.

அவரவர்கள் அவரவர்களுடைய ஜாதி கர்மாக்களைச் செய்யவேண்டும். பிறஜாதி கர்மாக்களை செய்யக்கூடாது என்ற அன்வயவ்யதிரேக நியாயத்தால்,

1. ஸித்தமாக ஜாதி என்பது உண்டு என்றும்
2. பிறகு ஜாதிக்குகந்த கர்மாக்கள் உண்டு என்றும்

3. அச்சாதி கர்மாக்களே ஸ்வதர்மம் என்றும்

4. பிறஜாதி கர்மாக்கள் பரதர்மம் என்றும்

5. தன் ஜாதி கர்மாக்கள் என்ற பதத்தால், தானும் ஜாதியும் இணைபிரியாச் சம்பந்தத்தால் சேர்ந்திருப்பதால், தான் எப்பொழுது பிறந்தானே அப்பொழுதே தன்னுடைய ஜாதியும் நிர்ணயிக்கப்பட்டு விட்டபடியால், பிறப்பினுல் தான் ஜாதி என்றும்

6. கர்மாக்களால் மட்டும் ஜாதி நிர்ணயம் செய்யக் கூடாதென்றும்

7. ஸ்வதர்மானுஷ்டானத்தால் தான் ஸர்வ க்ஷேமமும் ஏற்படுகிற தென்றும்

8. பரதர்ம ஸேவையால் துக்கமும், ஆசுரத்வமும் விருத்தியாகிறதே யொழிய யாதொரு அனுகூலமுமில்லையென்றும் ஏற்படுகின்றன.

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा ।
यज्ञार्थात्कर्मणोन्यत्र ।
श्रेयान्स्वधर्मो विगुणः ।
स्वधर्ममपि चावेक्ष्य ।
स्वे स्वे कर्मणि अभिरतः ।
स्वकर्मणा तमभ्यर्च्य ।
ब्राह्मण क्षत्रिय विशां ।
कर्माणि प्रविभक्तानि ।

இது முதலிய கீதாச்லோகார்த்தங்களை அனுசரித்தால் "சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம்" என்ற ச்லோகத்திற்கு "4 வர்ணங்கள் என்னுல் படைக்கப்பட்டன" என்ற அர்த்தம்தான் பொருத்தமென்றும், முன்பின் ச்லோ

கங்களின் பரம தாத்பர்யத்தைக் கவனித்து, கீதாசார்யன் ஹிருதயத்தை ஸர்வஞ்ஞரான பாஷ்யக்காரர் செவ்வனத் தெளிவுபடுத்தி யிருக்கிறார் என்றும் ஏற்படுகிறது.

இதனாலும் ஜாதிபேதம் மனுஷ்யர்களால் கற்பிக்கப் பட்டதில்லை யென்றும் கடவுளின் அமைப்பே என்றும் நிச்சயிக்கப்படுகிறது.

சரீரத்தின் ஸ்திதிக்கும் ஆரோக்யத்திற்கும், ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் பிரிக்கப்பட்டு அவ்வவ்விந்திரியங்கள் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்வதில் நிபுணர்களாக இருந்து சரீரத்தை சம்ரக்ஷிக்கின்றன. இந்திரிய பேதத்தால் இந்திரிய தாரதம்யமும், மேல் கீழ் என்ற த்வேஷமுமில்லாமல் எல்லாம் ஏகோபித்து ஒத்துழைப்பதால் தான் சரீரம் ஆரோக்யமாயிருக்கிறது. அது போல் இச்சமூக வாழ்க்கையிலும், ஜனங்களின் ஸ்பாவத்திற்குத் தகுந்தாற்போல் ஈச்வரன் அவர்களில் பல வர்ணங்களைச் சிருஷ்டித்து, ஒவ்வொரு வர்ணத்திற்குள்ள ஸ்வபாவத்திற்குத் தகுந்த வேலைகளை நியமித்து ஜனங்களுக்குத் தர்மங்களைப் புகட்டுவது, ஜனங்களைக் காப்பது, பொருளாதாரத்தை விருத்தி செய்வது, எல்லோருக்கும் காரியங்களைச் சாதிக்க உதவுதல். இப்படிப்பட்ட காரியங்களை, பல வர்ண ஜனங்கள் த்வேஷமில்லாமல் ஏகோபித்துச் செய்து வந்தால்தான் சமூகம் முன்னுக்கு வரும் என்பதில் ஐயமில்லை. கைசெய்யும் வேலையைக் கால் செய்யாத காரணத்தாலோ, கால் ஆபாஸமான இடங்களில் மிதிப்பதாலோ கையைக்காட்டிலும் கால் கீழென்று சொல்வது தகாது. அவ்வவ்விஷயங்களைக் கிரஹிப்பதில் அவ்வவ்விந்திரியங்கள் சூரர்கள். அதுபோல் அந்தந்ததர்மங்களை அந்தந்த வர்ணத்தார்கள் செய்வதால் அவ்வவ்விஷயத்தில் அவரவர்கள்

சூரர்கள். ஏற்றத் தாழ்வு என்பது இல்லை. உலகத்தில் த்வேஷம் காணப்படுகிறதற்கு மதத்தின் தத்வத்தை அறியாததே தான் காரணம். மதவிஷயங்களைப் பொதுமக்களுக்குப் புகுத்துவதே இந்த ஜாதிச் சண்டைகளை ஒழிக்க உபாயமாகும்.

ரா :—ஈசுவரன் நான்கு வர்ணங்களைத்தான் சிருஷ்டித்தார் என்று கீதையிலிருக்கிறது. அதைத் தவிர பஞ்சமர்கள் என்ற ஜாதியுண்டா?

ப. மு. :—உலகத்தில் 4 வர்ணங்கள்தான் சிருஷ்டிக்கப் பட்டன. இந்நான்கு வர்ணத்தைத் தவிர வேறு எதுவும் சிருஷ்டிக்கப் படவில்லை என்று அந்த கீதையின் தாத்பரியம்? அப்படியிருந்தால் இந்த நான்கு வர்ணங்களுக் குட்படாத மற்ற மதஸ்தர்கள் சிருஷ்டிக்கப்படவில்லையா? நாற்கால் பிராணிகள் முதலிய லக்ஷக்கணக்கான ஜீவராசிகளும் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்படவில்லையா? அந்தச் சிருஷ்டியெல்லாம் உலகத்தில் காணப்படும்போது 4 வர்ணங்கள்தான் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டன என்பது பொருந்தாது. ஐந்தாவது ஜாதியும், 4 வர்ணங்களில் அடங்காதவர்களும் சிருஷ்டிக்கப்பட்டவர்களே.

ரா :—அப்படியானால் "चातुर्वर्ण्यं मयासृष्टं गुणकर्म विभागशः" என்ற வாக்கியத்தின் அர்த்தம் தானென்ன?

ப. மு. :—வர்ணம் முக்கியமாக 4 என்றாலும் வர்ணங்கள் ஒன்றோடொன்று கலப்பதால் மற்ற வர்ணங்களேற்படுவது லோகப் பிரசித்தம். சிவப்பும் மஞ்சளும் கலந்தால் ஆரஞ்சுவர்ண முண்டல்லவா! அதுபோல் வர்ணங்களுடன் மற்ற வர்ணங்கள் கலப்பதால், ரதகாரர்களென்றும் குயவன், வண்ணான், சண்டாளன் முதலிய ஜாதிகளும் ஏற்

பட்டிருக்கின்றன. அந்தந்த ஜாதிகளில் பிறந்தவர்கள் அந்தந்த ஜாத்யர்கள். முதலில் பகவானுல் சிருஷ்டிக்கப் பட்டவர்கள் 4 வர்ணத்தார்கள். அவர்களுடைய வர்ண ஸங்க்ரமத்தால் ஏற்பட்டவர்களே பஞ்சம ஜாதியர்கள்.

ரா :—பல ஜாதிகள் சிருஷ்டிக்கப்பட்டாலும் ஹிந் துக்கள் எல்லோரும் அவரவர்களுக்கு இஷ்டப்பட்ட தர் மங்களை அனுஷ்டிக்கக் கூடாது என்று மனிதர்களின் சுதந்திர உரிமையைத்தடுக்கும் ஹிந்து மதம் கேலிக்கு இடமல்லவா ? மற்ற மதங்களில் இக்கட்டுப்பாடில்லாமல், எல்லோருக்கும் அந்த மத தர்மங்களை அனுஷ்டிக்க உரிமை யுண்டே !

ப. மு. :—ஒவ்வொரு வர்ணத்திற்கும் ப்ரத்யேகமான தர்மங்கள் உண்டு என்று கீதையில் சொல்லியிருக்க வில்லையா ! அவைதான் வர்ணதர்மங்கள் எனப்படும். அவரவருடைய ஸ்வதர்மங்களை அவரவர்களனுஷ்டிப்பதால் அவரவர்களுக்குச் சித்தபரிபக்குவம் ஏற்பட்டு நுட்பமான பகவத் விஷயத்தில் மனது ஈடுபட்டு பகவத் அனுக்ரஹத் தால் பேரின்பம் கிடைக்கிறது. அதற்கு விபரீதமாக ஒரு ஜாதி மற்ற ஜாதித் தொழிலைச் செய்தால் அவர்களுக்கு அனர்த்தம்தான் விளையும் என்று கர்ஜிக்கிருர் பகவான். குணங்களுக்கு அனுகுணமாக ஜாதிபேதங்கள் ஏற் பட்டிருக்கிறதால், தமோ குணத்திலுதித்தவன் ஸத்வ குணத்தின் கர்மாக்களின் தாத்பரியத்தை அறிய இய லான். அனுஷ்டிப்பது எப்படி ? அனுஷ்டித்தாலும் தமோ குணத்தால் தான் அனுஷ்டிக்க முடியுமாதலால், அக் காரியம் செவ்வனே அனுஷ்டிக்கப்பட முடியாது. தனக் கேற்பட்ட தமோ குணத்திற்குரிய கார்யங்களைச் செய் யாததால் தன் கார்யமும் செய்யப்படாததால் அதற்கும்

நஷ்டமேற்பட்டு அனர்த்தம்தான் விளையும். இது காரணம் பற்றியே கீதையில் "ச்ரேயான்ஸ்வதர்மோ விகுண:" "பரதர்மோ பயாவஹ:" என்று கூறுகிறார். அதனால் தான், தன்ஜாதி கர்மானுஷ்டானமே தனக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறது என்பது பொருந்தும். இதற்கு அத்தாக்ஷி யாக இக்காலத்தில் பிராமண ஜாதியை எல்லோரும் வெறுப்பதற்கும் அவமதிப்பதற்கும் முக்கிய காரணம், அவர்கள் தங்கள் ஜாதித்தொழிலில் அக்கரையற்றும், மூடர்களாயுமிருந்து மற்ற ஜாதித் தொழிலை அவலம்பிப் பதே. கர்மாக்களை அனுஷ்டிப்பதால் மனதின் பரிபக்கு வம் ஏற்பட்டு உண்மை விளங்கும். உண்மை விளக்கத் தால்தான் பேரின்பம் உண்டு. அந்தந்த வியாதிகளைச் சமனம் செய்து தேக சௌக்கிய மேற்பட வைத்தியன் அந்தந்த நோயாளிகளுக்குத் தகுந்தாற்போல் மருந்துகளை யும் வெவ்வேருகக் கொடுத்து தேக ஆரோக்யத்தை உண்டு பண்ணுகிறான். ஒரு நோயாளி "மற்ற நோயாளிக்குக் கொடுக்கும் மருந்து தித்திப்பாயிருக்கும் போலிருக்கிறது. பத்யமில்லாமல் ஒரு முறை சேவித்தால் போதும் என்று வைத்தியர் சொல்கிறார். எனக்குக் கொடுக்கும் மருந்து கசப்பு, பத்யமுண்டு, வெகு நாட்கள் சாப்பிட வேண்டு மென்று பக்ஷபாதத்தால் வைத்தியர் சொல்லுகிறார்" என்று வைத்தியரிடம் நம்பிக்கையில்லாமல் மற்ற நோயாளிக்குக் கொடுக்கப்பட்ட மருந்தைத் தான் சாப் பிட்டால் அது அனர்த்தத்தில்தான் முடியுமென்ற சந்தேக முண்டா? அதுபோலவே இவ்விடத்தும்—உலகத்தில் உதித்த ஜனங்களுக்கு ஸம்ஸாரம் என்ற மன நோய் உண்டு. காமக்ரோதாதிகளின் தாரதம்யத்தால் அகங் காரம், தேகாபிமானம், மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் கிரஹிக்கும் விவேகமின்மை,

இது முதலிய அநேகவிதமான நோய்கள் இம்மனதில் பீடித்திருக்கின்றன. இன்பத்தை அனுபவிப்பது மனதான தாலும், அம்மனதை நோயற்றதாகச் செய்தாலொழிய மனோபல மில்லாமல் பேரின்பத்தையும் அடையமுடியாது. அந்த மனோநோயால் பீடிக்கப்பட்ட எல்லா ஜனங்களும் அதன் பரிஹாரத்தைப் பல விடங்களில் பலபேர்களிடம் தேடியும் அதற்குப் பரிஹாரம் கிடைக்கவில்லை. உலகப் பிரசித்திபெற்ற மேல்நாட்டு வைத்தியர்கள்கூட எல்லாவித ஸ்தூல சரீரத்தில் காணும் நோய்களுக்கு மருந்து இன்னும் பூர்ணமாகக் கண்டுபிடிக்கவில்லை. சூக்ஷ்மமாக இருக்கும் மனதின் வியாதிகளைச் சிகித்ஸை செய்ய அவர்களுடைய முறைகள் பலிக்கவில்லை. மனோ வியாதியை சுகப்படுத்தினாலல்லாது மனிதனுக்குச் சுகம் விசேஷமாகக் கிடைப்பதரிது. அப்படி யில்லையேல் மலமுள்ள மனது, மஞ்சக்காமாலை வந்தவனுக்குப் பார்க்கும் வஸ்துக்கள் மஞ்சளாகப் புலப்படுவதுபோல் எல்லா வஸ்துக்களையும் விபரீதமாகத்தான் அறியும். பகவான் பார்த்தசாரதிதான் ஸம்ஸாரத்திற்குக் காரணமான மனோவியாதியை ஒழிக்க வல்ல வைத்தியர். பகவத்கீதை என்பதுதான் வைத்யசாலை. அகண்டாகாரவ்ருத்தி ஞானம் என்பதே மருந்து. அம் மருந்தை ஜன சமூகத்தில் பெயர்பெற்ற மஹான்களிடத்தில் சேவிக்கும்படி செய்து, அவர்கள் நற்சாக்ஷிபத்திரம் கொடுத்தால்தான் பாமரர்களும் அதை உத்ஸாகத்துடன் சேவித்து ஆனந்தமடைவார்கள். அதுபோல், லோகப் பிரசித்தனான அர்ஜுனனுடைய மனோவியாதியை பகவானான வைத்தியர் சிகித்ஸை செய்தார். ஆதலால் சம்ஸார நோய் பிடித்தவர்களுக்குக் கதி பகவத் கீதை என்ற வைத்தியசாலை. வைத்திய முறைப்படி மருந்துகளை அருந்த வேண்டும். தம்மிஷ்டப்படிச் சேவித்தால் அம்மருந்தே

இவனை ஆபத்தில் வீழ்த்தி விடும். ஆதலால் தன்னிஷ்டப் படி வைத்தியசாலையில் மருந்து சாப்பிடுகிறவன் கதிதான், தன்னிஷ்டப்படித் தர்மத்தைப் பண்ணுகிற மகானுபாவர் களின் கதியுமாகும்.

ரா :—நீர் சொல்வது நன்றாயிருக்கிறது. ஆனாலும் இக்காலத்தில் உள்ள மக்களெல்லோருக்கு மப்படிப்பட்ட விவேகமில்லையே!

ப. மு. :—ஜனங்களின் மனதின் பக்குவபேதத்தை நீர் ஒப்புக்கொள்ளுகிறீரல்லவா! புஷ்பங்களிலும் ஜாதி பேதங்கள் உண்டு. மல்லிகை என்றாலும் அவைகளிலும் எவ்வளவோ ஜாதியுண்டு—அந்திமல்லி, நித்யமல்லி, குண்டு மல்லி, வாடாமல்லி, வாசனைமல்லி முதலியன. ஜாதிபேதம் அவைகளின் குணத்தால் உற்பத்தியிலேயே ஏற்பட்டிருக் கிறது. அதுபோலவே ஜாதிபேதம் மனுஷ்யர்களிடமும் உண்டு.

ரா :—ஆனாலும் எல்லோரும் பகவானுக்கு ஸமமா? பகவானுக்குச் சிலர் தாழ்த்தப்பட்டவர்களென்றும் சிலர் மேலானவர்களென்றும் பேதமுண்டா?

ப. மு. :—பகவானுக்கு எல்லோரும் ஸமந்தான். அவ ருக்கு ஒருவரிடமும் பக்ஷபாதமே கிடையாது.

ரா:—எல்லோரும் பகவானுக்கு ஸமம் என்கிறீர். பக்ஷ பாதமில்லையென்கிறீர். பின் ஜாதிபேதத்தை உண்டுபண் ணினவர் பகவானென்று சொல்லுவது பொருத்தமில்லையே!

ப. மு. :—உலகத்திலுள்ள சராசர வஸ்துக்களைப் படைத்தவர் கடவுள் என்பதில் ஆட்சேபணையுண்டா?

ரா :—இல்லை.

ப. மு. :—ஸ்தாவரம், ஜங்கமம், அதிலும் மனுஷ்யர்கள், மிருகங்கள், இவர்களைப் படைத்தவர் யார்?

ரா :—கடவுளே.

ப. மு. :—ஜங்கமம், ஸ்தாவரம், மனுஷ்யன், மிருகம் இவைகள் எல்லாம் ஒன்று, அல்லது பேத வஸ்துக்களா?

ரா :—ஒன்றல்ல, பேத வஸ்துக்கள்தான். மனுஷ்யனை மாடு என்றால் தப்பல்லவா. மனிதன் வேறுதான். மிருகம் வேறுதான். பின் இந்த உலகத்தில் கண்ணால் தினமும் பார்த்து அனுபவித்து வரும் பேதமாயும் விசித்திரமாயுமுள்ள மனித, மிருக, தாவரப் படைப்புகளை நோக்குங்கால் "பகவானுக்கு எல்லாம் ஸமமல்ல. பக்ஷபாதமுண்டு. சிலரைச் சுகப்படுத்தியும் சிலரைக் கஷ்டப்படுத்தியும் பல வகையாகப் படைத்திருக்கிறார்" என்று தோன்றுகிறது.

ப. மு. :—அப்படியே பகவானும் ஜாதிபேதங்களை சிருஷ்டித்திருக்கிறார் என்று ஏன் சொல்லக்கூடாது?

ரா :—பேதத்துடன் கூடிய விசித்திர உலக சிருஷ்டியைச் செய்த கடவுளை எப்படி பக்ஷபாதமற்ற உதாஸீனர் என்று சொல்வது? இவ்வுலகமோ கடவுளால்தான் சிருஷ்டிக்கப்பட்டது. வேறு எவருக்கும் அவ்வளவு அறிவு இல்லை.

ப. மு. :—கடவுள் உலகத்தைப் படைத்தார். மேல் தாழ், பணக்காரன் ஏழை, யஜமானன் சேவகன் முதலிய தாரதம்யங்களுடன் கூடியது இவ்வுலகம். அதைத் தன்னுடைய இஷ்டத்தால் பகவான் உண்டுபண்ணினாரா? அல்லது வேறு ஒருவித கார்ய காரணங்களை எடுத்துக்கொண்டு அதற்கு அனுகுணமாகப் படைத்தாரா?

ரா:—எப்படியிருந்தால்தா னென்ன ?

ப.மு:—இருவிதத்திலும் விசேஷமுண்டு. பகவான் தன்னிஷ்டப்படி ஜீவர்களையும் உலகவஸ்துக்களையும் படைத்தாரென்றால் அவருக்குப் பக்ஷபாதமுண்டு என்று ஒருவாறு சொல்லலாம். அவர் அப்படிச் சிருஷ்டி பண்ணவில்லை.

ரா:—பின் எப்படிப் படைத்திருக்கிறார் ?

ப. மு. :—ஜீவர்கள் பூர்வ ஜன்மங்களில் செய்த கர்மாக்களைக் கவனித்து அக்கர்மாக்களுக்குத் தகுந்தபடி பிறவியை பகவான் அந்தந்த ஜீவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ஆதலால் அவருக்குப் பக்ஷபாதமில்லை. முதல் வகுப்பு டிக்கட் பெற்றவர்களை முதல் வகுப்பு வண்டியிலும் 2-வது 3-வது வகுப்பு டிக்கட் பெற்றவர்களை 2-வது 3-வது வகுப்பு வண்டிகளிலும் உட்காரும்படி செய்திருப்பதால், ரயில்வேக் கம்பெனியாரிடம் பக்ஷபாதமுண்டு என்று சொல்வது பிசகல்லவா! இந்த ஜன்மத்திற்குக் காரணம் பூர்வ ஜன்ம கர்மாக்களே. அந்த ஜன்மத்திற்கு அதற்கு முன்வினைகள். அதற்கு அதற்குமுன் வினைகள் என்று எல்லையில்லாமல் கர்மாக்கள் போய் கொண்டிருப்பதால், தன் கர்மாக்களே, தன்னுடைய சுகத்திற்கும் துக்கத்திற்கும் காரணமே ஒழிய, பகவானின் பக்ஷபாதம் காரணம் என்று சொல்வது விவேகமின்மையே. பகவான் மழையைப்போலிருக்கிறார்—நிலத்தில் பூண்டு, பாவை, கரும்பு முதலிய விதைகளின்மேல் மழை பொழிய, பூண்டின் விதை பூண்டையும், பாவையின் விதை பாவையையும், கரும்பின் விதை கரும்பையும் உண்டுபண்ணும்போது, இந்த மழை நீர் பக்ஷபாதம் செய்து, பூண்டில் நாற்றத்தையும், பாவையில் கசப்பையும், கரும்பில் தித்திப்பையும் உண்டுபண்ணினது என்று சொல்லலாமா? அந்தந்த

விதைகளல்லவோ அந்தந்த பூண்டு முதலியதாவரங்களின் குணங்களுக்குக் காரணம்! அதுபோலவே ஜீவர்களின் சிருஷ்டிக்கும், அவரவர்களுடைய பூர்வஜன்ம கர்மாக்களே தான் அசாதாரண காரணம். ஈச்வரன் சாதாரண காரண மானதால் அவரிடம் பக்ஷபாதமில்லை. அவருக்கு எல்லோ ரும் ஸமம்.

ரா:—கடவுளுக்கு எல்லோரும் ஸமமென்றால் அவர் சன்னதியில் திருக்கோயிலில் தீண்டாமை ஒழியாதா?

ப.மு. :—கடவுள் சன்னதியில் தீண்டாமை விலகு மென்றால், கடவுள் இல்லாத இடம் இல்லாததால், எங்கும் கடவுள் சன்னதி ஆனதால் தீண்டாமை எங்கும் இருக்கக் கூடாதே! தீண்டாமையே இல்லை என்றால் அதை ஒழிக்க கோவிலில் நுழைவது அவசியமில்லையே!

ரா:—ஆம், தீண்டாமை எங்கும் கூடாதுதான். அது தான் எனது இஷ்டம்.

ப. மு. :—எங்கும் கடவுள் சன்னிதானந்தான். கீழ் தாழ், யஜமானன் வேலைக்காரன், பிரதம மந்திரி மற்ற மந் திரிகள், ஜனங்கள், வாக்காளர்கள், நம் ராஜ்யம், பிற ராஜ் யம் முதலிய பல்வேறு பேதங்கள் ஸமமான கடவுள் முன் னிலையில் அழியாதபோது, தீண்டாமை மட்டும் அழிந்து போகிறது என்பது அறிவின்மையே. இப்பேதங்களைப் பிரதிதினமும் அனுபவிக்கிறோம். கடவுள் சன்னதியில் பேதமில்லை என்கிறீர்களா? இப்பிணிகள் ஒழிந்தாலல்லவோ தீண்டாமைப்பிணியும் ஒழியும்.

ரா:—பின் கடவுளுக்கு இப்பிணிகளை யொழிக்கச் சக்தி யில்லையா?

ப. மு.:—கடவுளின் சக்தியை இப்படித்தானு பரீக்ஷிப்பது? விநோதமாக இருக்கிறது! அவரவர்களுடைய ஜன்மங்களுக்கும், சுகதுக்கங்களுக்கும் முக்கிய காரணம் அவரவர்களின் பூர்வகர்மாக்களே என்று முன்னமேயே சொன்னோம். காரணம் உள்ள வரையில் கார்யம் இருந்தே தீரும். காரணத்தை ஒழித்தால் கார்யம் கிடையாது. ஜன்மமரணுதிப் பிணிகளை ஒழிக்க இஷ்டப்படும் ஜீவர்கள், அப்பிணிகளுக்குக் காரணமான பாபகர்மாக்களை ஒழித்தாலல்லவோ பிணிகளும் ஒழியும். துக்கத்திற்குக் காரணமான பாபங்களைச் செய்து, புண்யங்களின் கார்யமான சுகத்தை எல்லா ஜனங்களும் விரும்புகிறார்கள். கிழக்கேயுள்ள தன் வீட்டையடைய மேற்கேயே சென்றால் எப்படி அடையமுடியாதோ, அப்படியேதான் பாபத்தையே செய்யும் ஜனங்களுக்குச் சுகத்தில் இஷ்டமிருந்தாலும் அது கிடைக்கிறதில்லை. பகவான் கார்யகாரண வ்யவஸ்தையை உண்டுபண்ணி யிருக்கிறார். ஜனங்களுக்கு அவரவர்களுடைய பூர்வ வாசனைப்படி சுகாதி விஷயங்களில் ஆசை ஏற்பட்டு அவ்விஷயங்களையடைய அவரவர்கள் ப்ரவ்ருத்திக்கிறார்கள். ஜனங்களுக்குப் பகவான் வேதரூபத்தைத் தரித்துச் சுகவிசேஷத்தையும், அதன் சாதனத்தையும் புகட்டுகிறார். இவ்வுலகத்திலுள்ள சுகத்தைக் காட்டிலும், விசேஷ சுகமுள்ள ஸ்வர்க்க சுகத்தை அடைய அதற்கு விசேஷ சாதனமான யாகத்தைக் காட்டினது வேதம். இது போலவே ப்ரவிருத்தி உள்ளவர்களுக்கு அந்த ப்ரவிருத்திக்கு விசேஷ பலத்தையும், அதற்குவேண்டிய விசேஷ ஸாதனங்களையும் காண்பிப்பது வேதம். ஒருவிதப் ப்ரவிருத்தியும் இல்லாதவர்களுக்கும் அதே ஸாதனத்தைச் செய்யத் தகுந்தது என்று வேதம் சொல்லவில்லை. ஜனங்களின் புண்ய பாப ப்ரவிருத்திகளுக்குக் காரணம்

வேதமல்ல. பகவானுமல்ல. பின் தங்கள் பூர்வ வாசனை களே. பகவான் அந்தந்த பிரவிருத்திகளுக்குக் காரண மான இந்திரியங்களுக்குச் சக்தியைக் கொடுத்துக்கொண்டு ஸாக்ஷியாக இருக்கிறார். அந்த பகவத் சக்தியால் இந்திரியங்கள் தங்கள் பூர்வ கர்ம வாசனைப்படி புண்யத் திலோ, பாபத்திலோ ப்ரவிருத்தித்து அதற்கு அனு குணமாகச் சுகத்தையோ, துக்கத்தையோ அடைகின்றன. பகவான் கர்மா பண்ணவுமில்லை. அதன் பலத்தை அனு பவிக்கவுமில்லை. சூரியன் காலையில் உதிக்கிறான். ஸாதுக்கள் அக்னி ஹோத்ராதிகர்மாக்களைச் செய்கிறார்கள். வேலைக் காரர்கள் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். மாணவர் கள் படிக்கிறார்கள். உத்தியோகஸ்தர்கள் உத்தியோகத் திற்குச் செல்கிறார்கள். சூதாடுகிறவர்கள் சூதாடுகிறார்கள். உழவன் வேலைக்குப்போகிறான். இப்படிப் பல ஜனங்களின் வேலைகளுக்கும் வெளிச்சம் கொடுத்து உதவுவது ஒரே ஒரு சூரியனாயினும் அவரவர்களுடைய வெவ்வேறு ப்ரவிருத்திகளுக்குக் காரணம் அவரவர்களின் நோக்கமே தவிர சூர்யன் அல்ல. ஆனாலும் சூரியன் இல்லாவிடில் ஒரு காரியமும் நடைபெறாது. சூரியனைப்போல் பகவான் ஸாக்ஷி. ஜீவர்களின் சுகத்திற்கு அவர்கள் செய்த சத்கர் மாக்களேதான் காரணம். சுகம் வேண்டுமென்றால் சத்கர் மாக்கள் செய்யவேண்டும்.

ரா. :—ஜீவர்களின் சுகதுக்கங்களுக்கும் அவர்களின் ஜன்மங்களுக்கும் அவர்கள் செய்த பூர்வ கர்மாக்களே காரணம் என்றால், சுகத்தை அடைவதற்கும் துக்கத்தி லிருந்து விலகுவதற்கும் ஜீவர்கள் பிரயத்னம் செய்வது அவசியமில்லை என்றல்லவா ஏற்படுகின்றது! ஆனால் உல கத்தில் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்ற

பழமொழிப்படி ஜனங்கள் தங்களிஷ்டங்களை யடைய அவைகளுக்குகந்த சாதன காரியங்களை அனுஷ்டிக்கிறார்களே! புருஷ ப்ரயத்னம் அவசியமில்லை என்பது பொருத்தமில்லையே!

ப. மு. :—ஜனங்களின் பூர்வ கர்மாக்கள் அவரவர்களுடைய சுகதுக்கங்களுக்குக் காரணம் என்பதால் புருஷ ப்ரயத்னம் அவசியமில்லையென்று ஏற்படாது. புருஷனன்றியில் பூர்வ கர்மாக்கள் செய்யப்பட்டிருக்க முடியுமா? கர்மாக்களுக்குப் புருஷன் அத்யாவசியம். எக்கர்மாக்கள் எப்புருஷனால் செய்யப்பட்டனவோ அக்கர்மாக்களின் பலன்களையே அதே புருஷன் தேச காலாந்திரங்களில் அனுபவிக்கிறான். அப்புருஷனின் சுகதுக்கங்களுக்குக் காரணம் அவன்முன் செய்த கார்யங்கள் என்று சொல்வது பொருத்தமே. செய்யப்பட்ட கார்யங்களால் புருஷனுடைய மனதில் ஒருவித ஸம்ஸ்காரம் ஏற்படுகிறது. கார்யங்கள் செய்து முடிவடைந்தாலும் அவை ஸூக்ஷ்மமாக பரிணாம மடைந்து மனதில் பதிவதே மனதின் ஸம்ஸ்காரம் எனப்படும். பாவச்செயல்களான கார்யங்கள் ஸூக்ஷ்மமாகப் பரிணமித்து மனதில் தமோ குண ஸம்ஸ்காரத்தை விருத்தி பண்ணுகிறது. ஸன்மார்க்கமான செயல்களின் பரிணாமமோ அதேப்பிரகாரம் மனதில் ஸத்வகுணத்தை விருத்தி பண்ணுகிறது. மனதில் எக்குணத்தின் ஆதிக்கம் ஏற்படுகின்றதோ அக்குணத்திற்கேற்க காரியங்கள் புருஷனால் செய்யப்படுகின்றன. இவ்விதமாக ஏற்படும் மனதின் ஸம்ஸ்காரத்திற்கே மனோவாசனை யென்று சொல்லப்படும். ஸத்வகுணவாசனை மிகுந்திருந்தால் அவ்வாஸனையே புருஷனை அதற்குகந்த சன்மார்க்கங்களைச் செய்யும்படி தூண்டுகிறது. அப்படியே துர்வாஸனை

யும் பாபங்களில் புருஷனைத் தூண்டுகிறது. அவ்வாஸனை தூண்டினாலும் புருஷன் சாஸ்திரங்களை அப்யசித்து விவே கத்தை பெற்றிருப்பானேயாயின் இப்பிரவிருத்தி படுகுழி யில் நம்மைத் தள்ளிவிடும், இதைச் செய்யக் கூடாது என்று விவேகத்தால் அறிந்து, அந்த அனர்த்த காரியங்களிலிருந்து விலகுவான். விவேகமில்லையேல் அதைச் செய்து கஷ்டத் திற்குள்ளாவான். ஆதலால் சுகத்தை விரும்பும் ஒவ்வொரு ஜீவனும் அதற்குக் காரணமான ஸத்வ வாஸனையையே மன தில் விருத்திபண்ண வேண்டும். அதற்கேற்ப ஸன்மார்க் கங்களையே அப்யஸிக்க வேண்டும். அப்யாஸம் தான் வாஸனைக்கு முக்ய காரணம்.

ஜீவாத்மா ரதத்தில் உள்ளவன். சரீரம் ரதம். புத்தி தான் சாரதி. மனது கடிவாளம். இந்திரியங்களே குதிரை கள். சப்தஸ்பரிசரூப ரஸகந்தங்களான விஷயங்களே ரதம் ஓடும் மார்க்கங்கள். குதிரைகள் சென்றபடி சாரதி ரதத்தை ஓட்டினால் அனர்த்தத்தில்தான் முடியும். சாரதி தன் விவேகத்தால் கடிவாளத்தை யிழுத்துப்பிடித்து குதிரைகளைத் தனக்குச் செல்லவேண்டிய மார்க்கத்தில் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்தினால்தான் ரதிகன் தான் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைவான். அது போலவே இந்திரியங்கள் பூர்வ கர்ம வாசனைக்குகந்தபடிப் பிரயாணம் செய்யும் சமயத்தில், புத்தியான சாரதி மன தாகிற கடிவாளத்தை இழுத்து இந்திரியங்களாகிற குதிரை கள் தன்னிஷ்டப்படி விஷயங்களாகின்ற மார்க்கங்களில் செல்லாதபடிப் பிரயத்னம் செய்து தன்னுடைய சுகமான வீட்டையடைய, அவைகளைச் சாஸ்த்ரீய மார்க்கங்களில் செலுத்தவேண்டும். சாரதியின் பிரயத்னமே இவ்விடத்தில் விவேகத்துடன்கூடிய புருஷனின் பிரயத்னமாகும். குதிரை

களுக்கு முன் போய்க்கொண்டிருந்த மார்க்கங்களில்தான் ஓடுவதில் ஸ்வாபமாகத் தன்மையுண்டே யல்லாது, இம் மார்க்கத்தில்தான் செல்ல வேண்டுமென்று அவைகளைக் கட்டுப்படுத்துவது சாரதியின் கார்யமே. அதுபோல் பூர்வ ஜென்ம கர்மாக்களின் வாஸனையால் இந்திரியங்களுக்கு ஸ்பாவமாகப் பிரவிருத்தி யேற்பட்டுக் கார்யங்களைச் செய்யும்போது, புருஷன் தன்னுடைய சாஸ்திரீய விவேகத்தைக் கலந்துகொண்டு அப்பிரவிருத்திக்கும் இந்திரியங்களைப் பிரவிருத்தியிலிருந்து தடுப்பதற்குச் சக்தியில்லாவிட்டாலும், அப்பிரவிருத்தியை சாஸ்திரீயமான ஸாத்வீக சன்மார்க்க விஷயங்களில் செல்லும்படிச் செய்வதே கடமையாகும். அப்படித் தனது விவேகத்தை உபயோகித்து ஸன்மார்க்கங்களில் இந்திரியங்களைப் ப்ரவிருத் திக்கும்படி அப்யஸித்தால், சிறுகச் சிறுக இந்த ஸதப்யாஸம் விருத்தியடைந்து துரப்யாஸம் விலகி, புருஷனுக்குச் சுகத்திற்கு வேண்டிய கார்யங்களில் அநாயாஸமாகப் ப்ரவிருத்தி யேற்படுகின்றது. துர்வாஸனையை வெல்லுவது கஷ்டமானாலும் ஸன்மார்க்காப்யாஸத்தால் கூடியசீக்கிரத்தில் அதை வென்று விடலாம். அதனால் " முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார் " என்ற பழமொழி பொருத்தமாகும். ஸன்மார்க்கங்களில் பலவகை யிருந்தாலும் சாதாரண ஜனங்களுக்கு ஈச்வர வழிபாடே முக்ய ஸன்மார்க்கமாகும். கடவுளது ஸகுண மூர்த்தியை உபாஸிப்பதே பக்திக்குக் காரணமாகும்.

ரா :—கடவுளின் மூர்த்தியை உபாஸிப்பது பக்திக்குக்காரணம் என்கிறீர். கடவுளுக்கு ரூபம் உண்டா? ரூபமுள்ளவரை யல்லவோ பார்க்கமுடியும். எங்கும் நிறைந்த கடவுளை ஒரு ரூபத்திற் குட்படுத்துவது தப்பல்

லவா ! அப்படிக்கற்பிக்கப்பட்ட ரூபந்தான் கடவுளென்றும் அதைத் தரிசிப்பது தான் கடவுளை தரிசிப்பது என்றும் சொன்னால் கடவுளுக்கு அவமானம் இழைத்ததாகவல்லவோ ஆகும் !

ப. மு. :—ஒரு ரூபத்தை ஏற்படுத்தி அதைக் கடவுளது ரூபமென்றால் ஏன் பொருத்தமில்லை? கடவுள் எங்கும் நிறைந்திருக்கும்போது இந்த ரூபத்தோடு கூடிய மூர்த்தியில் மட்டும் கடவுளில்லை யென்பது தான் பொருத்தமில்லை. இம்மூர்த்தியில்தான் கடவுளிருக்கிறார், அவர் மற்ற விடங்களிலில்லை யென்றால்தான் கடவுளை அவமதித்த தாகும். நாம் அப்படிச் சொல்லவில்லை. பின் கடவுள் எங்குமிருக்கிறார். இம்மூர்த்தியிலுமிருக்கிறார் என்றல்லவோ அவரை வழிபடுகிறோம் !

ரா : —கடவுள் எங்கும் இருக்கும்போது இம்மூர்த்தி தான் எதற்கு ? மேலும் கோவிலுக்குச் சென்று கடவுளைத் தரிசிப்பதாகவல்லவோ எல்லோரும் சொல்கிறார்கள். கடவுள் கோவிலில்தான் இருக்கிறார். மற்றவிடங்களில் அவரில்லை என்றல்லவா சொல்லவேண்டி வருகிறது !

ப. மு. :—மந்தமதிகளான சாதாரண ஜனங்கள் பகவானிடத்தில் பக்திகொள்வதற்கு அவரது ஸகுண மூர்த்தியை உபாஸிப்பது இன்றியமையாதது. விஷயங்களி லீடுபட்ட மனதுள்ள பொதுமக்களுக்கு விஷயங்களில் தான் இந்திரியங்கள் செல்லும். அதிஸூக்ஷ்மமாயும் இந்திரியங்களுக்குப் புலப்படாததாயும். இந்திரியங்களுக்குச் சக்தியைக் கொடுக்கிறதாயும், நிர்குணமாயும், ரூப மற்றதாயும் உள்ள பகவானைப் பரிபக்குவமடையாத மனது படைத்தவர்களால் அறிய முடியாது, துக்கங்

களுக்குக் காரணமான விஷயங்களைச் சேவிப்பதி லிருந்து அவ்விந்திரியங்களைத் திடீரென்று தடுப்பதற்கு ஜனங்களுக்கு ஆற்றல் போதாது. அதற்காக இந்திரியங் களின் ப்ரவிருத்திகளைத் திருப்பி அவைகளுக்குச் சேவிக் கும்படி ஒருவஸ்துவைக் கொடுத்தாலொழிய அவைகள் வாளாயிராது. குரங்கைக் காட்டிலும் இந்திரியங்கள் சபல மானவை. பல்வேறு விடங்களில் சிதறும் தண்ணீரை ஒழுங்குபடுத்தி, வாய்க்காலில் விட்டு பாசனத்திற்கு உப யோகப்படுத்தினுல்தான் பயிர் விளையுமே யல்லாது தண் ணீர் எல்லா பூமியிலுமிருந்தாலும் அதனுல் பயிருக்கு ஒரு விதமான லாபமுமில்லை. அதுபோல் இந்திரியங்கள் விஷயங் களில் அலைந்து கஷ்டப்படுவதைத் தடுத்து அவைகளைத் தன் பேரின்பத்திற்குச் சாதகமான மார்க்கங்களில் செல்லும் படிச் செய்தல்வேண்டும். பார்க்கும்படியான கண்ணைப் பார்க்காமல் இருக்கச்செய்வது கஷ்டம். ஒரு வஸ்துவைப் பார்ப்பதிலிருந்து தடுத்து வேருெரு வஸ்துவைப் பார்க்கும் படி செய்வது சுலபம். நிர்குணமான ரூபமற்ற பகவானைப் பார்ப்பது முடியாத கார்யமென்ருேம். அப்பகவானைக் கண்டுகளிப்பதுதான் பேரின்பமென்றும் அதற்குத்தான் ஒவ்வொரு மனிதனும் உலகத்தில் பிறந்திருக்கிருனென்றும் மஹான்கள் கருதுகிருர்கள். அப்பகவான் எங்கும் நிறைந் திருப்பதால், அவரில்லாத வஸ்துவே உலகிலில்லாததால் எல்லாம் பகவத்ரூபமே. எல்லா ரூபத்தையும் பகவான் என்றும் அவர் எங்கும் வியாபகர் என்றும் அவர் இவ்வஸ்து விலும் இருக்கிருர் என்றும் சொல்வது பொருத்தமே. தன் மனதிற்கு எந்த ரூபத்தில் அதிகப் ப்ரீதி ஏற்பட்டிருக் கிறதோ அதைப் பகவாஞக உபாஸிப்பதால், இந்திரியங் களுக்கு மற்ற விஷயங்களில் செல்லும் ப்ரவிருத்தி குன்றி இந்த ரூபத்திலேயே ப்ரவிருத்தியேற்படுகிறது. இம்மூர்த்

தியை பகவத் பாவத்துடன், பக்தியுடன் கண்ணால் காணு வதும், கையால் அர்ச்சிப்பதும், மனதால் நினைப்பதும், நாக்கால் அவரது நாமங்களைச் சொல்வதும், காதால் அவரது கதைகளைக் கேட்பதும், தலையால் அவரை வணங்கு வதும், சரீரத்தால் அவருடைய பக்தர்களுக்கு உழைப் பதுமே கார்யமாக ஸர்வ இந்திரியங்களுக்கும் ஏற்படுமாத லால், மற்ற விஷயங்களில் அவைகள் செல்வதற்கு இட மில்லாததால், இப்பகவத் விஷயத்திலேயே அப்யஸிக்கப் பட்ட இந்திரியங்களும் மனதும் சுத்தி அடைந்து, ஸத்வ குணப் பெருக்கத்தால் இந்த ஸகுணோபாஸகன் ஞானநிஷ் டையை அடைகிறான். இதற்கு முக்கிய காரணம் மூர்த் தியை உபாஸிப்பது தான்.

விக்ரஹாராதனை கூடாது என்று சொல்லுகிறவர்கள் கூடக் கடவுளை வணங்கும் காலத்தில் ஒரு ரூபத்தை மன தால்தியானம் செய்தே தீரவேண்டும். ஒரு விக்ரஹத்தை ஒப்புக்கொள்ளாவிடினும் ஒரு பிரகாசத்தையோ, அல்லது ஒரு சப்தத்தையோ மனதால் நினைத்தே தீரவேண்டும். பிரகாசம் என்றால் அதுவும் ஒரு ரூபமே. எவ்விதத்திலும் ஸர்வகதனான பகவானை ஒரு ரூபத்தில் தியானிப்பதாகவே ஆகிறது. எங்கும் பிரகாசமாயிருந்தாலும் அப்பிரகாசத்திற் கும் ஒரு எல்லை யுண்டு. எல்லையற்ற பிரகாசமாயிருந்தால் அது மனதினால் நினைக்கப்படமுடியாது. அப்படிப்பட்ட பிரகாசத்தைத் தியானிப்பது என்பது முடியாத காரியம். எல்லையற்றது என்றால் இந்திரியங்களால் அறியப்படாத தாகும். மனதால் அறியப்படுகிறதென்று ஒப்புக்கொண்டு அது எல்லையற்றது என்றும் சொல்வது பிதற்றலாகும். ஆகவே அவர்களும் தங்களுக்குள்ள ஒரு அவிவேகத்தினால் ஏற்பட்ட த்வேஷத்தால் விக்ரஹ ஆராதனையை யெதிர்க்

கிறார்களே யல்லாது உண்மையாக அவர்களும் சகுண மூர்த்தியை உபாஸனை செய்கிறவர்கள்தான் என்று ஏற்படுகிறது.

ஸகுணமான மூர்த்தியை உபாஸிப்பதால் சித்த ஏகாக்ரியம் ஏற்பட்டு மனம் பக்குவத்தை அடைந்து பகவத் ஸூக்ஷ்மதத்வ விஷயங்களை அறியுந் தன்மை யேற்பட்டுக் காலக்ரமேண நிர்குணமான பகவத்ஸ்வரூபத்தை அடைய முடிகிறது. கடவுளின் ஸகுண மூர்த்திகள் பல. அம் மூர்த்திகளில் பகவத் பாவனையுடன் எதை உபாஸித்தாலும் பகவத் பக்தி ஏற்படுகிறது. அம்மூர்த்தி சுத்தமான இடத்தில் சுத்தமான உலோகங்கள், கற்கள் முதலியவைகளால் மனதிற்குப் பார்ப்பதற்கு ஆனந்தமான தோற்றத்தோடு கூடியதாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படிப் பட்ட விஷயங்களை நமது சாஸ்திரங்களில் ஒரு பாகமான ஆகம சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆகம சாஸ்திரப் படி வேதமந்திர சக்திகளால் பிரதிஷ்டை பண்ணப் பட்ட கடவுளின் மூர்த்திகள் விளங்கும் இடங்களே கோவில்களென்று சொல்லப்படுகின்றன. கடவுளெங்கும் இருந்துகொண்டு பக்தர்களுக்கு அவர்கள் உபாஸிக்கும் மூர்த்தியாகவுமிருக்கிறார். கோவில்களில் பிரதிஷ்டை பண்ணப்பட்ட விக்ரஹங்களில் பகவத்சான்னித்யம் அதிகம். பகவான் எல்லா வஸ்துக்களிலுமிருந்தாலும் அவரை மறைத்து சாமான்ய ஜனங்களுக்கு அவரது ஸான்னித்யத்தை அனுபவிக்க முடியாதபடிச் செய்யும் தோஷங்கள் பல உள. அத்தோஷங்களை நீக்கினால் எப்போதும் ஸ்வயம்பிரகாசமாய் விளங்கும் பகவானும் காணப்படுகிறார். நெருப்பு எல்லா இடங்களிலுமிருந்தாலும், அதைத்தடுக்கும் தோஷங்கள் குறைந்த இடங்களில்

சீக்கிரமாகவும், அதிகமாயிருக்கும் இடங்களில் தாமதமாக வும் அது கிளம்புவதுபோல், பகவத் சான்னித்யத்திலும், சீக்கிரம் தாமதம் என்ற பேதங்களுண்டு. நனைந்த கட்டை யிலுள்ள தோஷங்களான தண்ணீரைப் போக்கடித்தவுடன் அதில் நெருப்பு சீக்கிரம் கிளம்புகிறது. ஈரக் கட்டை யில் நெருப்பு உண்டாக தாமதமாகிறது. அப்படித்தாம தமாவதால் அக்கட்டையில் நெருப்பு இல்லை என்று சொல்லக்கூடாது. அதுபோலவே பகவான் எங்கும் இருந்தாலும் வேதமந்திரங்களினுலும் ஆகமசாஸ்திர அனுஷ்டானங்களினுலும் பகவத் சான்னித்யத்தை மறைக் கும் தமோகுண தோஷங்களைப் போக்கடித்த கோவில் களில் பகவத் சான்னித்யம் சீக்கிரம் கிடைக்கிறதென்றும் மற்ற இடங்களில் அவ்வளவு சீக்கிரம் கிடைக்கவில்லை என்றும் சொல்வதால் பகவான் கோவிலில்தான் விளங்கு கிறார், மற்ற இடங்களிலில்லை என்று சொல்வதாக ஆகாது. கோவில்களில் பகவத் சான்னித்யம் அதிகமாத லால் அவ்விடம் சென்று ஜனங்கள் பகவத் அனுக்ரஹத் தைச் சீக்கிரமடைகிறார்கள் என்று சொல்வது பொருத் தமேயாகும்.

ரா :—எல்லா ஜனங்களும் பகவத் கருணைக்குப் பாத் திரர்களாக யிருக்கும்போது பஞ்சமர்கள் என்று சொல் லப்படும் சிலர்களைமட்டும் கோவில்களுள் போகக்கூடாது என்று சொல்வது நியாயமா ?

ப. மு. :—நான் என்னிஷ்டபடி அப்படிச் சொல்ல வில்லை. பின் சாஸ்திரங்கள் அவர்களைப் போகவேண் டாமென்று சொல்லுகிறதே! எந்த சாஸ்திரத்தால் கோவிலி லுள்ள சாமான்ய விக்ரஹத்திற்கும் கடவுளின் விசேஷ

ஆவிர்பாவமேற்பட்டதோ, அதே சாஸ்திரம் அந்த ஆவிர் பாவத்தை நிலைநாட்டும் மார்க்கங்களைச் சொல்லுமிடத்தில், இப்படியதைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல் லும்போது, பஞ்சமர்களைக் கோவிலுக்குள் வரக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறது. கோவிலை நம்புகிறவர்கள் இதையும் நம்பவேண்டும். சாஸ்திரம் சர்வ ஜனங்களுக் கும் ஹிதத்தையே சொல்லுகின்றது. அதில் பக்ஷபாத மில்லை. சில ஜாதிகளை உள்ளேவரக் கூடாது என்று சொல்லும் சாஸ்திரங்களின் உட்கருத்தை எல்லோராலும் அறிய இயலாது. மகான்களுக்கு மட்டுமே உண்மை புலப்படுமென்று முன்னமேயே சொன்னோம்.

பஞ்சமர்களைக் கோவிலுக்குள் போகக்கூடாதென்று சொல்லும் சாஸ்திரமே, அவர்களிடம் பூர்ண அன்புடன் அவர்களுக்கு மிகச் சுலபமாகக் கோவில் கோபுர தரிசனத் திலேயே, கர்ப்பக்ரஹத்தில் சென்று மூர்த்தியைத் தர்சிப் பவர்களுக்கு என்னபலன் உண்டோ அப்பலன் கிடைப் பதாகச் சொல்லுகிறது. அந்த சாஸ்திரத்தில் நம்பிக்கை யில்லாமல் கோவிலுக்குள் செல்லும் பஞ்சமர்களுக்கு மேலும் பாபம் அதிகமாகுமே யல்லாது, பகவத் தரிசனத் தால் புண்ய லேசம்கூட சம்பவிக்காது. மேலும் ஜன் மாந்திர புண்ய பாபங்களின் வசத்தால் அடையப்பட்ட இம் மானிடர்களின் ஜன்மம், அப்பாபங்களினின்றும் விலகக் கார்யங்களைச்செய்யாமல், மீண்டும் பாபத்தை அதிகரிக்கும் செயல்களான சாஸ்திரங்களை உல்லங்கனம் செய்து கோவி லுக்குள் போய் விக்ரஹ தரிசனம் செய்வது, பாபிகளின் கார்யமேயாகும். மேலும் பஞ்சமர்களுக்கு விக்ரஹதர்ச னத்திற்காக சிலவழிகளும், சாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கின்றன. தேர் திருவழா முதலிய தினங்களில் அவர்

கள் தேர் இழுப்பதற்கும், சமீபத்திலிருந்து பகவானைத் தரிசிப்பதற்கும் ஆகம சாஸ்திரம் அனுமதித்திருக்கின்றது. சந்த்யாவந்தனாதி அனுஷ்டானங்களால் பிராம்மணர்களுக்குச் சித்த சுத்தி ஏற்பட்டுப்பகவத் அனுக்ரஹம் கிட்டினாலும், அதே அனுஷ்டானங்கள் சூத்ரனுக்குச் சித்த சுத்தி ஏற்படுத்தாதது மட்டுமில்லாமல், மேலும் பாபத்திற்கும் காரணமாகின்றன. அப்படியே எவ்விடத்தும் பலாத்காரமாக சாஸ்திரங்களை உல்லங்கனம் செய்து கோயில் புகுந்து விக்ரஹ தரிசனத்தினால் பகவத்தரிசனம் கிடைத்து பக்தி ஏற்படும் என்று நினைக்கும் மக்களுக்கும், பக்தி ஏற்படாததுடன் பாபதோஷங்களும் அதிகரிக்கின்றன. பரதர்ம ஸேவையால் துக்கம்தான் விளையுமென்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது.

ரா :—பின் பகவானுடைய கருணையால் கடைத்தேரும் ஜீவர்கள் பலர் என்று சொல்லுகிறார்களே! அது உண்மையல்லவா?

ப. மு. :—பகவானுடைய கருணைக்கு எல்லையில்லை. அவர் அவ்யாஜகருணா மூர்த்தி. சூரியனின் பிரகாசத்தைப் போலவும் அக்னியின் உஷ்ணத்தைப்போலவும் என்றும் குறையாத கருணையுடையவர் பகவான். சூரியன், பாபி புண்யவான் என்ற பேதமில்லாமல் எப்படி சர்வஜீவர்களுக்கும் தன் ஸ்வபாவமானப் பிரகாசத்தை அளிக்கிறாரோ அது போல் பகவானும் தன்னுடைய கருணையை எல்லா ஜீவராசிகளிடத்தும் ஸதா பொழிகிறார். பகவானின் கருணையால் தான் நாம் உயிருடன் இருக்கின்றோம். சர்வ சக்திகளும் ஜீவர்களுக்கு ஏற்படுகின்றன. அரசன் குடிகளிடத்தில் கருணையுடனும் விசுவாசத்துடனுமிருக்கிறான். ஆனாலும்

தன்னுடைய ஆஞ்ஞையை மீறித் தானிட்ட சட்டத்தை புறக்கணித்துத் திருடும்படியான தன்னுடைய குடிகளின் ஒரு சார்பாரைத் தன்னுடைய நீதிபதிகள் தண்டிப்பதால் அரசனுக்குக் குடிகளிடம் கருணை இல்லை என்பது தகாது. அரசன் அவர்களைத் திருடத் தூண்டவில்லை. திருடக்கூடாது என்று வற்புறுத்தியும் அதையும் மீறித் திருடும் ஜனங்களைத் தண்டிப்பது சட்டத்தின் முறையாகும். அதுபோலவே, சர்வேச்வரனை பகவானுடைய கட்டளைகளாகின்ற ஸ்வதர்மங்களைப் புறக்கணித்துப் பரதர்மங்களை அகங்காரத் தாலும் மதிமயக்கத்தாலும் அனுஷ்டிப்பவர்களைப் பகவானுடைய கட்டளைகளே துன்பரூபமாகப் பரிணமித்துக் கஷ்டப்படுத்துகின்றன. எங்கும் பிரகாசமாயிருந்தாலும் கண்ணை மூடினவர்களுக்கு அப்பிரகாசமிருந்தும் அதன் பிரயோஜனம் ஏற்படவில்லை. அதுபோல் பகவானின் கருணை எங்கும் பொழிந்தாலும் அதை மறைக்கும் பாபத்தின் போர்வையால் மனக்கண் மூடப்பட்டிருக்கும் பாபிகளுக்கு அக்கருணையால் பிரயோஜனமில்லை. மனதால் தான் சூக்ஷ்மமான பகவத் தத்துவத்தை அறிய முடியுமானதால், அம்மனது பாபகர்மாக்களின் ஸம்ஸ்காரத்தால் காமாதி நோய்களால் தூஷிக்கப்பட்டு அலைந்துக் கொண்டிருக்கும் சமயத்தில், ததளிக்கும் தண்ணீரில் சூரிய பிம்பம் எப்பொழுதும் விழுந்து கொண்டிருந்தாலும் தண்ணீரின் அலைச்சலால் காணப்படாததுபோல், பகவானின் கருணையும் மனதில் பிரதி பலிக்கவில்லை. சதாசாரசத்கர்மானுஷ்டானங்களால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட மனது தெளிவை அடைந்து காமாதி விஷயங்களில் அலைச்சல்ஓய்ந்து இருக்கும் நிலையில்,பகவத் தத்வ சூக்ஷ்ம விஷயங்கள் அனுபவிக்கப் படுகின்றன. இப்படி மனது நிர்மலமாகிப் பகவத் விஷயங்களிலீடுபடுபவர்களைத்தான் பகவத் கருணையை யடைந்தவர்

களென்றும், அதை அனுபவிக்கக்கூடிய சத்வ குணத்துடன் கூடிய மனதின் பரிபக்குவமில்லாதவர்கள் அக்கருணையை யடையாதவர்களென்றும் உலகத்தில் மகான்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் பகவத் கருணையால் ஜீவர்களுக்கு க்ஷேமம் ஏற்படுகிறது என்பது உண்மையானாலும், அக்கருணையையடைய இதர சாதனங்கள் வேண்டாமென்று சொல்லும் பக்ஷத்தில், உலகமே வைகுண்டமாகவும், ஸம்ஸாரமே துக்கமற்றதாயும் அதற்குப் பரிகாரமே தேவையில்லையென்றும் ஏற்படும். ஆனால் உலகம் துக்கமயமாகவும் அத்துக்கத்திற்கு பரிகாரத்தை ஜனங்கள் ஸதா தேடிக் கொண்டுமிருக்கிறார்கள். சுகத்திற்கு விசேஷமான சாதனத்தைப் புகட்டும் வைதீக கர்மாக்கள் பகவானால் நியமிக்கப்பட்டவைகளானதால், அவைகளைப் பலத்தில் ஆசை வைக்காமல் பகவத் ப்ரீதிக்காக அனுஷ்டித்துச் சித்த சுத்தி அடைவதே பகவத் கருணைக்கு முக்ய ஸாதனமென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். இது தான் பகவத் கருணையின் தத்வமாகும்.

மேலும், சித்த சுத்தி அடைவதற்கு அநேக உபாயங்களிருந்தாலும் இக் கலிகாலத்தில் பகவத் கதாசிரவணம், பகவந் நாம சங்கீர்த்தனமிவைகளே அந்தரங்க சாதனங்களாகும். சமஸ்த தர்ம அனுஷ்டானங்களின் பலன் பகவானிடத்தில் மனதிற்கு ரதி ஏற்படுவதே. பகவந் நாம சங்கீர்த்தனமந்தரங்க சாதனமாக யிருந்தாலும், பகவத் கட்டளைகளாகின்ற ஸ்வதர்மங்களை அனுஷ்டிக்காவிடில் ஜனங்களுக்கு பகவத் பக்தி ஏற்படமாட்டாது. அரசன் கட்டளையை மீறினவன் ராஜத்வேஷிபோல், ஸ்வதர்மங்களை மீறினவனும் பகவத்வேஷி யாவான்.

ரா :—பகவானுக்குப் பிரியன் என்றும் துவேஷி என்றும் உண்டா?

ப. மு. :—உலக புத்தியை யனுசரித்து பகவானுக்குத் துவேஷமும், பிரியமும் கற்பிக்கப்படுகின்றன. உண்மையாக எவரிடமும் துவேஷம் அவருக்கில்லை. அவர் எல்லாருக்கும் ப்ரியமான ஆத்மாவாயிருக்கிறார். நிழலுள்ள மரமிருந்தாலும், வெய்யிலில் கஷ்டப்படும் சிலர் அம்மரத்தின் நிழலை அண்டி சுகப்படுகிறார்கள். சிலர் மரத்தினிடம் செல்லாமல் வெய்யிலில் கஷ்டப்படுகிறார்கள். சிலர் கஷ்டப்படுவதற்கும், சிலர் நிழலில் சுகப்படுவதற்கும் மரம் காரணமாகாது. அதுபோல் பகவானை அண்டினவர்களுக்கு மரத்தின் நிழலை அண்டினவர்களைப் போல் சுகம் கிடைக்கிறது. பகவானிடம் மனம் செல்லாதவர்களுக்கு மரத்தின் நிழலிடம் செல்லாதவர்களைப் போல் துக்கம் ஏற்படுகிறது. தன்னுடைய கார்யங்களாலேயே சுகமும் துக்கமும் ஏற்படுகின்றன. பகவானிடம் மனம் செல்கிறது. அதனால் சுகம் கிடைக்கிறது. பகவானை மனம் அடையவில்லை. அதனால் துக்கம் ஏற்படுகிறது. பகவத் பக்தனுக்குச் சுகம் கிடைக்கிறது. மற்றவனுக்கு துக்கம். பக்தனுக்கு மட்டும் பகவான் சுகத்தை கொடுக்கிறார், மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லையென்பது, இம்மரம் அவனுக்கு நிழலைக் கொடுக்கிறது, இவர்களுக்கு அந்நிழலைக் கொடுக்கவில்லை என்பது போலாகும். மரம் தன்னை அண்டினவர்களுக்கு நிழலைக் கொடுப்பதுபோல் பகவான் தன்னை அண்டினவர்களுக்குச் சுகமளிக்கிறார் என்று உலக ரீதியாகச் சொல்லப்படுகிறார்.

பகவான் மரத்தைப்போல் ஓரிடத்தில் மட்டுமில்லாமல் எங்கும் விளங்கியிருந்தாலும், “அவர் எங்கும் நிறைந்து

இருக்கிறார். அவருடைய சக்தியால்தான் எல்லா வ்யவகாரங்களும் நடக்கின்றன. அவர்தான் நமக்குப் பிரியமான ஆத்மாவாக இருக்கிற ''ரென்று அனுபவத்துடன் தெரிந்து கொள்பவர்களே பகவானை அண்டினவர்கள். அவர்களுக்குத்தான் பேரின்பம். அவர் எங்குமிருந்தாலும் அவரை இப்படித் தெரிந்து கொள்ளாதவர்கள் அவரை அண்டாதவர்களே. அவர்களுக்குப் பேரின்பமில்லை. ஞானத்தின் பலம் ஆனந்தம். அஞ்ஞானத்தின் பலம் துக்கம்.

ரா:—பின் கோவில்களில் பகவானிருக்கிறார் என்கிறார்களே! அதற்கென்ன பொருள்?

ப. மு.:—கோவில் என்றால் பாபமற்ற இடம் என்று பொருள். பாபமற்ற மனதில் எங்கும் நிறைந்த பகவான் விளங்குகிறார் என்று முன் சொன்னதுபோல் பாபமற்ற விடத்தில் பகவான் விளங்குகிறார். பாஞ்சபௌதிகமான இவ்வுலகில் நெருப்பு இல்லாத வஸ்துவே யில்லை. பின் நெருப்பு வேண்டுமென்றால் தீக்குச்சியைக் கிழிக்கிறான். உடனே நெருப்புக் கிளம்புகிறது. தாழையிலும் மற்ற வஸ்துக்களிலும் நெருப்பு இருந்தாலும் அவைகளிலுள்ள தோஷங்களின் சேர்க்கையால் நெருப்புச் சீக்கிரம் கிளம்புகிறதில்லை. சிலவற்றில் தோஷ பரிகாரம் செய்த பிறகு நெருப்புக்கிளம்புகிறது. நெருப்பு உடனே வேண்டும்போது தோஷத்தைச் சிரமப்பட்டுப் பரிகாரம் செய்துகொண்டு அப்புறம் வஸ்துவிடத்தில் நெருப்பை உண்டுபண்ணுவதைக் காட்டிலும் தோஷமற்றதான தீக்குச்சிகளைப்போல சில வஸ்துக்களை வைத்துக் கொண்டால் நெருப்பு ஆவிர்பவித்து ஸமயத்திற்கு உதவுகிறது. அதுபோல் பகவான் எங்குமிருந்தாலும் அவர் தோஷமற்ற நிர்மலமான இடங்களில்தான் சீக்கிரம் ஆவிர்பவித்து பக்தர்களுக்குதவுகிறார்.

விசேஷ ஸாதனங்களைப் புகட்டும் நம் சாஸ்திரங்களின் ஒரு பாகமான ஆகம சாஸ்திரம், பகவத் ஆவிர்பாவம், அனுக்ரகம், பிரத்யக்ஷம் முதலிய விஷயங்களைப் போதிக்கிறது. அதில் பகவானின் ஆவிர்பாவத்திற்கும், பூர்ண அனுக்ரஹத்திற்கும் ஸாதனமான சில முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்முறைகளின்படி ஏற்படுத்தப் பட்டவைகளே கோவில்களாகும். ஆகம சாஸ்த்திர அனுஷ்டானங்களாலும், வேத மந்திரங்களின் மகிமையாலும் ஸாமான்ய விக்ரஹத்திற்கும் பகவத் சாந்நித்யம் ஏற்பட்டுப் பிணிகளால் வருந்தும் சகல ஜனங்களுக்கும் அனுக்ரஹம் செய்யும் சக்தி ஏற்படுகிறது. சாமான்ய மரத்துண்டுக்குக் கல்லில் கிழித்தவுடன் நெருப்பு வரச் சக்தியில்லாவிடினும், அதன் நுனியில் கந்தகம் முதலியவைகள் தடவப்பட்ட தீக்குச்சியைக் கல்லில் கிழித்தால் உடனே நெருப்பு வருவதுபோல், சாமான்யக் கல்லுக்கோ, கட்டைக்கோ, பகவத் சாந்நித்யத்திற்கு அவ்வளவு சக்தி இல்லாவிடினும், ஆகமமந்திர பூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரஹத்திற்கு அச்சக்தி ஏற்படுகிறதென்பது பொருத்தமே. மலத்தை ஒழிக்க ஒழிக்க, உள்ளிருக்கும் தேஜஸ் ஜ்வலிக்கிறது. உள்ளே தேஜஸ் இருந்தாலும் சில இடங்களில் அதிக மலத்தால் அது சோபிக்கவில்லை. சாம்பலால் மூடப்பட்டிருக்கும் தணலில் நெருப்பு இல்லை என்று சொல்லலாமா? மலமான சாம்பலை ஊதினால் உள்ளிருக்கும் அக்னி கிளம்புகிறது. மலம் கொஞ்சமாக யிருப்பதால் தணலை ஊதினால் நெருப்பு வருகிறது. மலம் அதிகமாயிருக்கும் கட்டையை நன்ருகக் கடைந்து மலத்தை வெளிக்கிளப்பினால் உள்ளிருக்கும் அக்னி ஜ்வலிக்கிறது. எவ்விடத்திலும் நெருப்பை வஸ்துவில் புதிதாக உண்டுபண்ணவில்லை. வஸ்துவின் உள்ளே மறைந்திருக்கும் நெருப்பை மேலே தெரியும்

படி செய்வதுதான். அதுபோலவே பகவானைச் சிலையில் கோவில்களில் உண்டுபண்ணவில்லை. அக்னியைப்போல் பகவான் எல்லா பதார்த்தங்களிலும் இருந்தாலும், வஸ்துக் களின் மலத்தால் உள்ளிருக்கும் பகவான் காணப்படுகிற தில்லை. சூரியனால் உண்டாகும் மேகங்களின் கூட்டத்தால் சூரியன் மறைக்கப்பட்டுப் புலப்படாமல்போனால் சூரியனை இல்லை என்று சொல்லக்கூடாது. மேகங்கள் ஒழிந்தால் எப்போதும் பிரகாசிக்கும் சூரியன் காணப்படுகிறார். நமக்குக் காணப்படுகிறது, அல்லது நமக்குக் காணப்பட வில்லை என்ற இந்த இரண்டு காரணங்களாலும் சூரியன் பிரகாசிக்கிறார் அல்லது இல்லை என்று உலகத்தில் சொல் வது வழக்கம். ஆனால் சூரியன் எப்போதும் பிரகாசிக்கிறார். அதுபோலவேதான் பகவானும் எப்போதும் பிரகாசிக் கிறார். ஸ்வயம்ஜோதி ஸ்வரூபம். அருட்பெருஞ்ஜோதி, சூரிய சந்திரர்களுக்கும் வெளிச்சத்தை கொடுக்கிறவர் அவரே. பிம்பம் எதிரிலிருந்தாலும் கண்ணாடியில் அழுக்கு இருக்கும்போது பிரதிபிம்பம் தெரிகிறதில்லை. கண்ணாடி அழுக்கில்லாமல் தெளிவாக இருக்கும்போது பிரதிபிம்பம் விழுகிறது தெரிகிறது. பிரதிபிம்பம் எப்போதும் விழுந் துக் கொண்டிருந்தாலும் கண்ணாடியின் மேலுள்ள மலத் தால் காணப்படுகிறதில்லை. அதுபோலவே பகவான் எப் போதும் சாந்நித்யமா யிருந்தாலும் வஸ்துவின் தமோ குணத்தாலும் பார்க்கிறவன் மனதின் தமோகுணத்தாலும் காணப்படுகிறதில்லை. தமோகுண தோஷம் தீர்ந்தவுடன் உள்ளிருக்கும் பகவான் காணப்படுகிறார். இப்படிக் காணப்படுவதற்குத்தான் பகவான் சாந்நித்யமளித்தா ரென்று சொல்லப்படுகிறது. உலக புத்தியை அனுசரித்து பகவத் சாந்நித்யமும் பகவத்மறைவும் வ்யவஹரிக்கப் படுகின்றன.

ஆகம சாஸ்திரப்படிப் பிரதிஷ்டை பண்ணின விக்ரஹத்தில் தோஷங்களான தமோகுணங்கள் அழிந்து, மந்திரங்களால் ஸத்வம் விளங்கும்போது எங்கும் இருக்கும் பகவான் அதில் பிரகாசிக்கிறார். முகத்தின் பிரதிபிம்பம் சுவற்றிலும், கட்டையிலும் விழுகிறது. ஆனால் சுத்தமானக் கண்ணாடியில் விழும்போது அது காணப்படுகிறது. மற்றவைகளில் காணப்படுகிறதில்லை. அதுபோலும் பகவான் மந்த்ரபூதமான பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரஹங்களில் விளங்குகிறார். மந்த மதிகளும் பகவத் அனுக்ரஹத்தைப் பெற கோவில்கள் அத்யாவசியமாகும்.

ரா:—புண்யமூர்த்தியான பகவான் தன்னிடம் வரும் பாபிகளையும் பரிசுத்தம் செய்யும்போது சண்டாளர்களென்ற ஒரு ஜாதியை மட்டும் சுத்தம் செய்யவில்லையா?

ப. மு.:—இக்கேள்விக்கு விஸ்தாரமாக முன்னமேயே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. பகவான் ஜீவர்களைப் பரிசுத்தம் செய்கிறார் என்றால், மண்ணைப் போட்டு தண்ணீர் விட்டு சுத்தி செய்வதுபோல் அவர் செய்கிறார் என்று அர்த்தமல்ல. அவர் எல்லோருக்கும் ஸாக்ஷி. விளக்கைப் போலிருக்கிறார். விளக்கு இருட்டைப் போக்கும். அது இருட்டிலிருந்த தேளையும் மறைந்திருந்த பவுனையும் விளக்கிக்காட்டுகிறதே ஒழிய, தேளைக் கொன்று மறைந்த பவுனை எடுத்துக் கொடுக்கவில்லை. இரண்டிற்கும் விளக்கு ஸாக்ஷிதான். விவேகி தேளிலிருந்து விலகிப் பவுனை எடுத்துக் கொள்ள வேண்டும். அதுபோல் பகவானும் எல்லா இந்திரியங்களுக்கும் அவ்வவ்விஷயங்களைக் கிரஹிக்கச் சக்திரூபமாகயிருக்கிறார். அந்தந்த இந்திரியங்களின் பூர்வ வாஸனையே அவ்வவ்விந்திரியங்களின் பிரவிருத்திகளுக்குக் காரணம் என்று சொன்னோம். அவ்வாஸனையைச் சரிப்

படுத்தி ரஜோதமோ வாஸனையைப் போக்கி, ஸத்வ வாஸனையை விருத்தி செய்யக்கூடிய விசேஷ சாதனங்களான சாஸ்திராசார்ய சம்பிரதாயங்களை அதிகச் சிரமப்பட்டு நியமத்துடன் அப்யஸித்தால் சித்தம் ஸத்வமாகி, ஸத்தான பகவத் விஷயத்தில் பிரவிருத்தி ஏற்பட்டு, அது அந்த ஸாதகனை பகவத் பேரின்பத்தில் சேர்க்கிறது. மனது ரஜோதமோ குணங்களை ஒழித்து ஸத்வ குண ஸம்ஸ்காரத்தை அடைவதே பாபம் போய் புண்ணியம் ஏற்பட்டது என்று உலகத்தில் சொல்லப்படுகிறது. பகவானும் இப்படித்தான் ஸத்வ வாஸனையுடன் கூடிய மனதில் பிரகாசிப்பதால், பகவான் பாபத்தைப் போக்கிப் புண்ணியத்தை உண்டுபண்ணுகிறார் என்று உலகத்தில் சொல்லப்படுகிறார். ஸத்வ வாஸனையுடன் கூடிய ஸ்வதர்மானுஷ்டான பகவந் நாம சங்கீர்த்தனாதி கார்யங்களே ஜீவனுடைய பாபத்தை ஒழிக்க வல்லன. சண்டாளர்களுக்கு ஸத்வகுணம் அதிக மில்லாததாலும் தமோகுண ஸ்வபாவம் மேலிட்டிருப்பதாலும், அவர்கள் தங்களுக் குகந்த ஸ்வதர்மங்களைச் செய்து பாபத்தைக் கழிக்க வேண்டும். பகவந் நாம சங்கீர்த்தனத்தாலும் கோபுர தர்சனாதிகளாலும் அவர்கள் இஜ்ஜன்மத்திலோ ஜன்மாந்திரங்களிலோ ஸத்வ சுத்தியடைந்து பேரின்பமடைகிறார்கள்.

ரா:—வேதத்திலும், புராண இதிகாசங்களிலும் சண்டாளர்களென்ற ஜாதியைப்பற்றிச் சொல்லியிருக்கிறதா?

ப. மு. :—ஆம். சாந்தோக்ய உபநிஷத்தில் ஐந்தாவது அத்தியாயத்தில் ஜீவர்களின் இறப்பு, பிறப்பு, இதற்கு மத்தியில் நடக்கும் விஷயங்களைப்பற்றி விசாரிக்கும் பஞ்சாக்னி வித்தையின் முடிவில் சண்டாளர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறது:— "புண்யவாஸனையுள்ள அனுசாயிகளான

ஜீவர்கள் உத்தமமான ஜன்மங்களையும், பாபவாஸனையுள்ள அனுசாயிகள் நாய் ஜன்மத்தையோ பன்றி ஜன்மத்தையோ, சண்டாள ஜன்மத்தையோ அடைகிறார்கள்" என்றும், ராமாயணத்தில் "குருவான தன்னை அவமதித்ததால், த்ரிசங்குவிற்குச் சண்டாள ஜன்மம் வரும்படி வசிஷ்டர் சபித்தாரென்றும், அத்ரிசங்கு அச்சண்டாள சரீரத்துடன் ஸ்வர்க்கத்திற்குச் செல்ல, இந்திரன் ஆங்கு அவரை அனுமதிக்காமல் தள்ளிவிட்டா" ரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பரமஹம்ஸ பரிவ்ராஜக சங்கர பகவத்பாதாசார்யாள் காசியில் ஸ்ரீ விச்வநாதரைத் தரிசிக்கச் செல்லும்போது, வழியில் பரமசிவனே அவரைப் பரீட்சிக்கச் சண்டாள ரூபத்துடன் அவர் சமீபத்தில்வர, மஹா ஞானியான ஆசார்யாளும் சாஸ்திர வ்யவஹாரத்தை யொட்டி அச்சண்டாளனை "எட்டு, எட்டு" என்று சொல்ல, இருவருக்கும் தர்க்கம் நடந்தபோது, "பிரும்ம ஸாக்ஷாத்கார ஞானம் ஏற்பட்ட ஜீவன் எந்த ஜாதியில் பிறந்தவனானாலும் பூஜ்யனென்றும் அச்சாக்ஷாத்காரம் ஏற்படாத வரையில், வ்யவஹார காலத்தில் ஜாதி பேதம், தீண்டாமை முதலிய எல்லா சாஸ்திரக் கட்டுப்பாடுகளும் அனுஷ்டிக்கத் தகுந்தன" என்றும் 5 ச்லோகங்களால் மனீஷாபஞ்சகத்தில் சொல்லியிருக்கிறார்.

'மகா சிவபக்தனான நந்தனார், தான் எவ்வளவு சிவபக்தனாகயிருந்தாலும் கோவிலுள் நுழைவது சாஸ்திர விரோதமென்று வெளியில் நின்று சுவாமி தரிசனம் செய்தாரென்றும், தன் பக்தியினால் சன்னதியை மறைத்த நந்தியையும் விலகும்படிச் செய்தாரென்றும், உலகத்தை ஒட்டி நடராஜ பெருமானின் ஆஞ்ஞைப்படி பூததேகத்தைத் தீயால் சுத்தம்

செய்த பிறகே கோவிலில் நுழைந்தார்' என்றும் பெரிய புராணம் சொல்லுகிறது. இதுவரையிலும் அப்படியே தான் மதப்பற்றுள்ள ஹரிஜனங்கள் எல்லோரும் கோவில்களுள் நுழையாமல் பகவத் பக்தியுடன் சௌக்கியமாயிருக்கிறார்கள்.

ரா :—ஹரிஜனங்களுக்கு விமோசனம் வேண்டாமா? பகவத் அனுக்ரஹத்தால் அவர்கள் சௌக்கியமடைய வேண்டாமா? சாஸ்த்ரங்களவர்களைக் கோவில்களில் நுழைய அனுமதிக்காவிடினும், பகவதனுக்ரகம் அவர்களுக்குக்கிட்ட, நாமே அவர்களை உள்ளே செல்ல அனுமதிப்போமே!

ப. மு. :—சாஸ்திரங்களில் நம்பிக்கை யுள்ளவர்களுக்குதான் கோவில்களில் கடவுளிருக்கிறார் என்ற நம்பிக்கையுண்டு. நம்வேத சாஸ்திரங்களில் நம்பிக்கையற்ற முகம்மதியர் முதலியவர்களுக்கு நம் கோவில்களில் நம்பிக்கை யுண்டா? இல்லை. சாஸ்திரங்கள்தான் கோவில்களில் பகவான் விளங்குகிறார் என்று சொல்லுகின்றன. அதில் நம்பிக்கை உண்டு. அதே சாஸ்திரத்தில் இந்த ஜாதி இந்த இடத்தில் கோவில்களில் வரக்கூடாதென்று சொல்லி யிருப்பதில் ஜனங்களுக்கு நம்பிக்கையில்லை. இதே, கலியின் கோலம். பாதிச் சுரைக்காய்க் கறிக்கு, பாதிச் சுரைக்காய் விதைக்கு என்றால் உருப்படுமா? ஒருவன் இடுப்புக்குமேல் கிழவன் அவனே இடுப்புக்குக் கீழ்க் குமரன் என்பதுபோல் இவர்களின் சாஸ்திர நம்பிக்கையுமிருக்கிறது. நம்பினால் முழுவதும் நம்ப வேண்டும். இல்லையேல் முழுவதும் நம்பாமலிருப்பது விவேகியின் தன்மை. கோவில், இதை கௌரவிக்க

வேண்டும் என்ற சாஸ்திரத்தை நம்பி அக்கோவிலின் சாந்நித்யம் நிரந்தரமாக இருக்கச் சண்டாளர்கள் முதலிய ஜாதிகள் உள்ளே வரக்கூடாதென்று சொல்லும் அதே சாஸ்திரத்தை ஆக்ஷேபிப்பது மூடர்களின் கார்யம். மேலும் கடவுளுக்கு ஜனங்களின் தோஷங்களைப் பரிசுத்தம் செய்ய சக்தி உண்டா இல்லையா என்ற விஷயத்தையும் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஜனங்களின் தமோகுண தோஷத்தால் கடவுளுக்கு ஒருவித தோஷமும் ஏற்படாத தாயினும், சாம்பலால் மூடப்பட்ட நெருப்பு மறைவது போலும், மேகங்களால் மூடப்பட்ட சூரியனுடையப் பிரகாசம் மழுங்குவது போலும் ஜீவர்களுக்குக் கடவுளின் சாந்நித்யம் குறைகிறது. இதையும் விரிவாக முன்னமேயே சொல்லியுள்ளோம்.

"நாலு வர்ணங்களிலும் ஸ்வதர்மத்தை விட்டுப் பாபிக ளாயுள்ள கர்ம சண்டாளர்களை மட்டும் கோவில்களில் விடலாமா?" என்று கேட்கலாம். கோவில்களால் மதப்பற் றுள்ள ஜனங்களுக்குக் கிடைக்கும் லாபத்தை உத்தேசித் துக் கர்ம சண்டாளர்களையும் அவைகளில் நுழையக்கூடாது என்று வற்புறுத்துவது அவசியமாகும். அப்படி அவர் களைத் தடுக்காததாலும் சரிவர ஆகம சாஸ்திரப்படி பூஜை முதலிய தேவதா அர்ச்சனைகள் நடக்காததாலும் கோவில் களில் பகவத் சாந்நித்யம் குறைந்திருக்கிற விஷயத்தை யாரும் அறிவார்கள்.

ரா:—கர்ம சண்டாளர்களால் கோவில்கள் தூஷிக் கப்பட்டு, ஆங்கு பகவத் சாந்நித்யம் குறைந்திருக்கும் போது, ஜாதிச் சண்டாளர்களை மாத்திரம் ஏன் கோவில் களில் நுழைய அனுமதிக்கக் கூடாது?

ப. மு. :—ஒருவன் கையில் ஆயிரம் ரூபாயை யெடுத்துக்கொண்டுப் பிரயாணம் செய்யும்போது திருடர்களால் அப்பணம் அபகரிக்கப்பட்டுப் போய்விட்டது. திரும்பி வீட்டுக்கு வந்து அவன் பெட்டியைப் பார்க்கும்போது மீதி நூறு ரூபாயிருந்தது. அம்மிஞ்சிய ரூபாய் நூறையும் காப்பாற்றுவது நியாயமா? அல்லது ரூபாய் ஆயிரத்துடன் ரூபாய் நூறும் போகட்டுமென்று அதை வீசி எறிவது விவேகமா? ரூபாய் நூறைக் காப்பாற்றிக் கெட்டுப்போன ரூபாய் ஆயிரத்தையும் திரும்ப அடைய முயல்வது விவேகியின் கார்யம். அதுபோல் இவ்விடத்திலும், கர்ம சண்டாளர்களால் தூஷிக்கப்பட்ட கோவில்களை ஜாதி சண்டாளர்கள் சென்று மறுபடியும் கெடுக்காதபடி பாதுகாப்பதுடன், கர்ம சண்டாளர்களையும் உள்நுழையாதபடி கட்டுப்பாடு செய்வது மஹான்களின் கடமையல்லவா?

ரா:— ஹரிஜனங்களிலுள்ள ஜீவகாருண்யத்தாலேயாவது அவர்களுக்குக் கோயில்களில் நுழைய ஏற்பாடு செய்யலாமே?

ப.மு. :—ஜீவகாருண்யம் என்றால் என்ன? ஜீவர்கள்—பிராணிகள், காருண்யம்—அவர்களிடம் இரக்கத்துடன் இருக்கும் தன்மை. தன்னுயிரைப்போல் மற்றப் பிராணிகளையும் நோக்கும் தன்மை. ஜீவஹிம்ஸைக்கு எதிரிடை ஜீவகாருண்யம். ஜீவஹிம்ஸை எவ்விதத்திலும் இல்லாமல் ஒரு ஜீவனும் வாழமுடியாது. ஆகாரமில்லாமல் ஜீவனில்லை. பணமில்லாமல் ஆகாரமில்லை. பணம் சம்பாதிப்பதற்கு எவ்வளவு பொய், பரத்ரோகம், பரஹிம்ஸை செய்ய வேண்டியிருக்கிறது! உத்தியோகத்திலும், வியாபாரத்திலும், கிருஷியிலும், மற்ற எவ்விதத்திலும் பணம் சம்பா

திப்பது ஜீவஹிம்சையால்தான். ஆதலால் முக்கியமான ஜீவகாருண்யத்தை அனுஷ்டிப்பது அசாத்தியமான கார்யமாகும். சுயநலமற்றவர்கள், பிறருக்காக உழைப்பவர்களென்று சொல்லப்படும் மகாத்மாக்களும், முக்கியமான ஜீவகாருண்யத்தை அனுஷ்டிக்க முடியாது. இவரைக் காட்டிலும் அவர் ஜீவஹிம்ஸை கொஞ்சம் குறைவாகச் செய்கிறார். அவரைக் காட்டிலும் மற்றவர் குறைவு என்று இம்மாதிரித் தாரதம்யத்தால்தான் ஜீவகாருண்யம் உலகில் வழங்கப்படுகிறது. ஒருவனுக்கு ஒரு ஹிம்ஸை அவசியமாயிருக்கும். மற்றவனுக்கு அதே ஹிம்ஸை அவசியமாகாது. அவசியமான ஹிம்ஸையைத் தவிர வேறு ஹிம்ஸை கூடாதென்றால், எது அவசியம் எது அவசியமில்லை என்ற எல்லை யில்லாவிடில், மனம் போனபடி செய்கைகள் கிளம்பும் என்பதை முன்னிட்டு, மஹான்கள் சாஸ்திரத்தைப் பிரமாணமாகக்கொண்டு,அதில் எதைச் செய்யச் சொல்லியிருக்கிறதோ அது அஹிம்ஸை என்றும் அதில் எது நிந்திக்கப்பட்டிருக்கிறதோ அது ஹிம்ஸையென்றும் வ்யவஸ்தை செய்திருப்பதே பொருத்தமாகும். முன்னமேயே சாஸ்திரந்தான் முக்ய பிரமாணம், பரிபக்குவமடையாத மனம் பிரமாணமாகாதென்பதைப் பற்றிச் சொன்னோம். மனச்சாக்ஷி என்பது முக்கிய பிரமாணமாகாது. ஏமாற்றத்தை உண்டுபண்ணாது, உண்மை அறிவைக் கொடுப்பதே பிரமாணமாகும். மனம் சபலத்துடன் கூடியது. அது பிரமாணமாகுமா? மனம் சாக்ஷி. சாக்ஷி சொல்வது தீர்ப்பாகுமா? உண்மையும் பொய்யும் சாக்ஷி சொல்வது. நீதிபதி நிச்சயிப்பது கவனிக்கத் தகுந்தது. அதுபோல் சாஸ்திரம் ஹிம்ஸாஹிம்ஸைக்குப் பிரமாணம். பாமரர்களின் நோக்கமோ, ரஜோதமோ குணத்தாலும் அதன் கார்யமான நவீன நாக-

ரீகம், சுயநலம் முதலிய தோஷங்களுடன் கூடியிருந்தும் அதை வெளிக்காட்டாமல் மறைத்து, குற்றமற்ற ஜனங்களி டையே தேசகால வர்த்தமானங்களுக்குத் தகுந்தாற்போல், தங்கள் வாய் சாமர்த்தியத்தால் சொற்பொழிவு நிகழ்த்தி, பச்சை ஓந்திபோல் காலத்திற்குத் தகுந்த வேஷம்போட்டு, உண்மையாகச் சுயநலத்தையே கோரி மஹான்களென்று பெயர்பெற்றவர்களின் மனதில் தோன்றுவது எதுவோ அதுதான் ஜீவகாருண்யம் என்பது விவேகிகளுக்குச் சம் மதமல்ல. இந்திரியங்களை வசப்படுத்தி பகவானிடம் பதிந்த மனது படைத்து அதனல் ஐம்புலன்கள் அடங்கின பெரியோர்களே பூர்ணமாக அஹிம்ஸையைக் கையாளுபவர்கள். இக்காலத்தில் ஜீவகாருண்யம் பேசு பவர்கள் தங்கள் காமத்தை அடக்க முடியாமல் மேல்நாட்டு பொய் நாகரீகங்களில் பதிந்த மனதுடன் துஷ் பாண்டித்யங்களைப் பயின்று, துஷ்டர்களின் சேர்க்கையால் விவேகத்தை இழந்து, சிற்றின்ப போகத்தை யதேச்சை யாக அனுபவிக்கவே ஜாதிபேதக் கட்டுப்பாடு, தீண்டாமை, பால்ய விவாஹம் முதலிய தர்மங்களை யெதிர்த்து, ஆதார மற்றதாயும் முன்னுக்குப் பின் உதைவதாயும், நொடிக்கு நூறு வீதம் மாறும் தன்மையானதுமான பேச் சுக்களை பொது மக்களின் குற்றமற்ற நெஞ்சுகளில் புகுத்தி மயக்குகிருர்கள்.

சாஸ்திரமே தஞ்சமென்ற ஹிந்துக்களுக்குத் தனிமை யான ஜீவகாருண்யமென்பது பாபமே. கீதையில் க்ஷத்திரி யனை அர்ஜுனனுக்கு "யுத்தத்தில் ராஜாக்களையும், சைன் யங்களையும் கொல்வதே தர்மம். அப்படியில்லாமல் க்ஷத்தி ரியன் யுத்தத்தில் ஜீவகாருண்யத்தை மனம் போனபடிக் காட்டி யுத்தம் செய்யாவிடில் மகா பாபி" என்றும் 2-வது

அத்தியாயத்தில் பகவான் சொல்லியிருப்பதைக் கவனித்தல் நலம்.

பகவான் எங்கும் நிறைந்திருக்கிறார். அவரைத் திருப்தி செய்வதே உத்தம ஜீவகாருண்யம். ஒவ்வொரு ஜீவனையும் திருப்தி செய்ய முடியாததலால், அவர் ஒருவரைத் திருப்தி செய்தால் போதுமானது. அவரைத் திருப்தி செய்வது என்பது அவர் கட்டளைகளை அனுசரிப்பதேயாகும். அவர் கட்டளைப்படி நடக்காதவர்கள் அவருக்கும் உலகத்திற்கும் சத்ருக்களே. ஆதலால் சாஸ்திரமாகிற அவருடைய ஆஞ்ஞைகளை எவர்கள் பிரியமாகவும், நிஷ்பலமாகவும், கடமையாகவும் அனுசரிக்கிறார்களோ அவர்களே உண்மையான ஜீவகாருண்யம் உடையவர்கள். மற்றவர்கள் ஜீவஹிம்ஸை செய்பவர்களே. சர்வஞ்ஞான பகவானுக்குத் தெரியாத காருண்ய விசேஷம், கிஞ்சிஞ்ஞான மனுஷ்யர்களுக்கா தெரிந்துவிட்டது? தாற்காலிகமாக மருந்து அருந்துவதற்குக் கஷ்டமாயிருந்தாலும் நாளடைவில் ஆரோக்கியத்தைத் தரும் தன்மையை வைத்தியன் அறிந்து அதற்குத் தகுந்த முறையில் நோயாளிகளுக்கு ஔஷதங்களைக் கொடுப்பதுபோல், ஸம்ஸார வைத்தியரான பகவானும், அந்தந்த ஜீவர்களின் முன்னேற்றத்திற்கு வழியை தன் ஆக்ஞ்ஞாரூபமான சாஸ்திரங்களில் தெளிவாகச் சொல்லி யிருப்பதை எவர்கள் ஆட்சேபிக்க முடியும்? இரவும் பகலும் வேலை வாங்கி ரூபாய் முப்பது, ஒருவனுக்குச் சம்பளம் கொடுத்து, மற்றொருவனுக்கு ஒரு மணி வேலைக்கு அதே ரூபாய் முப்பது சம்பளம் கொடுத்தால் எவனிடம் யஜமானனுக்குப் பிரீதி யதிகம் என்று விசாரித்தால், பின் சொல்லப்பட்டவனிடமே. அதுபோல் பிராம்மணர்கள் ஸ்வதர்மானுஷ்டானஞ் செய்து வேதபாரா

யணத்துடன் கர்ப்பகிருஹத்தில் சென்று பகவானைத் தரிசித்தால் எந்தப் புண்ணியத்தை அடைகிறார்களோ, அப் புண்ணியத்தைச் சண்டாளன் ஒருவித நியமமும் இல்லாமல் வெளியில் நின்று கோபுரதரிசனத்தால் அடைகிறான் என்று சாஸ்திரம் சொல்லும்போது அவர்களிடம் தான் பகவானுக்கு கருணையதிகம் என்று ஏற்படவில்லையா?

சாஸ்திரத்துக்கு விரோதமான கார்யங்களால் பாபங்களே வ்ருத்தியாகுமே யல்லாது பக்திலேசமும் சித்திக்காது. பாபம் துக்கத்திற்குக் காரணமானதால், அதைக் கொடுக்கும் பாபச்செயலான ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை வற்புறுத்துவது ஜீவஹிம்ஸையாகும், ஜீவ காருண்யமாகாது.

ரா :—கோவிலிலுள்ள விக்ரஹத்திற்குப் பால், தயிர், தேன், சந்தனம் முதலிய விலையுயர்ந்த பண்டங்களை அபிஷேகம் செய்கிறார்களே! விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களைச் சாத்துகிறார்களே! விதவிதமான ஆகாரங்களைச் சமர்ப்பிக்கிறார்களே! பகவான் இவைகளை ஸேவிக்கிறாரா? நாட்டின் ஏழை மக்களுக்கு இவைகளின் ஏக தேசத்தை அளித்தாலும் அவர்கள் பசிப்பிணி அடங்குமே?

ப. மு. :—இக்கேள்விக்குப் பதில் சொல்லுமுன், பகவானின் ஸகுண விக்ரஹத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவேண்டும். ஒருவன் தெளிவான கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கிறான். அதில் முகத்தின் பிரதிபிம்பம் காணப்படுகிறது. முகத்தின் பிரதிபிம்பம் சோபிக்கவில்லையென்று பிம்பமான முகத்தைக் கழுவி அலங்கரித்துக் கொண்டு மறுபடியும் கண்ணாடியைப் பார்க்கும்போது

வெகு நன்ருக முகத்தின் பிரதிபிம்பம் சோபிக்கிறது. முன் முகத்தின் பிரதிபிம்பத்தைப் பார்த்தபோது அது அழகாக இல்லை என்று பிரதிபிம்பத்தைச் சோபிக்க, பிம்பமான முகத்தை அலங்கரித்தான். கண்ணுடியின் உள் விளங்கின பிரதிபிம்பத்தைச் சுத்தம் செய்யவில்லை. அதுவும் முடியாத கார்யம். பிம்பமான முகத்திற்கு அலங்காரம் செய்த உடன் பிரதிபிம்பம் சோபித்தது. பிம்பத்தின் அலங்காரம் பிரதிபிம்பத்திற்காகவே ஏற்பட்டது. பிம்பத்திற்காகவல்ல. சரீரத்திலுள்ள மனதுதான் கண்ணுடி. பகவானின் சகுண மூர்த்தியே பிம்பம். மனதாகிய கண்ணுடியில் அச்சகுண மூர்த்தி பிரதிபிம்பித்திருப்பதே ஜீவன். அஜ்ஜீவனுகிய பிரதிபிம்பம் ஆனந்தகரமாகவும் சோபையுடனும் விளங்க வேண்டுமானல், பிம்பமான சகுணவிக்ரஹத்திற்கு அலங்காரம் செய்யவேண்டும். அந்த அலங்காரமே ஜீவனுகிய பிரதிபிம்பத்தைச் சோபிக்கச் செய்கிறது. பிம்பமான விக்ரஹத்திற்கு ஸமர்ப்பிக்கும் தேன், பால் முதலியவைகளெல்லாம் பிரதிபிம்ப ஸ்தானமான ஜீவனுக்கே ஏற்பட்டவை. ஆதலால் சௌக்கியத்தையும் ஆனந்தத்தையும் விரும்பும் ஜீவர்கள் விக்ரஹ ஆராதனை செய்யவேண்டும் என்று ஏற்படுகிறது.

மேலும் முகத்தில் ஒரு பொட்டுப் போட்டால், பிரதிபிம்பத்தில் ஒரு பொட்டுத்தான் காணப்படுகிறது. பத்து ரூபாயைச் சிலவு செய்து பத்து ரூபாயைப் பெறுவது லாபமா? அதுபோல் பகவானுக்கு எவ்வளவு அர்ப்பணம் செய்யப்பட்டதோ அவ்வளவுதான் ஜீவனுக்குக் கிடைக்கிறது என்பதால் லாபம் ஒன்றுமில்லையே என்று கேட்கலாம். முகத்தில் ஒரு பொட்டுப்போட்டாலும், கண்ணுடியின் விசேஷத்தால் அது நூருகக் காணப்படும். ஒரு

விளக்குப் பக்கத்திலுள்ள கண்ணாடியின் விசேஷத்தால் ஆயிரம் விளக்குகள் போல் காணப்படுவதை நாம் கண்டிருக்கிறோம். சிறிய நுட்பமான சாமானும் பூதக்கண்ணாடியில் பெரியதாகவே காணப்படுகிறது. ஆதலால் பிரதிபிம்பம் கண்ணாடியின் விசேஷத்தை அபேக்ஷித்து அநேக மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது. அதுபோல் மனதாகிறக் கண்ணாடி பகவத் பக்தி என்ற விசேஷத்துடன் கூடியிருக்கும்போது பூதக்கண்ணாடிபோல், சிறியதாக பகவானுக்கு அர்ப்பணம் பண்ணப்பட்டதையும் பெரியதாக ஜீவனுக்கு அளிக்கிறது. ஆதலாலேயேதான் கீதையிலும்,

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः ॥

" பத்திரம் (வில்வ, துளசி தளம்), புஷ்பம், பழம், தீர்த்தம் முதலியவைகளை பக்தியுடன் கூடிய மனதுடன் எவன் எனக்கு அர்ப்பணம் செய்கிறானோ, அவைகள் மிகச் சிறியவைகளாயினும், என்னுடைய பக்தனால் என்னிடமவனுக்குள்ள அத்யந்தப் பிரியபாவத்துட னளிக்கப்படுகிறபடியால், நான் அவைகளை யுண்டுகளிக்கிறேன் " என்ற கண்ணனது மொழியும் இங்கு கவனிக்கத் தகுந்தது. பகவானுண்டு களித்த உடன் பக்த உலகம் முழுமையுமே களிக்கிறது என்று சொல்வது மிகையாகாது.

மேலும், பிட்டுக்கு மண் சுமந்த சுந்தரேசப்பெருமானை அரிமர்த்தன பாண்டியன் பிரம்பாலடிக்க அந்த அடி அவன் முதுகிலும் சராசரங்களான ஜீவர்களின் பேரிலும் விழுந்தது என்று திருவிளையாடற் புராணம் சொல்லுகிறது.

"பாசுபதாஸ்திரத்திற்காகக் கைலயங்கிரியில் தவம் செய்த அர்ஜுனன், லீலாவிக்ரஹமானுஷ ரூபத்தைத் தரித்த பரமேச்வரனுடன் யுத்தம் செய்யும்போது, தன் காண்டீபத்தால் பகவானை அடித்த அடி, அவன் முதுகிலும் எல்லாவுயிர்களின் முதுகிலும் பட்டது" என்று மஹா பாரதம் சொல்லுகிறது.

ஆதலால் மனதாகிற கண்ணாடிகளில் பிரதிபலித்த பகவானின் பிரதிபிம்பங்களே ஜீவர்கள் என்று ஏற்படுவதால், பகவானுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டதெல்லாம், முகத்தின் அலங்காரம் முகத்தின் பிரதிபிம்பத்திற்காவது போல், தன் சௌக்கியத்திற்காகவே ஏற்படுகிறது.

ரா:—பகவந்நாம உச்சாரணத்தால் சண்டாளனும் புனிதனாகிறான் என்று சொல்லுகிறார்களே?

ப. மு.:—இதைப்பற்றி முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. பகவந் நாம உச்சாரணத்தால் சித்த சுத்தி அடைந்து, பகவத் பக்தி ஏற்பட்டு, தீவிரபத்தியால் பேரின்பம் கிடைக்கிறது. பகவந் நாமம் சண்டாளனையும் புனிதனாகச் செய்கிறது என்பது உண்மையே. ஆனாலும் அவன் தன் ஜாதிமுறை தர்மங்களை உல்லங்கனம் செய்வது, அவனுடைய அகங்காரத்தின் ஆதிக்கத்தால்தான், பக்தியால் அல்ல. பக்தி இல்லை என்றால் என்ன பிரயோஜனம்? பக்தி என்பது பகவானிடத்தில் பிரதிப்பிரயோஜன மடையாது ஸ்வபாவமாக ஏற்படும் ரதி என்று சொன்னோம். அது பகவந்நாம சங்கீர்த்தனம், பாகவத ஸேவை, வேதசாஸ்திரங்களில் ஆழ்ந்த நம்பிக்கை, கௌரவ புத்தி இவைகளால் விருத்தியாகிறது. அப்படிப்பட்ட பக்தி தீவிரமாக எவனுக்குக் கிடைத்தாலும் அவனே மேலான

வன். அவனே க்ருதார்த்தன். பக்தியால் பகவான் வசப்படு கிறார். இப்பேர்ப்பட்ட பக்தி ஏற்பட்டவனுக்குச் சாஸ்திர தர்மங்களில் அதிக மரியாதை உண்டு. அவைகளைப் புறக் கணிக்க மாட்டான். பகவத் பக்தியின் பராகாஷ்டை அடையும் வரையில் தர்மங்களை ஈச்வரப்ரீதிக்காக அனுஷ் டித்துப் பரா பக்தி ஏற்பட்ட பிறகும் ஜகத்முழுவதையும் பகவத்ஸ்வரூபமாகப் பார்த்து ஆனந்தப்படுவான். ஆதலால் சண்டாளன் என்பதால் அவனைத் தாழ்மையுடன் பார்ப் பது அவிவேகிகளின் தன்மை. பகவந் நாமசங்கீர்த்தனம் பாபங்களுக்கு உத்தமமான பிராயச்சித்த மென்றும், பகவத் பக்தியில் அது ஜீவனை கொண்டுவந்து விடுகிறது என்றும், பகவத்பக்தி ஒவ்வொரு ஜீவனுக்கும் அவசியமென்பதையும் வற்புறுத்தவே, கீதையிலும் பாகவதங்களிலும் பகவத் பக்தி யின் பெருமையை விளக்க சில ச்லோகங்கள் உள. "பாபியாயினும் என்னை இடைவிடாது பஜிப்பவன் ஸாதுவே"—கீதை. "சண்டாளனாயினும் பகவந்நாமத்தை ஒருதரம் சொன்னால் ப்ரும்மஹத்யாதி பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" பாகவதம். இவைகள் பக்தியின் பெரு மையைப் புகட்டுகின்றன.

மாடியில் ஏறின பிறகு ஏணிவேண்டாம். அக்கரை சென்ற பிறகு படகுவேண்டாம். அதுபோல் பராபக்தி யினால் பகவத் சாக்ஷாத்காரம் ஏற்பட்ட பிறகு சாஸ்திர தர்மங்களும் ஜாதிதர்மங்களும் அனுஷ்டிக்கப்பட வேண் டாம். லக்ஷ ரூபாய் சம்பாதித்த பிறகு ஒருவனிடமும் வேலைசெய்ய வேண்டாமென்றால் லக்ஷரூபாய் சம்பாதிப் பதற்குமுன் கட்டாயம் வேலை செய்தே தீரவேண்டும் என்று ஏற்படுகிறது. அதுபோல் பகவத் சாக்ஷாத்காரம் ஏற்படும் வரையில் ஜாதி ஆச்ரம தர்மங்கள் எல்லாம்

அனுஷ்டிக்கத் தகுந்தவைகளே. மனம்போனபடி காமத்தில் ஈடுபட்டு அழியாமலிருக்க வேண்டுமானல் சாஸ்திர விஹிததர்மங்களுக்கு உட்பட்டு நடப்பதே முறையாகும்.

ரா:—கோவில்களில் பகவத் சாந்நித்யம் ஏற்படுகிறதென்றீர். பஞ்சமர்கள் கோவில்களில் நுழைவது தகாததாயிருக்கும் பக்ஷத்தில் அவர்களைத் தன்னிடம் வர வேண்டாமென்று சர்வஞ்ஞருன கடவுள் சொல்லாதலால் அவர்களைக் கோவில்களில் செல்வதற்குக் கடவுள் அனுமதிப்பதாகவே ஏற்படுகிறது!

ப மு.:—உம்முடைய இந்த அனுமானம் மிக அல்பமானதே! இன்னும் பெருத்த அனுமானம் செய்யக் கூடாதா? "கோவில்களிலுள்ள விக்ரஹத்தை கஜினி முகமது முதலியவர்கள் உடைத்தபொழுது, அவ்விக்ரஹத்தில் கடவுள் இருந்திருந்தால் தன்னை எதிர்த்தவர்களையும் அவமதித்தவர்களையும் ஒழித்திருப்பாரே! அப்படி அப்பொழுதே அவர்களை ஒழிக்காத காரணத்தால், கடவுள் விக்ரஹத்தில் இல்லை என்று ஏற்படுகிறது" என்றும் நீர்வாய் கூசாமல் கேட்கலாமே! "கடவுளின் விக்ரஹத்தின்மேல் எலி ஓடுகிறது. கோவிலில் வெளவால்கள் கூடுகட்டிக்கொண்டு அசுத்தம் செய்கின்றன. அவ்விடம் கடவுளிருந்தால் அவர் அவைகளைத் தடுக்காமலிருப்பாரா" என்றும் நீர் கேட்கலாமே!

ரா:—ஆம்.

ப. மு.:—நீர் அபிப்பிராயப்படுவதைத் தெளிவுபடுத்துகிறேன். (1) கோவிலிலுள்ள மூர்த்தித் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளாததால் கடவுள் விக்ரஹத்தில் இல்லை என்கிறீரா? (2) அல்லது கோவிலில் பஞ்சமர்கள் நுழைவது சாஸ்திர விரோதமென்றுல் அவர்களை வரவேண்டாம்

என்று சொல்லச் சக்தியிருந்தும் கடவுள் பேசாமலிருப்ப தால், அவருக்குப் பஞ்சமர்கள் கோவிலில் நுழைவது சம் மதம்தான் என்கிறீரா?

ரா:—சரியாகத் தெளிவு படுத்தினீர். என் சந்தேகங் கள் இவையே!

ப. மு.:—ஸர்வசக்தரான கடவுள் விக்ரஹத்தில் இல்லை என்று சாதிப்பதற்கு, அவர் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளாததுதான் காரணம் என்று உரைத்தீர். அக்கார ணம் தூஷிதம் என்று நிரூபித்தால் உம்முடைய பிரதிக்ஞைக் கும் பங்கம் ஏற்படும். கடவுள் எங்கும் நிறைந்தவர் என்று ஒப்புக்கொள்ளுகின்றீர். எங்கும் நிறைந்தவரை இவ்விக்ர ஹத்தில் மட்டும் இல்லை என்று சொல்லுவது பிதற்றலாகும். இவ்விக்ரஹத்தில் கடவுள் இல்லாவிடில் அவர் எங்கும் நிறைந்தவரல்ல என்று நீர் ஒப்புக்கொள்ள வேண்டும். அது சம்மதமா? அது சம்மதமென்றால் கடவுளுக்கு இவ்விக்ர ஹத்தில் இருப்பதற்குச் சக்தியில்லை என்றும் நீர் ஒப்புக் கொண்டதாக ஆகும். அதாவது, கடவுள் ஒருவர் உண்டு, அவருக்குச் சர்வசக்தியும் கிடையாது என்று நீர் சொல்வ தாக ஏற்படுகிறது. தன்னைத் தானே காப்பாற்றிக்கொள் ளாத காரணத்தால், விக்ரஹத்தில் ஸர்வசக்தியுள்ள கடவுள் இல்லை என்று முதலில் நீர் பிரதிஞ்ஞை பண்ணினீர். பிறகு தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள ஸர்வசக்தியில்லா விடினும், அவர் கடவுளே என்றும் சொல்லுகிறீர். இது பிதற்றலே. ஆதலால் விக்ரஹம் தன்னைத் தானே காப் பாற்றிக் கொள்ளாததால், அதில் கடவுள் இல்லை என்று நிச்சயிப்பது பொருத்தமில்லையே.

சகுண விக்ரஹத்திலல்லவோ, இக்கேள்விகள் கிளம்பு கின்றன என்று இதற்கு பயந்து, சகுணத்தைப் புறக்

கணித்து, சிலர் நிர்குணத்தைச் கடவுளாக உபாஸிப்பதாகச் சொல்லுகிறார்கள். அதையும் விசாரிப்போம். கடவுளோ, சர்வவ்யாபி, சர்வசக்தன் என்று சாஸ்திரங்கள் சொல்லு கின்றன. சர்வவ்யாபியாக இருக்கும் பகவான் எவ்விடத் தும் இருப்பதால், தடியை யெடுத்து எதை அடித்தாலும் கடவுளின்மேல்தான் அடியும் விழவேண்டும். அப்பொழுது கடவுள் தன்னை அடித்தவரைத் தடுக்காததால், அவருக்குத் தடியைத் தடுக்கவோ, தன்னை யடித்தவரை மாய்க்கவோ சக்தி இல்லை என்று சொல்லலாமா? அல்லது அவர் தடி அடிபடும் இடத்தில் இல்லை என்று சொல்லலாமா? இரண்டு விதத்திலும் எப்படிச் சொன்னாலும் அவர் கடவுளல்ல என்று ஏற்படுகிறது.

நிர்க்குணக் கடவுளிடமும் நீங்கள் சொன்ன தோஷம் ஏற்படுவதால். அதை நீர் முதலில் பரிகாரம் செய்தால், சகுண விக்ரஹத்தில் நீங்கள் கற்பிக்கும் தோஷம் பறந்துவிடும்.

மஹாராஜா ரதத்தில் வீதியில் சென்றுகொண்டிருக் கும்போது, வழியில் ஒருவன் மலவிஸர்ஜனம் செய்துகொண் டிருந்தால், அவர் உடனே ரதத்தை விட்டிறங்கி அவனுக் குத்தண்டனை கொடுத்துவிட்டுப் பிறகு தன் கார்யத்திற்குச் செல்வது வழக்கமில்லை. அவன் செய்கையைக் கவனித்து, அரண்மனைக்குத் திரும்பிச் சென்றபின் தக்க அதிகாரிக ளிடம் அச்சம்பவத்தைத் தெரிவித்து, அவன் மறுபடியும் அப்படிச் செய்யாமலிருக்க அதற்கென்று ஏற்பட்டிருக்கும் போலீஸ் சுகாதாரக் காப்பாளர்கள் மூலமாகத் தண்டனை முதலிய ஏற்பாடுகளைச் செய்வதுதான் வழக்கம். அது போலவே ஸர்வேச்வரனும் தன் சட்டங்களை மீறும் ஆன் மாக்களைத் தன்னுடைய அதிகாரிகளான யம நவக்கிர ஹாதிகள் மூலமாகத் தண்டிக்கிறார் என்பதில் சந்தேக

மில்லை. கடவுள் அப்பொழுதே தண்டிக்காததால் அவருக்குச் சக்தியில்லை என்பது அறிவின்மையே.

மேலும், விக்ரஹம் பகவத் ஆவிர்ப்பாவத்திற்குக் காரணம் என்று சொன்னோம். மின்ஸாரகக் கம்பி எவ்வளவு இருந்தாலும் அதில் கரண்டு சென்றாலும், அதனால் பிரகாசம் கிடைக்கிறதில்லை. ஒரு பல்பை மாட்டுகிற விதிப்படி மாட்டினால் அக்கம்பியிலுள்ளப் பிரகாசம் பல்பு மூலமாகக் கிளம்புகிறது. பல்பிலுள்ள கேண்டில் பவருக்குத் தகுந்தாற்போல் பிரகாசத்தினுடைய விசேஷமும் ஏற்படுகிறது. இவ்விடத்தில் சகுணமூர்த்தியே பல்புஸ்தானமானது. பல்புகளிலுள்ள கேண்டில் பவரின் தாரதம்யத்தால் பிரகாசத்தின் தாரதம்யம்போல், விக்ரஹங்களிலுள்ள மந்திரசக்தியின் தாரதம்யத்தால், பகவத் சான்னித்யத்தின் தாரதம்யமும் ஏற்படுகிறது. பல்புகளை உடைப்பதால் கரண்டிற்கு அழிவில்லை. அதுபோல் கஜினி முகம்மதோ மற்ற எவர்களோ விக்ரஹங்களை உடைப்பதால் கடவுளுக்கு அழிவு ஏற்பட்டதாக ஆகாது. பல்புகளை சுத்தமாகத் துடைத்து வைப்பது போல் சகுண விக்ரஹத்தையும் எலி முதலியவைகள் வராதபடி சுத்தமாக வைத்தால் அதில் பகவத் சான்னித்தியம் அதிகமேற்படுகிறது. கரண்டிற்கு ரூபமில்லை. கடவுளுக்கும் ரூபமில்லை. கரண்டினால் நமக்கு உதவி வேண்டுமென்றால் அதற்கு ஒரு ரூபத்தை பல்புமூலமாக ஏற்படுத்த வேண்டும். அதுபோலவே பகவத் சான்னித்யத்திற்கும் அனுக்ரஹத்திற்கும் சகுண மூர்த்திகள் அத்தியாவசியமே.

“நாயைக் கண்டால் கல்லைக் காணோம். கல்லைக் கண்டால் நாயைக் காணோம்” என்று ஒரு பழமொழி உண்டு.

கல்லால் செய்யப்பட்ட நாயில், இது நாய் என்று அதனிடம் கவனம் செலுத்தும்போது, அதில் கல் என்ற புத்தி தாற்காலிகத்தில் மறைகிறது. இது கல் என்று அதனிடம் கவனம் செலுத்தும்போது, அதிலுள்ள நாய் என்ற புத்தி மறைகிறது. இதுபோலவே, விக்ரஹத்தை ஈச்வர பாவனையுடன் பார்ப்பவர்களுக்கு அது ஈச்வரனே. அதையே கல்லாகப் பார்ப்பவனுக்கு அது கல்தான். "மனம்போல் மாங்கல்யம்" என்று சொல்லும் பழமொழியும் இவ்விடம் பொருத்தமே. ஆதலால் மனோபாவத்தின் பெருக்கால், ஸாமான்ய விக்ரஹமும் சைதன்யத்துடன் பிரகாசிக்கின்றது. பக்தர்களுக்கு அது பெற்றோர்களைவிட ஹிதகரமாக உதவுகிறது. மனோபாவந்தான் இன்றியமையாதது. பிரஹ்லாத ஆழ்வார் கற்தூணிலிருந்து நரஸிம்ஹ மூர்த்தியைக் கிளப்பித் தூணைக் குத்தின ஹிரண்யகசிபுவுக்குக் கடவுள் ஸர்வாந்தர்யாமி என்பதை நிரூபித்துக் காட்டினார். மின்ஸாரக் கம்பியில் கரண்டு ஓடினாலும் பல்பு இருந்தாலும், பொத்தானைத் தளத்தாவிடில் கரண்டின் கார்யமான பிரகாசம் ஏற்படாததுபோல், ப்பிரதிஷ்டை பண்ணப்பட்ட மூர்த்தியில் கடவுளிருந்தாலும் உபாஸகனுடைய மனதாகிய பொத்தான், பக்தியால் தளரப்படுத்தப்படாவிடில் மூர்த்தியின் கார்யமான அபிவ்யக்தி ஏற்படமாட்டாது. பொத்தானை மூடிவிட்டு மின்ஸாரக் கம்பியைத் தொட்டால் அது சுடாததுபோல், பக்திச் சிரத்தையற்ற ஜனங்களுக்குக் கோவிலிலுள்ள மூர்த்தி ஒரு சாமான்யக் கல்தான். பிரஹலாதனை ஒத்த ஒரு பக்தனுக்கு, தான் உபாஸிக்கும் தெய்வமும் தன்னுடன் பேசுகிறது. இக்காலத்தில் மூர்த்தி பேசவில்லையே என்றால் பிரஹலாதனைப்போல் பக்தன் இல்லை என்று சொல்லவேண்டும்.

இரண்டாவது கேள்வியும் மேல்சொன்ன காரணங்களால் சமாதானம் சொல்லப்பட்டதாக ஆய்விட்டது. இருந்தாலும் மேலும் விளக்குவோம்.

கடவுளினிடையேதான் எல்லா ஜனங்களும் வியவகாரம் செய்கிறார்கள். கடவுள் எங்கும் நிறைந்தவர் அல்லவா! ஜனங்களில் சிலர் திருடவில்லையா? பொய் சொல்லவில்லையா? அக்ரமங்கள் செய்யவில்லையா? ஸாதுக்களைத் திட்டவில்லையா? இவர்கள் செய்யும் பாபகார்யங்களைக் கடவுள் அறிந்திருந்தும் அவர்களை இது செய்யத் தகாதது என்று நேரிடச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாத காரணத்தால் பாபிகள் செய்யும் துர்நடத்தைகள் பகவானுக்குச் சம்மதம் தானென்று சொல்லலாமா? இது போலவே பஞ்சமர்கள் பலாத்காரமாகக் கோவிலில் சென்றாலும் பகவான் அவர்களை எதிர்க்காத காரணத்தால் அவர்கள் செய்கை பகவானுக்குச் சம்மதம் என்று சொல்லலாகாது. திருடர்களுக்கும் பொய் சொல்லுகின்றவர்களுக்கும் கடவுள் எப்படி தண்டனை அளிக்கிறாரோ, அது போலவே வேதசாஸ்திரங்களை புறக்கணித்து பலாத்காரமாகக் கோவிலில் நுழையும் பஞ்சமர்களையும் அப்பாபத்திற்கு ஏற்க தண்டிக்கிறார் என்பது திண்ணம். “அரசன் இன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்” என்பதை கவனிக்கவும்.

ரா :—கோவில்கள் ஹிந்துக்களுக்காகவே கட்டப்பட்டன. ஹிந்துக்களில் ஒரு சார்பாரான பஞ்சமர்களுக்கு மட்டும் அவைகளில் நுழைய உரிமையில்லையா?

ப. மு. :—கோவில்கள் ஹிந்துக்களுக்குத்தான் கட்டப்பட்டன என்றாலும், அவைகள் சில ஹிந்துமகான்க

ளால் சில மதக்கொள்கைகளின்படி கட்டப்பட்டு, அவைகளைப் பராமரிக்கமட்டும் சிலப் பிரமுகர்களுக்கு ஒப்படைக்கப்பட்டனவே ஒழிய, அவைகள் பொதுஸ்தலங்கள் ஆகா. ஆலயங்களை நிர்மாணித்தவர்கள் சாஸ்திரங்களில் பூர்ண விச்வாசத்துடன் கூடினவர்கள். அவர்களின் கொள்கைகளைச் செவ்வனக் காப்பாற்ற தர்மகர்த்தாக்கள் கடமைப்பட்டவர்கள். அப்படியே இதுகாறும் தர்மகர்த்தாக்கள் நடந்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது சில கிளர்ச்சிக்காரர்கள் மதப்பற்று அற்று, சுயநலத்தைக்கோரி, சாஸ்திர விரோதமானதும் அனர்த்தகரமானதுமான தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை வற்புறுத்தினால், அதற்கு அந்த தர்மகர்த்தாக்கள் இடங்கொடுப்பது, அவ்வாலய நிர்மாணம் செய்தவர்களென்ன, சாஸ்திரமென்ன, கடவுளென்ன, தன் ஆத்மாவென்ன, எல்லோருக்கும் துரோகம் செய்தவர்களாகவும் தங்கள் கடமைகளை நழுவ விட்டவர்களாகவும் ஆவார்கள். இது பெரிய அக்கிரமம்.

ரா :— ஸ்ரீ யதிராஜ ராமானுஜாசாரியார் திருநாராயணபுரத்தில் தீண்டாதாரை ஆலயப்பிரவேசம் செய்ய அனுமதித்தாரே! திருப்பாணாழ்வாரை ஸ்ரீரங்கநாதன் தன் சந்நிதியில் சேர்த்துக்கொண்டாரே! ஸர்வஞ்ஞரான அம்மகான்கள் தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை அனுமதித்ததாக ஏற்படுகிறதே!

ப. மு. :—உடையவர் தனக்கு உதவின திருக்குலத்தடியார் என்ற தனிப்பட்ட ஒரு வகுப்பாருக்குத் தனக்கு அவர்கள் பூர்வத்தில் உதவியதை ஞாபகப்படுத்த, வருஷத்தில் மூன்று நாட்கள்மட்டும் திருநாராயணபுரத்தில் த்வஜஸ்தம்பத்தினிடமிருந்து பெருமாளைச் சேவிக்க அனுமதித்து,

பிறகு அந்த தோஷத்தை அகற்ற சம்ப்ரோக்ஷணம் செய்யும்படி நியமித்திருப்பதையும் நன்கு கவனித்தல் நலம்.

திருப்பாணுழ்வார் ஆலயப்பிரவேசத்தை விரும்பவேயில்லை. பகவதாஞ்ஞைப்படி பலாத்காரமாக அவரை லோககாரங்க மாமுனிவர் தன் தோளில் அமர்த்தி, பகவான் ஸ்ரீ ரங்கனுதரைச் சேவிக்கும்படி செய்து பகவானிடம் கலந்தார். இது அமானுஷமான கார்யம். இவைகளால் தீண்டாதார்களுக்கு ஆலயப்பிரவேசம் அனுமதித்ததாக ஆகவே ஆகாது.

ரா :—வேறு எல்லா மதங்களிலும், தங்கள் மதத்திற்குள் ஒருவிதப் பிளவில்லாமல் எல்லோரும் சமவுரிமையுடனிருக்கும்போது, நம் ஹிந்து மதத்தில் மட்டும் தீண்டாமை என்ற ஆபாசம் மறையாவிடில், ஹரிஜனங்கள் ஸமஉரிமையற்ற ஹிந்துமதத்திலிருப்பதைக் காட்டிலும் வேறுமதங்களைத் தழுவுவது தங்கள் சுயமரியாதையைக் காப்பதாக ஆகும் என்ற நிச்சயத்தாலும், இதற்குகந்த வேறுமதஸ்தர்களின் விஷமப் பிரசாரத்தாலும் தூண்டப்பட்டு, நம் ஹிந்து மதத்தைத் துறந்து வேறுமதத்தைத் தழுவுகிறுர்கள். இதனுல் நம் ஸமூகத்திற்கு பலம் குன்றி, இதர மதஸ்தர்களுக்குப் பலம் அதிகப்படுவதால், ராஜீயத்தில் நம்முடைய வாக்காளர்கள் குன்றி, நம்முடைய பிரதிநிதிகள் குறைவது மட்டுமில்லாமல், பிற மதஸ்தர்களுக்குப் பிரதிநிதிகள் அதிகமேற்படுவதால் நம்முடைய கோரிக்கைகள் பலிக்காமல் போவது நமக்கு பெருத்த நஷ்டமல்லவா ?

ப. மு. :—ராஜ்ய லாபத்திற்காக மதத்தை விட்டுக் கொடுக்கக் கூடாதா என்றல்லவா கேட்கிறீர்! ராஜ்யத்யத்தில் மட்டும் அபிப்பிராய மிருப்பவர்களுக்கு மதம் வேண்டாமே! மேல்நாட்டார்கள் மதத்திலா அதிகப்

பற்றுள்ளவர்கள். அவர்களுடைய ஸகவாசத்தால் உமக்கும் உமது தோழர்களுக்கும் அவ்வாஸனை பூர்ணமாக ஏறியிருக்கிறது. மதத்தில் தாத்பர்யமில்லாவிடில் எம்மதத்தை எவர்கள் தழுவினால்தான் என்ன நஷ்டம்? எல்லாரும் நம்மிந்தியர்கள்—கிறிஸ்தவன், முகம்மதியன் எல்லாரும் இந்தியர்களே. "மாவாகத்தின்றால் பணியாரமில்லை" என்பது போல் ஹரிஜனங்கள் கிறிஸ்தவமதத்தையோ, வேறு எம்மதத்தையோ தழுவினாலும் அவர்களும் இந்தியர்கள்தானே! எல்லா இந்தியர்களிடமுள்ள அன்பும், அவர்களிடமும் உமக்கு உண்டல்லவா? தேச முன்னேற்றத்தில், எல்லா இந்தியர்களுக்கும் உரிமை உண்டானதால், ஹிந்துக்களின் எண்ணிக்கைக் குறைந்தாலும், இந்தியர்களின் எண்ணிக்கைக் குறையாததால் ஹரிஜனங்கள் ஹிந்துமதத்தைத் துறந்து இதர மதங்களில் புகுந்தாலும், தேசமுன்னேற்றத்தில் மட்டும் தாத்பர்யமுள்ள உங்களுக்கு ஒரு வித நஷ்டமுமில்லை. ஹிந்துக்களின் பிரதிநிதித்வம் குறைகின்ற காரணத்தால் தங்கள் கோரிக்கைகள் ராஜீயத்தில் நிறைவேறவில்லை என்றும் சொன்னீர். இதிலிருந்து தங்கள் கோஷ்டியான ஹிந்துக்களின் கோரிக்கை வேறு, மற்ற மதஸ்தர்களின் கோரிக்கை வேறு என்று ஏற்படுகிறது. தேச முன்னேற்றம் என்ற கோரிக்கையிலோ அல்லது அக்கோரிக்கையை அடைய மார்க்கங்களிலோ, அபிப்ராயபேதம் இருப்பதாக ஏற்படுகிறது. இதற்குக் காரணம் மதபேதந்தான். முகம்மதியர்கள் முதலியவர்கள் மதப்பற்றுள்ளவர்கள். நீங்களோ மதத்தைக் காட்டிலும் தேச முன்னேற்றத்தில் பற்றுள்ளவர்கள். தேச முன்னேற்றத்திற்காக மதத்தை விட்டுக்கொடுக்கும் தன்மை உமக்கு உண்டு. இவ்விதம் ஸ்வமதத்தைத் துறந்து, மதாந்தரஸ்தர்களுடன் சேர்வதால் எல்லோருடைய கோரிக்கைகளும் நிறைவேறுவதுடன்,

உமக்கு ராஜீயத்தில் செல்வாக்கும் கிடைக்கிறது. ராஜ்ய லோபத்தால் ஹிந்துமதத்தில் பற்றுதல் குறைந்து, நீங்களே உங்களிஷ்டப்படி சீர்திருத்தப்பட்ட புதிய ஹிந்து மதமான, மதாந்தரத்தை பற்றும்போது, ஹரிஜனங்கள் மட்டும் வேறு மதத்தைத் தழுவினதால் உங்களுக்கு என்ன கஷ்டம்? மதத்தில் தாத்பர்யமில்லாதவர்களுக்கு மதத்தை இழப்பதால் ஒருவித நஷ்டமுமில்லை.

எங்களுக்கும் மதத்தில் தான் தாத்பர்யம் என்று உரைப்பீர்களேயாகில், அவ்விதமும் தீண்டாமையை ஆபாஸமாகக் கருதி மதாந்தரம் செல்லும் சிலர்களுக்காக வருத்தப்படவேண்டிய அவசியமில்லையே! "எம்மத சாஸ்திரங்களிலும் நம்பிக்கையற்றவர்கள் அம்மதத்தைச் சேர்ந்தவர்களல்ல" என்ற நியமத்தால், ஜாதி பேதம் தீண்டாமை முதலிய மதக்கொள்கைகளை அதிகார ஆதிக்கத்தாலும் பணச் செருக்காலும் உல்லங்கனம் செய்யும் பான்மையோர், ஹிந்துக்கள் என்று தாங்கள் சொல்லிக் கொண்டாலும், உண்மையாக அவர்கள் ஹிந்துக்களல்லர். ஹிந்துக்களல்லாதவர்கள் எம்மதத்தைத் தழுவினாலும், ஹிந்துக்களுக்கு என்ன நஷ்டம்? பதர்களுடன் கலக்காத சுத்த நெல்லுக்குத்தான் மதிப்பும் யோக்யதையும் உண்டே அல்லாது பதருடன்கூடிய நெல்லுக்கு அவ்வளவு மதிப்பும் யோக்யதையுமில்லை. ஒரு போர் பதரைக் காட்டிலும், ஒரு மரக்கால் நெல்தான் ஏற்றுக்கொள்ளத் தகுந்தது. அதுபோலவே ஹிந்து மதக்கொள்கையில் நம்பிக்கையில்லாத கோடி ஜனங்களைக் காட்டிலும் ஹிந்து மதத்தில் பூர்ண நம்பிக்கையுள்ள ஒரு உத்தமன் போதுமானது. ஒரு மூட்டைச் சாம்பலைக் காட்டிலும், நெருப்புள்ள ஒரு பொறி கார்யத்தைச் சாதிக்கும். ஹிந்து

தர்மங்களை ஆசரணை செய்யும் சிலர்களால் மதம் காப்பாற்றப்படுகிறது. ஹிந்து மதத்தில் தாத்பர்யமுள்ளவர்களுக்கு மதத்தில் நம்பிக்கையிழந்த ஹிந்து மதப்பதர்கள் மதாந்தரத்தைச் சேர்வதால் ஒருவித மத நஷ்டமில்லாததுடன், மதத்தின் ஆசரணையும் செவ்வனே அநுஷ்டிக்கப்படுவதால், மதத்திற்குப் பலம் அதிகம் ஏற்படுகிறது. ஆனால் மதப்பற்றற்ற ஹிந்துக்களுக்கு மதப்பற்று உண்டாகும்படி வித்தையைக் கற்பித்து, ஆங்காங்கு அவர்களுக்கு மத தர்மங்களையும் புகட்டி, மதத்தால் ஏற்படும் லாபங்களை எடுத்துக் காட்டவேண்டியது ஒவ்வொரு ஹிந்துவின் கடமையாகும். அப்படிச் செய்தும் அவர்களுக்கு ஜன்மாந்திர பாபத்தால், மத நம்பிக்கையும் ஆசரணையுமில்லையேல், அவர்களைப் பகவான்தான் அனுக்ரஹிக்க வேண்டும். அப்படி மதாந்திரத்தைத் தழுவும் ஹிந்து மதப்பதர்களின் இஷ்டத்திற்காகத் தீண்டாமை, ஜாதிபேதம், இவைகளை ஒழிப்பது நம்மதத்தையே அழிப்பதாகும். இது சம்மதமல்ல. மத சுதந்தரத்தை ஒட்டி எவர்களுக்கு எம்மதத்தில் சேர இஷ்டமோ, அவர்கள் அம்மதத்தைச் சேரட்டும். அந்த உரிமையை யார் தடுப்பது? தேச சுதந்திரம், மதம் இவ்விரண்டில் எதைப் பிரதானமாகக் கொள்பவர்களுக்கும், ஹிந்து மதத்தில் நம்பிக்கையற்றவர்கள் மதாந்தரத்தை அடைவதால் ஒருவித நஷ்டமுமில்லை. அவர்கள் மதாந்தரம் புகுவதற்காக ஸனாதன ஹிந்து மதத்தைத் திருத்தியமைப்பது மதப்பற்றற்றவர்களின் காரியமே யாகும்.

ரா :—நீர் சொல்வதெல்லாம் பொருத்தமே. ஆனாலும் பெரும்பான்மையோர்களை யொட்டியே சிறுபான்மையோரும் நடக்க வேண்டும். மக்களின் பெரும்பான்மையோர் ஹரிஜன ஆலயப்பிரவேசம் முதலிய மத சீர்திருத்

தங்களில் தீவிர இயக்கம் செய்யும்பொழுது, சிறுபான்மை யோரான நீங்களும் அவ்வியக்கத்துடன் ஒத்துழைப்பதே நியாயமல்லவா!

ப. மு. :—பெரும்பான்மையோரை யொட்டிச் சிறு பான்மையோர் நடக்க வேண்டுமென்றீர். மக்களின் பெரும் பான்மை, சிறுபான்மை என்ற பதங்களால் அவர்களின் எண்ணிக்கை மட்டும் குறிக்கப்படுவதாகச் சொல்ல முடி யாது. எண்ணிக்கையில் அதிகமுள்ள ஜனங்கள் எல்லோரும் ஒரு அரசனின் நோக்கத்தை அனுசரித்து நடப்பது உலகப் பிரசித்தம். ஜனங்களின் நோக்கத்தின்படி அரசன் நடப்ப தில்லை. ஆதலால் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பதங்களால் ஜனங்களின் எண்ணிக்கைக் குறிக்கப்படவில்லை. பின் ஜனங்களின் பலம்தான் குறிக்கப்படுகிறது என்று சொல்லவேண்டும். அரசன் ஒருவனாயினும் அவனுடைய பலம் அதிகமானதால் அற்ப பலமுள்ள குடிகள் அவனை அனுசரிக்கின்றார்கள் என்பது உண்மையே.

பலமென்றால் பந்து வர்க்கத்தாலும் செல்வத்தாலும் அதிகார ஆதிக்கத்தாலும் ஏற்படும் பலம், சரீரபலம், வாக் பலம், மனோபலம், இந்நான்கையும் முக்கியமாகக் குறிக் கிறது. செல்வத்தாலும் அதிகார ஆதிக்கத்தாலும் பந்து வர்க்கங்களாலும் ஏற்படும் பலம் நீடித்து நில்லாதது யாரு மறிந்ததே. சரீர பலமும் அப்படியே. முண்டனுக்கு இரண்டாளாயிருந்து நசுக்கி விடலாம். வாக்பலம் என் பது ருசியான சொற்பொழிவுகளால் சாமதான பேத முறைகளை அவலம்பித்து ஜன சமூகத்தை வசப்படுத்துவ தாகும். இது முன்சொன்ன இருவகை பலத்தை காட்டி லும் மேலானது தான். மனோபலம் எல்லாவற்றிலும் மேலானது. கல்விப் பயிற்சியினாலும், சன்மார்க்காதி

சேவைகளாலும் மனது விசாலத்தையும் பரிபக்குவத்தையும் அடைந்து விஷயங்களின் உண்மையை அறிந்து சத்வ குணப் பெருக்கால், வைராக்கியம், கடவுள் பக்தி இவைகளுடன் கூடி, பேரின்ப சுகத்தை அனுபவிக்கக்கூடிய பலமுள்ளதாக ஆவதால், அது எல்லா பலங்களைக் காட்டிலும் மேல் என்று மகான்கள் கருதுகிறார்கள்.

ஆதலால் எண்ணிக்கையில் பெரும்பான்மையான ஜனத்தொகையின் பலத்தைக் காட்டிலும், எண்ணிக்கையில் சிறு பான்மையான அறிஞர்களின் பலமே மேலானதாகும். பெரியோர்களால் தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வரும் சதாசார சன்மார்க்க சேவைகளே மனோ பலத்தை அதிகரிப்பவை. அவைகளைப் புறக்கணிப்பவர்கள் எண்ணிக்கையில் எவ்வளவு அதிகமிருந்தாலும் மனோபலம் குன்றியவர்களே. அவர்களுடன் மனோபலம் அதிகம் வேண்டும் என்பவர்கள் அனுசரிக்க வேண்டாம்.

மேலும் மத விஷயமான சீர்திருத்தக் கிளர்ச்சி சென்ற 25 வருஷங்களாகத்தான் ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் ஆயிரக்கணக்கான வருஷங்களில் இக்கிளர்ச்சிகளையும் சீர்திருத்தங்களையும் அறியிலோம். சிறுபான்மை, பெரும்பான்மையில் ஒன்றுபடவேண்டும் என்று நீர் சொல்வதை ஒப்புக்கொண்டாலும், ஆயிரக்கணக்கான வருஷங்களில் இருந்ததுபோலவே, இந்த இருபத்தைந்து வருஷங்களிலும் இருக்கவேண்டும் என்று ஏற்படுகிறதே யொழிய, சிறு பான்மைகளான இருபத்தைந்து வருஷங்கள் பெரும்பான்மையான ஆயிரக்கணக்கான வருஷங்களை தூஷிக்கக் கூடாது என்றும் ஏற்படுகிறது. இதுபோலவே மதவிஷயத்தில் இந்த இருபத்தைந்து வருஷங்களிலுள்ள சிறு பான்மையான ஜனங்கள், ஆயிரக்கணக்கான வருஷங்களி

லிருந்த பெரும்பான்மையோர்களின் ஒழுக்கப்படி நடக்க வேண்டும் என்றும் ஏற்படுகிறது.

மேலும் மதத்தின் உண்மை பிரத்யக்ஷத்திற்கு எட்டாதது. அதற்கு மத சாஸ்திரங்கள்தான் பிரமாணங்களாகும். அப்படிப்பட்ட விஷயத்தை லோகத்திலீடுபட்ட பொதுமக்களின் பிரத்யக்ஷத்திற்கு அனுகுணமாகத் தங்களிஷ்டம் போல் சீர்திருத்துவது நியாயமல்ல. ஹிந்துமத சாஸ்திரங்களை நம்பி அதன்படி ஒழுகும் சிலர்களே ஹிந்துக்கள். அவர்களுக்கு அச்சாஸ்திரங்கள் சொல்வதுதான் உண்மையாகும். அவ்வுண்மையான விஷயத்தைச் சாஸ்திரப் பயிற்சியும் ஆசரணையுமற்ற பலர்கள் வேறுவிதமாகக் கிளர்ச்சி செய்தால் அது உண்மையாகாதாதலால் ஒப்புக்கொள்ளத் தகுந்ததல்ல. அவ்வுண்மையான விஷயத்தையே, எண்ணிக்கையில் ஒருவனுயிருந்தாலும்,பிரமாண பூர்வமாகச் சொல்லுவானேயாகில், அது தள்ளத்தகுந்த தல்ல. பல பேர்களுக்காக உண்மை ஒருகாலும் மாறுது என்பதை கவனிக்கவும்.

பள்ளியில் ஒரு கணக்கிற்கு தொண்ணூற்றென்பது மாணவர்கள் தப்பாகவும், ஒரு மாணவன் சரியாகவும் விடையளித்தால், ஆள்பெருக்கத்தால் தொண்ணூற்றென்பது மாணவர்களும் தப்பாக விடையளித்திருந்தாலும் அதுதான் சரியென்றும், ஒருவன் சிறுபான்மையானதால் அவன் சரியாக விடையளித்திருந்தாலும், அது தவறு என்றும் சொல்லலாகாது. ஒருவனு யிருந்தாலும், சரியாகச் செய்தவன் ஏற்கத் தகுந்தவன். மற்றவர்கள் தள்ளத்தகுந்தவர்களே. இதுபோலவே, சப்தைக்கம்யமான சாஸ்திர விஷயத்திலும் பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் என்ற கிளர்ச்சிக்கு இடமில்லை.

ரா :—நீர் சொல்வது சரிதான். ஆனாலும் தேச முன்னேற்றத்தைக் கருதி நம் இந்தியாவின் அடிமைப் பிணியை யகற்ற நம் ஹிந்துக்களில் சிலர்களான பஞ்சமர்களுக்குக் கோவில்களில் பிரவேசிக்க உரிமை கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவது நமது கடமையென்று தோன்றவில்லையா?

ப. மு. :—சாஸ்திராசாரங்களை நம்பி அனுஷ்டிப்பதால் தான் எனக்கும், உமக்கும், எல்லோருக்கும் க்ஷேமம் என்று பன்முறை சொல்லியும் இன்னும் அவ்விஷயத்தில் சந்தேகம் தீரவில்லையா? ஸ்வதர்மத்திற்கு விரோதமாயுள்ள எந்த நாகரீகமும், செல்வாக்கும், ராஜ்ய சுகங்களும் விவேகிகளால் தள்ளத் தகுந்தவைகளே.

நாட்டின் அடிமைப்பிணி, தீண்டாதாரைக் கோவில்களுள் நுழைப்பதால் அகன்று விடுமா? தன் கண்ணைமூடினால் உலகமே அஸ்தமிக்கும் பக்ஷத்தில் இதுவும் நடக்கும். தீண்டாமை என்பது மத விஷயம். இந்தியாவின் அடிமைப்பிணி என்பது தேசீயவிஷயம். உண்மையாகத் தர்மத் தியாகத்தால் ராஜ்யம் கிடைத்தாலும், அந்த ராஜ்யம் தள்ளத் தகுந்தது என்று சொல்லுமிடத்து, ஒருவிதமானப் பிரயோஜனமுமின்றித் தர்மத்தியாகம் செய்யச் சொல்வது அறிவின்மையாலேயே. பஞ்சமர்கள் கோவிலில் நுழைவதால் அவர்களுக்கு ஏதாவது லாபம் உண்டா என்றால், லாபம் மட்டும் இல்லாததுடன் அவர்களுக்கு அனர்த்தமும் ஏற்படுவது மின்றி, கோவில்களும் மற்ற ஹிந்துக்களுக்கு உபயோகப்படாமல் வீணாகின்றன. பஞ்சமர்கள் கேட்பது வயிற்றுக்கு ஆகாரமா, அல்லது மோக்ஷத்திற்கு மார்க்கமா? இவ்விரண்டில் எதுவாயிருந்தாலும் சரி, அவர்களுக்குக் கோவிலைத் திறப்பதால் ஒன்றும் லாபமில்லை. நஷ்டமும் ஏற்

படுகின்றது. அவர்களுக்கு மட்டுமில்லாமல் ஹிந்துக்களுக்கும் உலகத்திற்கும் பெருத்த நஷ்டம். இதுவரையிலும் எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களில், ஹிந்துக்கள் ஒருவிதத் தீண்டாமைக் கிளர்ச்சியில்லாமல் இருந்தும், இப்போதுப் புதிதாக அதைப்புகுத்துவது ஏதோ சில கிளர்ச்சிக்காரர்களின் துர்நோக்கமே. எக்காலத்திலும் எந்த மகாத்மாக்களினாலும் இம்மாதிரிக் கிளர்ச்சி ஏற்படுத்தப்படவில்லையென்பதைக் கவனிக்கவும். நவீனநாகரீகப் பேயின் கீழ் அடிமைப்பட்ட நமக்கு அந்நாகரீகப் பேய் தூண்டும் கார்யமே இது. அப் பேயை ஓட்டினாலல்லாது நமக்குச் சுகமில்லை. அப்பேயை ஓட்டுவதற்குச் சக்தியற்று அப் பேயின்கீழ் வசப்பட்டு அதன் சத்துருவாயிருக்கும் ஹிந்து மததர்மங்களை ஒழிக்க ஏற்பாடு செய்வது கலியின் கோலமே. விவேகி இதை உணர்ந்து, ஸன்மார்க்காதி சேவையாகிற கத்தியால், நவீன நாகரீகப் பேயைக் குத்தி வீழ்த்தித் தன்னுடைய ஆத்ம ஸ்வராஜ்யத்தை அடைய வேண்டும்.

இப்போது ஹிந்துக்களில் சிலர், பஞ்சமர்களுக்குக் கோவில்களைத் திறப்பதால் தேச ஒற்றுமை ஏற்படுகிறதென்று சொல்லுவது மனோராஜ்யமே. நாளைக்கு ஹிந்து முகம்மதியர்கள் ஒற்றுமையில்லாவிடில், தேசமுன்னேற்றம் ஏற்படாது என்ற காரணத்தால், ஹிந்துக்கள் எல்லோரும் முகம்மதியர்களாக ஆக நேரிடும். தேசமுன்னேற்றத்தைக் குறித்து எல்லோரும் இன்றே முகம்மதியர்களாக ஆகிவிட நிச்சயம் செய்துகொள்ளுங்கள். பிறகு இதற்கும் ஹிந்துக்கள் உடன்படுவார்களா? உடன்படாவிடில் தேச முன்னேற்றத்தை அவர்கள் புறக்கணித்ததாக ஆகுமா? அல்லது தேசமுனனேற்றத்திற்காக தங்கள் மதத்தை விட்

டுக்கொடுப்பது ஹிந்துக்களின் அழகா? தங்களுடைய தர்மங்களைக் காப்பதற்கு முன்னோர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி, எல்லாவற்றையும் தியாகம் செய்த பூமி இவ்விந்தியா. அதிலுதித்த நாமும் மதத்தில் பற்றுதலற்று நம்பெரியோர்களுக்குத் துரோகம் செய்ததால்தான் இவ் வடிமைப்பிணிக்கு ஆளாயிருக்கின்றோம். இவ்வடிமைப் பிணிக்குக் காரணம் நம் பெரியோர்களின் சாபமே. ஆதலால் இம்முக்கிய காரணத்தை யறிந்து நம் முன்னோர்களான மஹரிஷிகளின் கருணைக்கு எப்போது பாத்திர பூதர் களாக ஆகின்றோமோ அன்றல்லவா நம் அடிமைப்பிணி ஒழியும்! அந்த நாளே நமது ஸ்வராஜ்ய தினம்.

ரா:—நீர் அதிரகசியமான விஷயங்களை எல்லாம் அன்புடன் மூடனான எனக்குத் தெளிவாக அருளினீர். அரும்பெரிய என் சந்தேகங்களை யெல்லாம் சுருதி, யுக்தி அனுபவம் எல்லாம் கலந்து இனிய பக்ஷபாதமற்ற வார்த் தைகளால் ஒழித்தீர்.

இன்றே என் நவீன நாகரிக மோகம் ஒழிந்து உண்மை யான மத அறிவு ஏற்பட்டு நான் புனிதனானேன். தேச ஒற்றுமை, சமூக ஒற்றுமை, மத ஒற்றுமை, குடும்ப ஒற்றுமை எல்லாவற்றிற்கும் காரணம், மத அறிவேதான். வீரச் சுதந் திர இந்தியர்களாய் நாம் ஆகவேண்டுமானல், ஹிந்துக்கள் தங்கள் ஜாதித் துவேஷத்தை ஒழித்து மத சாஸ்திரங்களைப் பூரணமாகக் கற்று அதன்படி ஆச்ரயிப்பது அவசியமானது. ஆதலால் இப்பொழுது சீர்திருத்தக்காரர்களும் மதத்தை துறந்த ஜனங்களும் கிளர்ச்சி செய்யும் ஆலயப்பிரவேசம் முதலிய நம் மதத்தை அடியோடு ஒழிக்கக்கூடிய சீர்திருத் தங்களைத் தடுப்பதுடன், ஒவ்வொரு ஹிந்துவும் தன் தர்மங்களை அறிந்து செவ்வனே அனுஷ்டிக்க, ஹிந்து மதப்

பிசாரம் தீவிரமாகச் செய்யவேண்டியதும் கடமையாகும். பயிர்களுக்குக் களைப்பிடுங்குவதுபோல நம் மதாசரணை களில் உள்ளூர்ந்திருக்கும் சில அவைதிகமான துராசாரங் களையும் ஒழிக்க வேண்டும். பண்டிதர்கள் ஆங்காங்கு சென்று, மதத் தத்துவங்களை புகட்டக்கூடிய சுயநலமற்ற அரிய பெரிய உபன்யாசங்களை ஜனசமூகத்தின் முன் னேற்றத்தைக் கோரி, பொதுமக்களிடையே செய்து, அவர் களுக்கு மதப்பற்றை ஊட்டவேண்டும். 'வீரக்ஷத்திரியர்கள் இல்லாததால் நம்மதம் இப்பொழுது இங்நிலையிலிருக்கிறது.

ப. மு. :—இந்த ஆலய விஷயத்தைப் பற்றி உங்கள் நிமித்தமாக எனக்குச் சொல்லும்படியான பாக்யம் கிடைத் தது. இதுவும் பரமனின் அனுக்கிரகமே. ஜீவராசிகளிடம் எல்லாம் அன்புடன் நடப்பதே பரமனின் கருணைக்குக் காரணம். நான் இதுகாறும் ஜாதி பேதங்களைப் பற்றியும் பஞ்சமர்களைப்பற்றியும் ஆங்காங்கு விஸ்தரித்து உமக்குச் சொன்னதின் மூலம், அவர்களிடம் எனக்குத் துவேஷ மிருப்பதாக ஆகமாட்டாது. குடும்பத்தில், தாய் தந்தை ஸஹோதரர்கள், மனைவிமக்கள் முதலியவர்களிடம், அன்னி யோன்யம் பேதபுத்தியுடன் அவரவர்களுக்குத் தகுந்த மரி யாதைகளை அவரவர்களுக்குப் பேதமாகக் காட்டி நடந்து வந்தாலும், அவர்கள் எல்லோரிடமும் "நாம் ஒரு குடும்பத் தைச் சேர்ந்தவர்கள்" என்ற ஒரு விச்வாஸமும், பிரியமும் கட்டாயமிருப்பது போலவே, இவ்வுலக வாழ்க்கையிலும் ஹிந்து ஸமூகத்தில் ஜாதிகளால் ஏற்பட்ட பேத வ்யவ காரங்கள் பல இருந்தாலும், அவைகட்கிடையே "நாம் எல்லோரும் ஹிந்துக்கள், நாம் எல்லோரும் ஒரே மதஸ் தர்கள்" என்ற அன்னியோன்யப் பிரீதி பாவமும் விச்வாச மும் கட்டாயமிருக்கின்றன. ஹரிஜனங்களுக்குக் கல்வி

அபிவிருத்தி செய்து, சுகாதார முறைகளில் அவர்களை நன்கு காப்பாற்றி, மதப்பற்றை அவர்களுக்கு ஊட்டி, அவர்களுடைய ஜீவனத்திற்கும் சௌகர்யங்களைச் செய்து, அவர்களுக்கு வாழ்க்கையில் உத்ஸாகத்தை ஊட்டி, அவர்களிடம் அன்புடனும், ஆதரவுடனும் நடப்பதே ஹிந்துக்களின் கடமையாகும். அன்பே சிவம்.

ரா :—எனது பாக்கியமே இன்று என்னை உங்களிடம் அனுப்பியது. நீங்கள் செய்த இந்த உபகாரத்திற்கு என்ன கைமாறு செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

ப. மு. :—மத விஷயங்களில் உமக்குள்ள ஊக்கத்தைக் கண்டு என் உள்ளம் பூரிக்கிறது. நம்மக்கள் பணத்தையே பிரதானமாகக் கோரி, அதை அடையவே இரவும் பகலும் முயற்சி செய்கிறார்கள். அப்படிச் சம்பாதிக்கப்பட்ட பணமும் தர்மங்களில் செலவுசெய்யப்படாவிடில், இகத்திலேயே பணமுள்ளவர்களுக்கு அநேக கஷ்டங்களும் ரோகங்களும் ஏற்படுவதை தினமும் நாம் காணுகிறோம். பணத்தால் மட்டும் பூர்ண ஸௌக்கியம் மனிதனுக்குக் கிடையாது.

विषयेन्द्रियसंयोगात् यत्तदग्रे अमृतोपमम् ।
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ॥

"சிற்றின்ப போகங்களால் ஏற்படும் ஸுகம் ஆரம்பத்தில் ஆனந்தமாகத் தோன்றினாலும், முடிவில் அதுவே விஷம்போல் பரிணமித்து, போகிக்கு அனர்த்தத்தை உண்டு பண்ணுகிறது" என்று கீதையில் பகவான் சொல்கிறார்.

விஷயங்களின் மேல் தோற்றங்களில் மயங்காமல் உள்ளூர்ந்து அவைகளைப் பரிக்ஷித்துப் பார்க்கிறவர்களுக்கு, அவைகள் துச்சம், என்ற புத்தி ஏற்படுகிறது. அவர்கள் மேலும் உண்மையான ஸுகத்திற்குக் காரணம் எது, என்று ஊக்கத்துடன் தேடும்போது, மஹான்களால் அனுபவிக்கப்பட்ட மதசாஸ்திரங்களைச் சரணமடைகிறார்கள். நல்ல ரூபமுள்ள காத்ரம், மனைவி, மக்கள், உலகெல்லாம் பரவின கீர்த்தி, ராஜ்ய சம்பத்துக்கள் எல்லாம் இருந்தும் நித்யானந்தம் கிட்டுகிறதில்லை.

न नाकपृष्टं नच सार्वभौमं न पारमेष्ट्यं न रसाधिपत्यम् ।
न योगसिद्धीः अपुनर्भवं वा वाञ्छन्ति यत्पादरजः प्रपन्नाः ॥

(ஸ்ரீமத் பாகவதம்)

ஸ்வர்க்கலோகம், ஸார்வ பௌமம், பிரும்மப்பட்டம், ரஸவித்தை, அஷ்டமகாசித்திகள், பிறக்காமலிருக்கும் தன்மை, இவைகளையும் மகான்கள் விரும்பவில்லை. ஏன்? இவைகளைக் காட்டிலும் பெரிய லாபம் ஒன்று அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. “ஸாமான்யம் விசேஷத்தில் அடங்கியது” என்ற நியமத்தால், மேல்சொன்ன சிறிய லாபங்கள் பெரிய லாபத்தில் அடங்கியவைகளே. இந்த நியாயத்தை அனுசரித்தே விவேகிகள் பகவானிடத்தில் பதிந்த மனம் படைத்தவர்களாய், நித்தியானந்தமான அப்பரமனைத் தங்கள் ஹிருதயத்தில் ஏற்றி அனுபவிப்பதே மிகப் பெரிய லாபமாகக் கருதி, அநித்யமான ஸ்வர்காதி விஷயபோகங்களி லீடுபடுகிறதில்லை. இப்பகவத் பக்தியால் ஏற்படும் ஆனந்தமே பெரிய லாபமானதால் அதை அடைந்தவர்களுக்கு மூன்று லோக ஆதிபத்யமும் விரும்பத்தக்கதல்ல.

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।

यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥

(கீதை)

சரீரபுத்ரகளத்திர மித்திர தனுதிகளின் நஷ்டங்களே துக்கங்களுக்குக் காரணம். பெரிய நஷ்டம் என்பது, லாபத்தைக் கொடுக்கக்கூடிய பெரிய சொத்தைஇழப்பதேயாகும். நம்முடைய மிகப்பிரியமான பெரியசொத்து நம்முடைய ஆத்மாவே. அந்த ஆத்மாதான் எங்கும் நிறைந்த பகவான் வாஸுதேவன். அந்த ஆத்மாவான பகவானை இழப்பதால்தான் பெரிய துக்கம் ஏற்படுகிறது. அவரை இழக்காமலிருப்பதால் ஸுகம் ஏற்படுகிறது. "அந்த ஆத்ம லாபத்தைக் காட்டிலும் மிகுந்த லாபமே கிடையாது. அதை அடைந்த பிறகு எல்லாம் அடையப்பட்டதாக ஆகிறபடியால், அதை யடைந்தவன் மற்ற எதையும் அடையவேண்டும் என்று கருதமாட்டான். அந்த லாபத்தில் தீவிரமாக நிற்கும் ஸ்திதபிரஞ்ஞனை எப்பேர்ப்பட்டப் பெரிய துக்கமும் அசைக்க முடியாது" என்று கீதாசார்யர் சொல்கிறார். ஆத்மலாபத்தை அடைவது என்றால், ஆத்மாவின் யதார்த்த ஸ்வரூபத்தை யறிந்து தன்னிஷ்டமாக இருப்பது தான். ஸர்வவ்யாபியான ஆத்மா தன்னிடத்திலிருந்தாலும், அதை உண்மையாக அறியாதவர்கள், ஆத்மலாபத்தை அடையாதவர்களேயாவர். இருட்டை விலக்கப் பிரகாசத்தைத் தவிர வேறு ஸாதன மில்லாததுபோல், ஸர்வ துக்கங்களும் விலகுவதற்கு ஆத்மாவாகிய பகவான் ஸ்ரீ வாஸுதேவனிடத்தில் மனது தீவிரமாகப் பதிந்து, அவரது யதார்த்த ஸ்வரூபத்தை அறிவதைத் தவிற வேறு ஸாதனமில்லை.

இப்பேரறிவைப் பெறுவதுதான் நம்முடைய நோக்கம். இதை அடைய ஸாதனங்களே மதசாஸ்திர ஆசரணைகள். தற்காலத்தில் உள்ள மக்கள், சிற்றின்பங்களையே பேரின்பங்களாகவும், அவைகளை அடைந்தவர்களே ஸுக ஜீவிகள் என்றும் நாகரீக முள்ளவர்கள் என்றும், மற்றவர்கள் நாகரீகமற்ற மூடர்கள் என்றும் கருதுகிறார்கள். மகோதர வ்வியாதியால் தொந்தி பெருத்தவன், தன் வியாதியால்தான் தொந்தி பெருக்கிறதென்று அறியாமல், தனக்குப் பணத்தொந்தி போட்டிருப்பதாகச் சந்தோஷத்துடன் 'இதுதான் நாகரீக உலகப்போக்கு என்று கருதி' அவ்வியாதியை ஒழிக்க வழி தேடாவிடில், அது எப்படி அவனை அனர்த்தத்தில் முடிவில் தள்ளிவிடுமோ, அதுபோலவே, மேல் தோற்றத்தை மட்டும் கவனித்து உண்மையைத் தீர விசாரிக்காத நவீன நாகரீக மோகத்தி லீடுபட்ட மக்களின் கதியுமாகும் என்பதில் ஐயமுண்டோ? பேரின்பத்திற்குக் காரணமான மதாசரணைகளில் வாஸனையற்று, தேசீய, பொருளாதார, சுகாதார விஷயங்களி லீடுபட்டு அவைகளின் முன்னேற்றமும் ஜனங்களின் அடிமைப் பிணியும் ஸத்யம், சாந்தம், அஹிம்ஸை என்ற மூன்று அஸ்த்ரப் பிரயோகங்களால் கிடைத்து விடுமென்றுப் பொதுமக்களிடையே, பத்திரிகைகள் மூலமும், கூட்டங்களில் சொற்பொழிவுகள் மூலமும் தேசாபிமானிகள் வற்புறுத்துகிறார்கள். இச்சாதனங்களையே, தேசீய விஷயங்களிலும் ராஜீய முறைகளிலும் தலைமை வகிக்கும் நிபுணர்கள் எல்லோரும் ஆமோதிப்பதால், பொதுமக்களும் அவைகளை ஏற்கிறார்கள். இச்சாதனங்கள் நமக்குப் புதியவைகளல்ல. இவைகளையே நம் மத சாஸ்திரங்களும் கூறுகின்றன. இவைகளை அடைய, நம் தேசாபிமானிகள் கடைபிடிக்கும் மார்க்கங்களில்தான் அபிப்பிராயபேதங்கள் ஏற்படுகின்றன. மனோ

வாக்காயங்களாலும், ஸாத்வீகமான ஸத்யம் சாந்தம் அஹிம்ஸை இம்மூன்றையும் அடைய, நம்மத சாஸ்திரங்களே உண்மையான மார்க்கங்களைப் புகட்டுகின்றன என்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. அம்மார்க்கங்களுக்கு விரோதமாகச் செல்லுகிறவர்கள், ஸத்யம் சாந்தம் அஹிம்ஸை இவைகளை அடையவே தாங்கள் செல்வதாகச் சொன்னாலும், மேல் தோற்றத்தில் அவர்கள் அவைகளைக் கிட்டினவர்கள் போல்தோன்றினாலும், உண்மையாக அவர்கள் அவைகளிலிருந்து மேலும் விலகித்தானிருக்கிறார்கள் என்பது விவேகிகள் அறிந்த விஷயம். இவ்விஷயத்தை நன்கு ஆராய்ந்தால், பலஹீனத்தை ஒழிக்க வைத்தியன் சொன்ன ரத்த புஷ்டி மருந்தைச் சேவியாது, விஷத்தை அருந்தி பலஹீனத்தை ஒழிக்க முயல்வது போலவே தற்காலத்தில் நடக்கும் காரியங்களு மிருக்கின்றன. ஹிந்து ஸமூகத்தில் மதப்பற்றும், மதஅறிவும், மதஆசாரணையும் பூர்ணமாக இருந்தாலல்லாது, ஸத்யம், சாந்தம், அஹிம்ஸை இவைகள் கிட்டாது. இவைகளில்லையேல் தேச ஒற்றுமையில்லை. பின் அடிமைப்பிணி எவ்விதம் விலகும்?

ஒற்றுமை யென்பது வஸ்துவிலில்லை. உலகமோ விசித்திரமாயும் பேதமாயும் கடவுளால் படைக்கப் பட்டிருப்பதை யாருமறிவார்கள். அப்பேதங்களின் நடுவில் ஒற்றுமை வேண்டுமென்றால்,ஒருவஸ்துவை மற்றொரு வஸ்துவின் மேல் வைப்பதாலோ, சேர்ப்பதாலோ, நுழைப்பதாலோ, எல்லாம் ஒன்று என்று வாயால் சொல்லுவதாலோ ஒற்றுமைச் சித்தியாது. சில வஸ்துக்கள் ஒன்றோடு ஒன்று சேரக்கூடும். சில சேர்ந்தால் ஒன்றை ஒன்று விழுங்கிவிடும். சில சேரவே முடியாது. இப்படிப்பட்ட உலகில், ஸ்தூல சரீரத்தால் ஒற்றுமை ஏற்படமுடியும் என்று

கருதுவது விவேக மின்மையால்தான். பின் ஒற்றுமை யால்தான் ஆனந்தம் என்று மகான்கள் சொல்வதால், அவ் வொற்றுமை எத்தன்மையானது என்று விசாரிக்கவேண் டும். ஸ்தூல சரீரத்தால் ஒற்றுமை சொல்வது பிரத்யக்ஷத் திற்கு விருத்தமானதால் அது பொருத்தமல்ல. பின் மனதே, பேத வ்யவகாரங்களுக்கு முக்கியக் காரணமானதால், அம்மனதைப் பக்குவப்படுத்துவதே ஒற்றுமைக்குக் காரண மாகும். அம்மனதால் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டு மென்றதால், அவ்வொற்றுமையும் மனோ நிஷ்டம்தான், வஸ்துவிலில்லை என்றும் சொல்லவேண்டும். மனதைப் பக்கு வப்படுத்தி அதில் கிளம்பும் துவேஷ பாவத்தை ஒழிக்கச் செய்வதால், அவ்வொற்றுமை ஏற்படுகிறது. மதமென்பது மனோ நிஷ்டமென்று முன்சொன்னது போல், அம்மதா சரணைகளே மனதைப் பக்குவப்படுத்தி மனோபாவத்தை சாந்தமாகச் செய்யுமாதலால், அம்மதாசரணைகளே ஒற்று மைக்கு முக்கியக் காரணம் என்று சொல்வது மிகை யாகாது.

भावाद्वैतं सदा कुर्यात् क्रियाद्वैतं न कर्हिचित् ।

“மனோ பாவத்தால் தான் ஒற்றுமையை உண்டு பண்ணவேண்டுமே யல்லாது, க்ரியாம்சத்தில் ஒற்றுமையை உண்டுபண்ண முடியாது” என்ற பாஷ்யக்காரரது மொழி யையும் இவ்விடத்தில் கவனித்தல் நலம்.

विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाकेच, पण्डिताः समदर्शिनः ॥

“கல்வியும் வினயமும் நிறைந்த பிராம்மணன், பசு, யானை, நாய், சண்டாளன் முதலிய எல்லாவித பேதசரீரங்

களிலும் பிரம்மவித்துக்கள் சமமான பிரும்மத்தை மனதால் பார்க்கிறார்கள்" என்று கீதை சொல்கிறது.

இவ்வுலக வாழ்க்கையிலும், மனதைக் கடவுள் பக்தியால் பக்குவப் படுத்துவதால் தான், துவேஷங்களை ஒழிக்க முடியும். அப்படிப் பக்குவமடையாத மனது படைத்தவர்களின் ஒற்றுமை, சொல் மாத்திரமேயாகும். சில அஹிம்ஸாவாதிகள் தேசத்தில் ஒற்றுமை யேற்படவேண்டுமென்று, தங்களிஷ்டப்படி மதத்தில் நம்பிக்கையுள்ள ஹிந்துக்களின் மதக்கோட்பாடுகளை அதிகார ஆதிக்கத்தாலும் அகங்காரத்தாலும் சீர்குலைப்பது அவர்களின் அஹிம்ஸா முறைக்கு ஏற்றதல்ல. இது அசுரர்களின் கார்யமேயாகும்.

ஆதலால், ஸம்ஸாரப் பிணியை ஒழித்து பகவத் பேரின்பத்தில் இரண்டறக் கலக்கவும், நம் அடிமைப் பிணியை ஒழித்து நம் மக்களிடையே ஒற்றுமை நிலவவும், நம் பாரததேசம் ஏழ்மைத்தனம் ஒழிந்து பொன்வளநாடாக ஆகவும், நம்மக்கள் தங்கள் குறுகிய நோக்கங்களையொழித்து அகண்டாகார நோக்கத்தை அடையவும், வைதிக ஹிந்துமத ஆசரணைகளே முக்கிய ஸாதனங்களாகும்.

श्रीविद्यां शिववामभागनिलयां ह्रींकारमन्त्रोज्वलां
श्रीचक्राङ्कितबिन्दुमध्यवसतीं श्रीमत्सभानायिकाम् ।
श्रीमत्षण्मुखविघ्नराजजननीं श्रीमज्जगन्मोहिनीं
मीनाक्षीं प्रणतोऽस्मि सन्ततमहं कारुण्यवारांनिधिम् ॥

मङ्गळं शाश्वतः शंभुः मङ्गळं मीनलोचनः ।
श्रोतॄणां पठतांनित्यं माहात्म्यं मधुरापतेः ॥
शिवं भूयात् शिवं भूयात् शिवं भूयात् शिवाज्ञया ।
नमः सुन्दरनाथाय तस्मै हालास्यवासिने ॥

ओं तत्सत् ॥

---

## OPINION

Sree K. M. Balasubramanya Aiyer has added another bright page of glory to the history of the rich Anti-Temple Entry Literature. A native conversational style adopted by him for bringing out the necessarily conflicting view points of the gentlemen arrayed on oppcsite sides and the persuasive and soothing tone and ringing sincerity which every line is breathing, create an atmosphere of receptivity and sympathetic hearing and consideration which the subject has so far been unable to command in a full measure. That violence tyranny and unpopularity are writ large in red capital letters in the contemporaneous and lamentable un-Hindu campaigns against untouchability and for temple entry by the excluded elasses is amply demonstrated by the obvious fact that they have dragged out of his Dharmic seclusion

even a phlegmatic quiet and unostentatious gentleman of the type and temperament of Sree Balasubramania Aiyer.

The work has come out not one day too soon. Smarting and writhing as the misguided and un-Hindu authors of the universally condemned Temple Entry Acts are already, the blow administered to them and their choristers by this simple unassuming brochure, is making them reel and quiver from head to foot and leaving a deep bruise which ño length of time will be able to heal. The huge slumbering orthodox Hindu Leviathan will not be slow to react. Its proverbial patience is reaching the breaking point. There is no knowing what may not happen when once it is roused into genuine activity. No force on earth can withstand it. The book under review is contributing not a little to the consummation of this purpose. The never-to-be forgotten surreptitious and atrocious temple entries of July and August 1939 will not remain unpunished any longer. The wrong-doers, the abettors and the persons who are looking on with indifference or are winking at the offences, have begun to taste at long last the fruits of their unpardonable blunders, offences and sins. It is not yet too late to mend. Ye powers that be, only restore to the Hindus their barest fundamental elementary birth rights to liberty of conscience, to

liberty of religion and liberty of social observances, and promise non-interference in religious and socio-religious matters and see what follows. The British Nation will once more walk with head erect among the nations of the world as the first naval and military power on Earth, which they have ceased to be ever since it departed from the policy of religious neutrality.

The now dethroned but once mighty Congress will once regain its prestige, popularity and power and rise to the height which the Hindus had made it possible for it to reach and from which it is rapidly falling. The book conveys the terrible warning to all the offenders, however high placed they may be, that otherwise the patient Hindu India will burst out of its shell at no distant date aud the whole map of India will undergo a change which it is the duty of every peace-lover not to precipitate.

Madura,
16th April 1940.

RAO SAHIB. N. NATESA AIYER B.A., B.L.
*Working President,*
ALL-INDIA VARNASHRAMA SWARAJYA SANGHA,
MADURA.

# எம். செல்லையா அண்டு சன்ஸ்

ஐயங்கடை வீதி, தஞ்சாவூர்.

எல்லாவித, கைகடிகாரங்கள், அலாரம் டைம் பீஸ்கள், ஆபீஸ்களுக்கும், வீடுகளுக்கும், தேவையான, அரைமணி ஒருமணி அடிக்கும். சுவற்றில் மாட்டத் தகுந்த பல ரக கடிகாரங்களும் எம்மிடம் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.



எல்லாவித கடிகார ரிப்பேர் வேலைகளும், சுத்தமாக, குறைந்த சார்ஜில், குறித்த வேலையில் செய்து கொடுக்கப்படும்.

# STRONG CHRONO WATCHES

**MOST ACCURATE—STRONGEST—BEST & CHEAPEST**



## ஸ்டாரங் குரோனா கை கெடியாரம்

எல்லா சீதோஷ்ண நிலைமையிலும் சரியான மணி காட்டும்.

3-வருஷம் உத்திரவாதமுள்ளது.

விலைகள் : **RECTANGULAR** ரூ. 40—0—0

**ROUND 10½" SIZE** ரூ. 25—0—0

## S. கிருஷ்ணா அன் கோ.

**திருச்சினாபள்ளி**

# ஜம்மி வெங்கடரமணய்யாவின்

# லிவர்க்யூர்

**ஈரல் குலேக்கட்டி கோளாறுகளுக்கு.**

பொதுவாக ஈரல் பெருக்கம், குடல் வியாதிகளை குணப்படுத்துவது கஷ்டம் எனக் கருதப்படுகிறது. ஜம்மி வெங்கட ரமணய்யா காருவால் கண்டு பிடிக்கப் பட்டு, உபயோகிக்கப்படும் "லிவர்க் யூர்" (*ரிஜிஸ்டர்ட்*) இம்மாதிரி வியாதி களை நிச்சயம் குணப்படுத்தும் என அநேக வைத்தியர்கள் கண்டு திருப்தி யடைந்துள்ளனர்.

*மேல் விவரங்களுக்கு தயவு செய்து கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—*

**ஜம்மி வெங்கடரமணய்யா அண்டு சன்ஸ்**
**லிவர்க்யூர் ஆபீஸ்**
**2 & 8 சாலே தெருவு மைலாப்பூர் மதறுஸ்**

*பிராஞ்சுகள் :*—**கல்கத்தா, திருச்சி, பெங்களூர்.**

# OFFICE EQUIPMENT CO.

2, ARMENIAN STREET, MADRAS, E.

---

DEALERS IN:

Stationery, Stencil Papers and Inks
for all Rotary and Flat Duplicators,
Shorthand, Typewriting
and other Commercial, Books &c.

---

Try "COMMERCIAL" Carbon papers
THEY SATISFY YOU IN EVERY WAY.



# GITA PRESS

## Gorakhpur Publications

| | | Rs. A. P. |
|---|---|---|
| **Gita and Vishnusahasranamam Bold type. Thick Cover** | .... | 0 1 9 |
| **Gita only-very bold type** | ... ... | 0 8 0 |
| **Upanishads with Sankara Bashyam** | ... ... | 0 7 0 to 3 12 0 |

*Available at :—*

**The Indian Industrial Co., Ltd.,**
363, ESPLANADE,
MADRAS.

உத்தரவாதமுள்ள சுத்தமான

## ஸ்ரீ "ஓம்" மார்க்

# குங்குமப்பூ

Registered




Trade Mark

இந்த ஸ்ரீ ஓம் மார்க் குங்குமப்பூ, மதாசாரப்படி மிகவும் சுத்தமும் சிரேஷ்டமுமானது. இதில் ஆக்ஷேபிக்கத்தக்க யாதொரு வஸ்துவும் கலப்பில்லை. தேவாலயங்களிலும் ஔஷதங்களிலும் ஆகாராதிகளிலும் கொஞ்சமும் சந்தேகமில்லாமல் உபயோகிக்கக்கூடியதென்று உத்தரவாதமுள்ளது.

**1 தோலா 5 தோலா அழகான டின்களில் கிடைக்கும்.**

உயர்ந்த காப்பிக்கொட்டை, சுத்தமான காப்பி பவுடர், வாசனைப் பாக்குத்தூள், கஸ்தூரி, பச்சக் கற்பூரம் முதலியன மிகவும் திடமாயும் சரசமாகவும் கிடைக்கும்.

## வல்லபதாஸ் தேஜ்பால்,

**14, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்.**

For wholesome and Healthy Meals, Delicious Pickles and Fragrant Savouries, etc., etc.,

**Drop a small bit of**

Best **A** Mark

# ASAFOETIDA

**And enjoy every Meals a Happy Feast.**




**எவரும் விரும்பும் A மார்க்கு மிஸ்கி**

## பெருங்காயம்

*A மார்க்கு வாங்கினால் ஏமாற்ற முடியாது. 1 பவுண்டு ½ பவுண்டு ¼ பவுண்டு பாக்கிங்குகளிலும் 1 சேர் அழகான ஜெர்மன் டின்களிலும் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.*

**வல்லபதாஸ் தேஜ்பால்**

**14, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்.**

**REPAIRS GUARANTEED FOR 1 YEAR**

**ESTD. 1919** **ESTD. 1919**







# THE RELIABLE HOUSE

**FOR**

## REPAIRING

**WATCHES CLOCKS AND GRAMAPHONES.**

We have great pleasure to announce General Public & our numerous Customers that we undertake Repairs of all kinds of Watches, Clocks, Time pieces & case soldering.

**As usual our Charges are Moderate.**

*Promptness in execution of order is our speciality.*

**We solicit the favour of your Patronage.**

MINOR ADJUSTMENTS AND
INSPECTIONS WILL BE
ATTENDED FREELY

# T. RADHA & CO.,

Opticians, Clock & Watch Repairers and Dealers in
Watches & Clocks, Materials, Tools & Gravers.
Jewellers' & Goldsmiths' Tools, Rubber
Stamp Materials, Gramaphones
Spare parts etc.,

**291, ESPLANADE ROW, MADRAS.**

# B. S. & F. MART

**High Class Stationers & General Merchants**
**Armenian Street, Madras**

---

## Leading House For

Artists materials.
Typewriter & Cyclostyle accessories.
Carbons & Ribbons.
Fountain Pens.
Office Appliances.
Stationery Sundries.

Printing & Binding undertaken. Monthly accounts allowed to approved Offices.

**Service Guaranteed.**



# Popular Styles in Jewelleries & Silverware

For the child, the Budding Blonde, the Blushing Bride or the Sweet–heart, The Lady of the House. Our Jewelleries are graceful and lovely. They are real aids to beauty and at a very reasonable cost.

## M. Singaperumaliah & Co.

**10, Govindappa Naick St., G T. Madras.**





பெருங்காயம் வாங்கும்போது இந்த

**எல். ஜீ.**

மார்க்கைப் பார்த்து வாங்கவும். மோசமடைய மாட்டீர்கள்.

**லால்ஜீகோது அண்டு கம்பெனி**

8, பெருமாள் முதலித் தெரு,

சௌகார்பெட், மதருஸ்.

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

பிராஞ்சு: கும்பகோணம்.

## போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள் !

## வெளுத்ததெல்லாம் பாலல்ல !!

இவ்வூரில் அரிசி மார்க்கெட்டில் பல போலிச் சரக்குகள் போலி ஸீல்களுடன் வந்து விகின்றன. நல்ல சிறந்த, அப்பட்டமான ரிக்காச்சல் போட்ட நெல்லை, எந்த சந்தர்ப் த்தில் வாங்கவேண்டுமோ, அப்படி நெல் உற் பத்தியாகும் இடமாகிய நெல்லூர் டெல்டாவில் வாங்கி, அவைகளைச் சுத்தமாக அரைத்து, நொய், நெல், கல் முதலியவைகள் இல்லாதபடிச் சுத்தம் செய்து, நல்முத்துக்கள்போல் தயார் செய்து, கவர்மெண்டாருடைய பரிசீலனைக்கு அனுப்பி, நல்ல சரக்குகள் என்று அவர்களுடைய (Ag Mark) ஸீலுடன் தருவித்துவைத்து இருக்கிறோம். இத்துடன் ஒவ்வொரு மூட்டைகளிலும்எங்கள் (Pearl Mark) ஸீலையும் பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒருமுறை வாங்குபவர்கள், மறுமுறை இதையே விரும்புவது நிச்சயம்.

கிடைக்குமிடம் :—

**தி ஸௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,**

**31, கிழக்கு மாடவீதி,**

**மைலாப்பூர், மதரூஸ்.**

*Prop* :- சதாசிவ அய்யர்.

# நியூ அமெரிக்கன் வாட்சு கம்பெ

பெரிய கடைவீதி,

திருச்சிராப்பள்ளி



எம்மிடம் ஒமிகா மொ
யன், ஜெனித் முதலிய கெடியா
கள் குறைந்த விலைக்கு உத்
வாதத்துடன் கிடைக்கும். ரெ
யாரிப்பேர்கள் சுமார் 30 வ
அனுபவமுள்ள கைதேர்ந்
வேலைக்காரர்களைக் கொண்டு
குறித்த காலத்தில் உத்தரவாத
துடன் செய்து கொடுக்கப்படும். வெளியூர் ரி
பேர்களை தபால் மூலமாக செய்து அனுப்பப்படும்.

ஆபிஸ்களுக்கும் வீடுகளுக்கும் தேவையான மேஜை நாற்காலி பீரோ முதலிய எல்லாவித மரச் சாமான்களும் குறித்த தவணையில் நல்லவேலைப் பாடு டன், உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு ஸப்ளை செய்யப்படுகின்றன.

## எஸ். ராமசந்திரா அண்டு கம்பனி

**உயர்தர மரவேலை வியாபாரிகள்**

213, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு,

மதராஸ்.

# ONDERFUL ALUE

NEW YEAR MODEL

## CHRONO SPECIAL

Up-to-date
WristWatches
Ar`tocrat in
Time-keeping



மூன்று
வருஷம்
உத்திர
வாதம்

# குரோனா ஸ்பெஷல்

**குறைந்த விலையில் உயர்ந்த ரகங்கள்**
**சரியான மணி காட்டுவதில் நிகரற்றது**

16 ஜுவல்கள் அமைக்கப்பெற்ற லீவர்
) வருஷ உத்திரவாதமுள்ள ரோல்டுகோல்டு
கேஸுடன் கூடிய உயர்தர கைக்கெடிகாரம்

விலை ரூ. 27

## S. கண்ணன் & கோ.,

கடிகார வியாபாரிகள், திருச்சிராப்பள்ளி.

உயர் ரக வைரங்களுக்கு

புகழ்பெற்ற இடம்

# ஸூரஜ்மல்'ஸ்

(வைர வியாபாரிகள்)

**313, எஸ்பிளனேட்,**

**மதராஸ்.**